எம். ஏ. வி. பிக்சர்ஸ்

மாங்கல்யம்

டைரக்ஷன் கே. சோமு

ஸ்டுடியோ: கோவை ஸென்டரல்

MAV PICTURES

BHARAT STUDIO

...தென்னாற்காடு, செங்கற்பட்டு, சித்தூர் ஜில்லாக்களுக்கு: P. ராஜா
...ராட்டு, சென்னை. திருச்சி, தஞ்சாவூர்—ராணி பிலிம்ஸ், திருச்சி.
...ருநெல்வேலி—எவரெஸ்டு பிக்சர்ஸ், மதுரை. மைசூர் ஸ்டேட்—
...ர், திருவாங்கூர், கொச்சி—ராதாகிருஷ்ண பிலிம்ஸ் லிமிடெட்
...ளம், பம்பாய், F. M. S: பலவந்த் சிங் & Co.
M. A. V. பிக்சர்ஸ்–C/o செண்டிரல் ஸ்டுடியோஸ், கோயம்பத்தூர்.

JL
m211, N53K4
N54:2-2
197207

பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில்
PRESIDENT
VEGETABLE
HAIR OIL
GROWS LOVELY HAIR.
CHOICE OF LOVELY WOMEN
RATHOD TRADING CO. MADRAS. I.

35 வருஷங்களாக வளர்ச்சிப் பெற்று
மேன்மையான குணங்களை நிரூபிக்கிறது
இந்தியாவின் முதன்மையாகி மிகவும் உத்தமமானது
krishnaveni Ink
FOR ALL FOUNTAIN PENS
2½ FLUID OZ.
கிருஷ்ணவேணி
இங்க்
எல்லாவித பௌண்டன் பேனக்களுக்கும்
உகந்த வர்ணங்களில் கிடைக்கும்.
2½ அவுன்ஸ் பாட்டில் அணா 8
நேஷனல் பிராடக்ட்ஸ் ஸிண்டிகேட். சென்னை-1.

வினியோகஸ்தர்கள்: சென்னை நகரம்: சுப்பு அண்டு கோ., சென்னை-17; வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, பாண்டிச்சேரி, சித்தூர்: ஆனந்தா பிக்சர்ஸ், வேலூர்; மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி: ராதாகிருஷ்ண பிலிம்ஸ் லிட்., ஆலப்புழை; திருச்சி, புதுக்கோட்டை: வாணி பிலிம்ஸ், திருச்சி; தஞ்சாவூர்: திருச்சி பிக்சர்ஸ், திருச்சி; திருவாங்கூர், கொச்சி, மலபார்: சென்ட்ரல் பிக்சர்ஸ், கோட்டயம், மைசூர்: விஜயா டாக்கீ டிஸ்டிரிபியூட்டர்ஸ், பெங்களூர்.

லோட்டஸ்

கிராஸ் வேர்ட்ஸ்

அளிக்கும் "மிகப் பெரிய"

பம்பர் போட்டி

விவரங்களுக்கு:

லோட்டஸ் கிராஸ் வேர்ட்ஸ்,

பிரபாத் பில்டிங்ஸ் :: சென்னை-1.

ஜூன் மாத
வெளியீடு

ஸ்ரீ சாயி கானாம்ருதா பிக்சர்ஸ்

புது யுகம்

S.A. நடராஜன் • S.V. சுப்பையா
நரசிம்மபாரதி • முத்துகிருஷ்ணன்
M.S. திரௌபதி • கிருஷ்ணகுமாரி • M. சரோஜா

தயாரிப்பு: ஜி. ராமநாதன் டைரக்ஷன்: கோபு, சுந்தர்

கதை, வசனம், பாட்டு: கா. மு. ஷெரீப் • காமிரா: புருஷோத்தமன் • ஸ்டூடியோ: சியாமளா

PSR

உள்ளத்தை வசீகரிக்கும்
ரம்யமான வாசனை!..

நீபா

...ஹேர் ஆயில்....

பூரண திருப்தியும் மனசாந்தியும்..
அளித்து உங்களை மகிழ்விக்கும்

கங்கா ஒர்க்ஸ்

அடையார்... சென்னை-௨௦

பாரிஸ் அழகிகள்

அழகிற் சிறந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை அப்படியே தத்ரூபமாகப் பலவகைப் படுக்கையறைக் கோலத்துடன் காண பிரமிக்க தக்கது.

24 வகை (Bromide) போட்டோ படங்கள் .... ரூ. 7.
36 கொண்ட முழு செட் .... ரூ. 10.

தபாற் செலவு இலவசம்.

ஒவ்வொரு ஆர்டருடன் "பெண் இன்பம்" என்னும் புத்தகம் இனமாக அனுப்பப்படும்.

வீனஸ் டிரேடிங் கம்பனி (U) P.B. No 1693, சென்னை-1.

ஸ்டாக்கிஸ்ட் : R. வேம்பு. 30, வடக்கு வீதி, கொரநாடு, மாயவரம்.

பிராஞ்சு: கோயம்புத்தூர்.

சோர்வில்லாத படிப்புக்கு
சுறுசுறுப்பை அளிப்பது.

ஸ்டூடென்ஸ்

REGD. No. 1515
ஸ்டூடென்ஸ்
STUDENTS
பாக்குதூள்
NUT

பாக்குத்தூள்

P. R. வடிவேலு முதலியார் & சன்.,

28, முல்லா சாயபு தெரு, :: சென்னை-1.

கௌரி சுருட்டுகள்

கௌரி ப்ராடக்ட்ஸ்
19, பிடாரியார் கோவில் சந்து
மதராஸ் . 1.

பொருளடக்கம்

செடி 2 மலர் 2	ஜூன் 1954	ஜய ஹூ வைகாசி மீ

வேறு வழி என்ன? 9

மகிழ்ச்சித் திருநாள்! 11

புதிய பார்வை 13

சூடும் சுவையும் 16

முல்லைக்கு ஒரு சேதி (கவிதை) ... 19

அலை ஓய்ந்தது (தொடர் கதை) ... 20

புயலும் தென்றலும் 31

குற்றமும் தண்டனையும் ... 35

தாதி மகள் (உலக இலக்கியம்) ... 42

அதிசய ஓவியம் 51

பாசம் ... 60

தோல்வி? ... 70

பொது நலமும் சுயவாழ்வும்! ... 75

உமாவில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

"வேகமா ஏறிடு தம்பி...... யாராவது பாத்துட்டா நாம தொலைஞ்சோம்..."

—'உமா' ஜூன்—'54.

வேறு வழி என்ன?

புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் ஒரு வழியாக சமாதி யடைந்து விட்டது. இனிப் பழைய கல்வித் திட்டமே உயிர் பெற்று உலாவும். நம்மைப் பொருத்தவரையில் இந்த நிகழ்ச்சி மிகவும் பரிதாபப்படக் கூடிய ஒன்ருகும்.

புதுக் கல்வித் திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த புது மந்திரி சபையை நாம் கண்டிக்க தயாரில் இல்லை. ஜனநாயக அடிப்படையிலேயே புதிய கல்வித் திட்டம் தோற்கடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது உண்மைதானு என்ற ஆராய்ச்சியிலெல்லாம் இறங்கவும் விரும்பவில்லை.

ஆனல் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல யார் மீதோ இருக்கும் ஆத்திரத்தை மனதில் வைத்துக் கொண்டு பச்சைக் குழந்தைகளின் வாழ்வை சிலர் இருட்டடிப்பு செய்கிருர்களே என்பதை உணரும் போது நம்மால் வேதனையடையாமல் இருக்க முடியவில்லை.

புதிய கல்வித் திட்டத்திற்கு பொது மக்கள் எதிர்ப்பு இருந்ததனல் தான் அது கைவிடப்படுகிறது என்பது கண்துடைப்பு சமாதானம் தான். மதுவிலக்கிற்குக்கூட மக்கள் எதிர்ப்பு இருக்கத்தான் செய்கிறது. மதுவிலக்கு கைவிடப்பட்டதா?

புதிய கல்வித் திட்டத்தில் மர்மமானதோ, சிக்கலானதோ என்ன இருக்கிறதென்றே நமக்குப் தெரியவில்லை. பொதுமக்கள் ஒருபுறம் இருக்கட்டும்; சட்டசபை உறுப்பினர்களிடையேயும் இதற்கு எதிர்ப்பு இருக்கிறது என்பதுதான் வேடிக்கையாகவும் வியப்பாகவும் இருக்கிறது.

ஆரம்பக் கல்விக்காக தமிழக அரசினர் சுமார் 6 கோடி ரூபாய் செலவிடுகின்றனர். இந்தத் தொகையினுல் தமிழகத்திலுள்ள குழந்தைகளில் பாதிப் பேருக்குத்தான் கல்விப் பயிற்சி தர முடிகிறது. மற்ற பாதிப் பகுதிக் குழந்தைகளுக்கும் கல்வி பயிற்சி யளிக்க வேண்டியது அரசாங்கத்தினரின் தலையாய கடமையாகும். இந்தக் கடமையை குறைவற நிறைவேற்ற வேண்டுமாயின் மேற்கொண்டு குறைந்தது 6 கோடி ரூபாய்களாவது வேண்டும். மற்றும் கல்விக்கு ஆதாரமான பள்ளிக் கூடக் கட்டிடங்கள், அதற்கான தளவாட சாமான்கள் போன்றவைகளுக்கும் நிதி தேவை. ஆக சுமார் பத்து அல்லது பன்னிரண்டு கோடி

ரூபாய்களாவது வேண்டும். இந்தத் தொகையை அரசாங்கம் சமாளிக்கத் தவறினல் தமிழகத்தின் எதிர்கால மன்னர்களில் பாதிப் பேர் எழுத்தறிவற்ற தற்குறிகளாகத்தான் விளங்குவர்.

இந்தத் தொகையை உடனடியாக எப்படி ஈடுகட்டுவது? புதுவரிப் போடலாமா? உடனே, காங்கிரஸ் சர்க்கார் வரிமேல் வரி போட்டு மக்களைக் கசக்கிப் பிழிவதாகக் கூக்குரல் எழும்புமே!

இந்தச் சிக்கல்களை முடிவுக்குக் கொண்டு வந்து கூடிய வரை தமிழகக் குழந்தைகள் எல்லோருக்கும் கல்வி யளிப்பதற்காகவே புதிய கல்வித் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு நாளில் மூன்று முறை மூன்று பகுதிகளாகக் குழந்தைகளை பள்ளிக்கு அனுமதிப்பது என்பதுதான் புதிய கல்வித் திட்டத்தின் முக்கிய அம்சம். இதைத் தவிர வேறு பயங்கரமான—புரட்சிகரமான அம்சம் எதுவும் அதில் இல்லை. எதிர் காலத்தில் காந்தீயத் திட்ட அடிப்படையில் கல்வி முறையை மாற்றியமைப்பதற்கு இம்முறை ஆரம்ப முயற்சியாக இருக்கலாம் என்று கூறப்பட்டதே தவிர உடனே எந்தவித பயங்கரமான முறையையும் செயலுக்குக் கொண்டு வந்து விடவில்லை. மூன்று பகுதிகளாக மூன்று முறை பிள்ளைகளை அனுமதிப்பதன் மூலம் அதிகப்படியான குழந்தைகளுக்கு கல்விப் பயிற்சி யளிக்கலாம், என்ற ஒரே நம்பிக்கைதான் இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இது தெளிவான விஷயம்.

ஆனல் புதிய கல்வித் திட்டத்தை இளம் பிள்ளைகள் கழுத்தில் போடப்பட்ட சுருக்குக் கயிருக அனுவசியமாக கற்பனை செய்துக் கொண்டு சீறியெழுந்து சிலர் கூக்குரலிட்டனர். இந்தத் திடீர் புரட்சிவாதிகள் புதிய கல்வித் திட்டத்தை புதை குழிக்கு அனுப்பப் பெருமுயற்சி எடுத்தார்களே தவிர, கல்விப் பயிற்சி பெற முடியாத நிலையிலுள்ள மற்ற பிள்ளைகளுக்கு எப்படிக் கல்வி யளிப்பது என்பதற்கு ஒருவித ஆலோசனையும் கூறவில்லை.

பாதி நாள் பள்ளிக்குச் சென்று பாதி நாள் வீட்டிலிருந்தால் பிள்ளைகள் கெட்டுப் போய்விடுவர் என்று கூச்சல் போடுபவர்கள், பள்ளிக்கே செல்ல முடியாமல் வீட்டிலும், தெருவிலும் உழலும் பரிதாபத்துக்குரிய பாலகர்களின் நிலையை உணர்ந்தார்களா?

புதிய கல்வித் திட்டத்தின் பக்கம் கண்களையே திருப்ப மறுத்து, அதன் தராதரத்தைப் பற்றிக் கருத்தைச் செலுத்த முடியாதென பிடிவாதம் பிடித்து, அதை எப்படியாவது ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்று சிலர் முயற்சியெடுத்தனர். பிற்போக்குக் கும்பல் ஒன்று அதற்கு, தாளம் போட்டது. இறுதியில் இந்த முயற்சி பலித்து விட்டது.

இனி, கல்வி யறிவு பெற முடியாத நிலையிலுள்ள பெரும் பகுதிப் பிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு வழியில் கல்விப் பயிற்சி தந்தாக வேண்டும். புதிய கல்வித் திட்டத்தை வெற்றிகரமாக தோற்கடித்த புத்திசாலிகள் (!) வேறு எந்த வழியில் இந்தப் பிரச்னைக்கு முடிவு காணப் போகிருர்கள் என்பது உடனடியாகத் தெளிவாக வேண்டும். இந்த ஒரு செயலையாவது இன்றுள்ள மந்திரி சபை துரிதமாக செய்து முடிக்க வேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

மகிழ்ச்சித் திருநாள்!

சென்ற மே மாதம் முதல் நாள் 'உமா'வின் வாழ்வில் மட்டுமல்ல தமிழர்களுக்கே ஒரு திருநாள். அன்று 'உமா' தன் முதலாண்டு பூர்த்தியாகி இரண்டாம் ஆண்டில் கால் ஊன்றுகிறாள். ஒரு வருட காலம் 'உமா' அளித்த கலை இன்பத்தை அனுபவித்து மகிழ்ந்த தமிழர்கள் 'உமா'வின் இரண்டாவது ஆண்டு தொடக்கத்தை ஒரு விழா நாளாகக் கருதுவதில் வியப்பில்லையல்லவா.

மே மாதம் முதல் நாளன்று 'உமா'வின் காரியாலயத்தில் 'உமா'வின் இரண்டாவதாண்டுத் தொடக்கம் ஒரு குதூகலமான விழாவாகக் கொண்டாடப்பட்டது. தமிழகத்தின் பிரசித்தி பெற்ற பத்திரிகாசிரியர்களும், எழுத்தாளர்களும், பட உலக பிரபலஸ்தர்களும், தொழில் துறை அதிபர்களும் ஒருங்கே திரண்டிருந்தனர். சுவையான சிற்றுண்டி விருந்துக்குப் பின்னர் குமாரி சரசா பிரார்த்தனைக் கீதம் பாட, கல்கி ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்க விழா துவங்கியது. பத்திரிகைத் தொழிலில் உள்ள சங்கடங்களை விளக்கி 'உமா' ஆசிரியர் ஜி. உமாபதி ஓராண்டு காலமாக விடா முயற்சியுடனும் வெற்றிகரமாகவும் பத்திரிகையை நடத்தியதைப் பாராட்டி எதிர் காலத்தில் 'உமா' வெற்றி நடைபோடும் என்பதில் ஐயமில்லை என வாழ்த்தினர்.

தமிழர் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் ஆசிரியரைப் பாராட்டிப் பேசுகையில் பத்திரிகையைத் துவக்குவதற்கு ஆசிரியர் உமா

விழாவுக்கு வந்திருந்த பெரியோர்களும் 'உமா' நிர்வாகிகளும்: பின் வரிசை: (இடமிருந்து வலம்) சின்ன அண்ணாமலை, 'உமா' ஆசிரியர் ஜி. உமாபதி: முன் வரிசை: 'உமா' நிர்வாகி எம். பி. ஸ்ரீனிவாசன், பிரசண்ட விகடன் ஆசிரியர் நாரண துரைக்கண்ணன், ம. பொ. சிவஞானம், கல்கி ஆசிரியர், 'உமா' நிர்வாக ஆசிரியர் ர. சண்முகம், 'உமா' விளம்பரப் பகுதி நிர்வாகி எம். எஸ். பஞ்சாபகேசன் பி. ஏ. (ஹானர்ஸ்)., தெய்வசிகாமணி.



ஆண்டு விழாவில் சில காட்சிகள் : (1) பிரபல விளம்பர ஸ்தாபனமான கீமர் நிர்வாகி திரு. விஸ்வநாதய்யர், டைரக்டர் ராமண்ணா, (2) ராதாகிருஷ்ணா பிலிம்ஸ் மானேஜர் வரதனும், பட உலகப் பிரமுகர் ஏ. வி. மெய்யப்ப செட்டியாரும், உதவி மேயர் டி. வேணுகோபால் ராவும் விழா மண்டபத்தை நோக்கி விரைகின்றனர். (3) 'உமா'வும் சிற்றுண்டியும் ரொம்ப 'பிரமாதம்' என்கிறார் சின்ன அண்ணாமலை கல்கி ஆசிரியரிடம் (4) சூலமங்கலம் சகோதரிகளுக்கு கல்கி ஆசிரியர் அன்பளிப்பு தருகிறார். (5) ம. பொ. சி, 'உமா'வைப் பாராட்ட, வந்திருந்தவர்கள் மகிழ்ச்சியுடன் ரசிக்கின்றனர்.

பதி தம்மை அனுமதி கேட்டபோது தாம் அரை மனதுடனேயே சம்மதமளித்ததாகவும், 'உமா'வின் தற்கால வளர்ச்சியைக் கண்டு தாம் வியப்படைவதாகவும் கூறி 'உமா'வுக்கு நல்லாசி கூறினார்.

திரு. சின்ன அண்ணாமலை 'உமா'வின் அழகிய அமைப்பையும் முத்துப் போன்ற அச்சையும், அதன் வளர்ச்சியையும் பாராட்டிப் பேசி, கூடிய சீக்கிரம் தமிழ்நாட்டின் தலைசிறந்த பத்திரிகையாகும் என்றார்.

பின்னர் இசைச் செல்வியர் சூலமங்கலம் சகோதரிகளின் இன்னிசை விருந்து நடைபெற்றது. பிறகு கல்கி ஆசிரியர் 'உமா'வின் சார்பில் இசை விருந்தளித்த சூலமங்கலம் சகோதரிகளுக்கு ஒரு வெள்ளிக்கோப்பையைப் பரிசளித்தார். முடிவில் ஆசிரியர் ஜி. உமாபதி விழாவில் கலந்து கொண்டவர்களையும், தலைமை தாங்கியும் சொற்பொழிவாற்றியும் சிறப்பித்த பெரியோர்களையும், பத்திரிகையின் முன்னேற்றத்திற்கு விளம்பரம் தந்து உதவியவர்களையும், 'உமா' வாசகர்களையும், இசை விருந்தளித்த சூலமங்கலம் சகோதரிகளையும் பாராட்டிப் பேசினார்.

புதிய பார்வை

2. ஆதிசிவன் பெற்றுவிட்டான்...?

ம. பொ. சிவஞானம்

மக்களை நிரந்தரமாக ஒன்று படுத்தி வைக்கும் சக்தி மொழிக்குத்தான் உண்டு. அதனாற்றான், சாதி, சமய பற்றுகளை எதிர்ப்போர் கூட, மொழிப்பற்றை மட்டும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். ''மொழி பற்று'' என்றால், தாய் மொழிப் பற்று என்றே கொள்ள வேண்டும். தாய்மொழியைமறந்து பிற மொழி மீது பற்று கொள்வது பேதைமை. இல்லந்துறந்து இறைவனைப் பாடுவதையே பணியாகக் கொண்ட ஆழ்வார்கள் - நாயன்மார்கள்கூட தாய்மொழியான தமிழில் அழுத்தமான பற்று வைத்திருந்தனர்.

சாதி, சமய வேற்றுமைகளையெல்லாம் புரட்சித் தீயில் போட்டு பொசுக்கிய சோவியத் ருஷ்யாகூட பிரதேச மொழிகளை போற்றி வளர்க்கின்றது.

ஆம், தாய் மொழிப் பற்று அற்றவரிடம் தெய்வப் பற்று, தேசப் பற்று இருப்பதாக நம்ப முடியாது. ஆகவே, தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் தமது தாய்மொழியான தமிழில் பற்று கொள்ள வேண்டும். தமிழ் நாட்டின் எல்லைக்குட்பட்டு நிகழும் தமது அன்றாட வாழ்க்கை அலுவல்கள் அனைத்திலும் தமிழ் ஒன்றையே பயன்படுத்த வேண்டும்.

தமிழ் மொழியின் தோற்றம், வளர்ச்சி குறித்து யாரும் இதுவரை முறையாகத் தொகுத்து எழுதவில்லை. அது அவ்வளவு எளிதான காரியமும் அல்ல. ஏனெனில், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றியது நமது கன்னித் தமிழ்.

தமிழின் பிறப்பு பற்றியும், வளர்ச்சி பற்றியும் இங்குமங்குமாக சிற்சில செய்திகள் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கின்றன. அவை வளர்ச்சி விதியை ஒட்டிய நிகழ்ச்சிகளாக அல்லாமல் தற்பெருமையை ஒட்டிய கற்பனைச் செய்திகளாகவே காணப்படுகின்றன. பரஞ்சோதி முனிவர், கச்சியப்பசிவாசாரியார், கவியரசர் பாரதியார் போன்ற புலவர்கள் தமிழை சிவ பெருமான் பெற்றுத்தந்ததாக தத்தம் நூற்களில் குறிப்பிடுகின்றனர். இது ஆராய்ச்சி முடிவுக்கு மாறான அற்புதக் கற்பனை!

பழங்கால ஆரியப்புலவர்கள் வட மொழி எனப்படும் சமஸ்கிருதம் கடவுளிட மிருந்து பிறந்ததாக, கடவுளால் பேசப்படும் மொழியாகக் கூறினர். பிற மொழிகள் எல்லாவற்றிலும் சமஸ்கிருதமே உயர்ந்த மொழி என்றும் சாதித்தனர்.

சமஸ்கிருதத்துக்கு இணையான பெருமையை தமிழுக்கும் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணினர் புராண காலத் தமிழ்ப் புலவர்கள். ஆகவே, சமஸ்கிருதத்தைப் போலவே தமிழும் கடவுளிடமிருந்து பிறந்தது; மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குக் கடவுளே தலைமைதாங்கி தமிழ் வளர்த்தார்; என்றெல்லாம் செந்தமிழ் மொழிக்கு கற்பனையாகச் சிறப்பு கூறினர். ''இரு மொழிக்கும் கண்ணுதலார் முதற் குரவர்'' என்கிறார் காஞ்சிப்புராண ஆசிரியரான கச்சியப்ப சிவாசாரியார். மேலும் அவர்,

வடமொழியைப் பாணினிக்கு
வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை
உலகமெலாம் தொழுதேத்தும்
குட முனிக்கு வலியுறுத்தார்
கொல்லேற்றுப் பாகர்....

என்றும் கூறுகின்றூர்.

இந்த நூற்றுண்டில் வாழ்ந்த கவியரசர் பாரதியாரும் தமிழின் பிறப்பைக் கூறுமிடத்து, ''ஆதி சிவன் பெற்றுவிட்டான்...'' என்றே கூறுகின்றூர். தமது தாய் மொழியின் சிறப்பைப் பேசுமிடத்து, ''உயர் ஆரியத்துக்கு நிகர்'' என்கின்றூர்.

திருவிளையாடற் புராணம் எழுதிய பரஞ்சோதி முனிவர்,

கண்ணுதற் பெருங்கடவுளும்
கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த
பசுந்தமிழ்........

என்ற வரிகளில், கடவுளே மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்து தமிழை வளர்த்ததாக தமது தாய் மொழிக்கு சிறப்பு கூறுகின்றூர்.

பரஞ்சோதி முனிவரும் கச்சியப்ப சிவாச்சாரியாரும் வாழ்ந்த காலத்தில், வட மொழி மீது வெறுப்பு கொள்ளும் வழக்கம் இல்லை. சித்தாந்தம்—வேதாந்தம் போன்ற சமய சாத்திரங்களை, ராமாயணம்—பாரதம் போன்ற மாபெரும் காப்பியங்களை வழங்கியது வட மொழியே. ஆதலால், புராண காலப் புலவர்கள் வட மொழியைத் தாழ்த்திக் கூருமல் தமிழோடு சம நிலையில் வைத்து இரு மொழிக்கும் சிறப்பு கூறினர்.

ஆனல், பதினெட்டு,பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் தமிழகத்தில் வடமொழியை வெறுக்கும் மனப்பான்மை வலுத்தது. அதன் விளைவாக தமிழ்மொழியை உயர்த்திப் பேச வேண்டுமானல் வட மொழியைத் தாழ்த்தியாக வேண்டும் என்ற எண்ணம் பெரும் புலவர்களிடையேயும் வளர்ந்தது.

'மனேன்மணீயம்' என்ற நாடகம் எழுதிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, தமிழுக்கு வாழ்த்து கூறுமிடத்து,

ஆரியம்போல் உலகவழக்கு
அழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே

என்று பாடினர்.

ஆனல், இக்கால மொழி நூல் வல்லார், மொழிகளெல்லாம் மக்களிடமிருந்தே பிறந்தன; மக்களாலேயே வளர்க்கப்படுகின்றன என்ற உண்மைகளைத் தக்க ஆதாரங்களோடு நிலைநாட்டி இருக்கின்றனர். ஆகவே மொழியின் பிறப்பு வளர்ப்பு பற்றிய பழங்காலக் கற்பனைகளை வைத்துக்கொண்டு தமிழரோ வடமொழிப்பற்றுளரோ தற்பெருமை பேசுவது அறியாமை. கலைகளிலும் காவியங்களிலும் கற்பனைகள் மலிந்திருப்பது இயற்கை. ஆனல், அந்தக் கற்பனைகளையே உண்மையெனக் கொண்டு தமிழரிடையே மொழிச் சண்டையை வளர்ப்பது மூடத்தனம். ராமலிங்க வள்ளலார்,

கலையுரைத்த கற்பனையே
நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம்
மண்மூடிப் போக....

என்று பாடினர். ஆனல் நாமோ கலைகளை மண்ணில் மூடிவிட்டு கற்பனைகளை நம்பி சண்டையிட்டுக் கொண்டிருக்கிறேம்.

''எல்லாம் அவன் செயல்'' என்ற கடவுள் உணர்வு கொண்டு, மொழிகளும் இறைவனல் படைக்கப்பட்டவை என்று கற்பனையாக சிறப்புக் கூறலாம். அப்படித்தான் புராண காலப் பெரியோர்களும் கூறியிருப்பார்கள். தமிழாகட்டும், வட மொழியாகட்டும்; குறிப்பிட்ட ஒரு மொழியை மட்டும் கடவுளிடமிருந்து பிறந்த மொழியாக, கடவுள் பேசும் மொழியாக கற்பனை செய்வதும், அதை மக்களை நம்ப வைப்பதும் முறையன்று. இச்செயல் மொழி நூல் ஆராய்ச்சியாளர் கண்ட முடிவுகட்கு முரணான தாகும்.

சைவம், தமிழகத்தின் தனிப் பெரும் சமயம். ஆகவே ஆதியில் சைவத்தைத் துணை கொண்டே தமிழ்மொழி பெரிதும் வளர்ச்சியடைந்தது. அதனாலேயே தமிழ் சைவ சமயத்தாருக்கு மட்டும் உரிமையுள்ள மொழி என்று கூறி விட முடியுமா? உண்மைச் சைவர் எவரும் அப்படிக் கூறமாட்டார். பிற்காலத்தில் தோன்றிய வைணவ, சமண, பௌத்த மதங்களும் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டிருக்கின்றன. சமீப நூற்றாண்டுகளில் தமிழகத்தில் நிலைத்துவிட்ட இஸ்லாம், கிருத்தவ சமயத்தினரும் தமிழ் வளர்ச்சிக்கு அரிய தொண்டாற்றியிருக்கின்றனர். ஏனெனில், தமிழ் நாட்டைப் பொருத்தவரை, இனத்தால் தமிழராக இருந்த மக்கள்தான் சமணம், பௌத்தம், இஸ்லாம், கிருத்துவம் ஆகிய புறச் சமயங்களில் புகுந்தார்கள். அவர்கள் மதம் மாறியதனாலேயே இனம் மாறி விடாது. பழங்காலத்திலும் சரி, இப்போதும் சரி; தமிழ் நாட்டின் நிரந்தரக் குடியாகிவிட்ட எவரும் எந்த மதத்தையும் தழுவலாம்; அதன் காரணமாக அவர் மதமொழி மாறிவிடலாம். ஆனால், மதம் மாறிய பிறகும் அவர் இனத்தால் தமிழர்தான்; அவருடைய இனமொழி தமிழ்தான்.

முன்னொரு காலத்தில் தமிழகமெங்கணும் சமண, பௌத்த சமயங்கள் பரவியிருந்தன. அச் சமயங்களைப் பின்பற்றினோர் தமிழ் அல்லாத பாலி மொழி போன்ற பிற மொழிகளை சமய மொழிகளாகவும் கொண்டிருந்தனர். இருந்தும், தமிழ் நாட்டுச் சமணரும், பௌத்தரும் தமிழ் இனத்தவராகவே கருதப்பட்டனர். சமண முனிவர் எனப்படும் இளங்கோவடிகளும், பௌத்த மதத்தவராக எண்ணப்படும் கூலவாணிகன் சாத்தனாரும் தமிழரல்லர் என்று அக்காலத்தில் யாரும் சொன்னதில்லை. அவ்விருவரும் தமிழுக்குச் செய்துள்ள அரும்பணிகளை அக்கால மக்களேயன்றி, இக்காலத் தமிழர்களும் போற்றிப் புகழுகின்றனர்.

வட மொழி பேச்சு வழக்கிலிருந்து மறைந்தது உண்மைதான். ஆனால், இறந்து ஒழிந்ததென்று எண்ணுவது தவறு. அம்மொழி இன்றுங்கூட இலக்கிய மொழியாக உலகனைத்தும் வியாபித்திருக்கிறது.

வேறு பல மொழிகளுக்கு இல்லாத சிறப்புக்கள் தமிழுக்கும் வடமொழிக்கும் உண்டு. ஆகவே, அந்த இரு மொழியையும் சம நிலையில் வைத்துப் பெருமை படுத்திப் பேசிய பெரியோர்கள் உண்மையையே கூறியிருக்கின்றார்கள்.

வட மொழி பல கிளை மொழிகளின் தாய் மொழியாக விளங்குகிறது. அதுபோலவே தமிழும், தெலுங்கு-கன்னடம்-மலையாளம்-துளு போன்ற சேய்களைப் பெற்றெடுத்து அவற்றின் தாயாக விளங்குகிறது.

வட மொழி. ராமாயணம்-பாரதம் போன்ற முதற் காப்பியங்களை உலகுக்கு ஈந்து பெருமை கொண்டது. தமிழ் மொழியும் சிலப்பதிகாரம், மணிமேகலை உள்ளிட்ட ஐம்பெரும் காப்பியங்களை அவனிக்கீந்து தனது சிறப்பை வெளிப்படுத்தியது.

அதுமட்டுமல்ல, வட மொழியில் "வால்மீகி ராமாயணம் என்றால், தமிழில் கம்ப ராமாயணம் உண்டு; வட மொழியில் 'வியாச பாரதம்' என்றால், தமிழில் 'வில்லி பாரதம்' உண்டு. அவை, முதல் நூலைவிட வழி நூலே சிறப்புடைத்து என்ற பெருமை பெற்றவை. ஒரு வகையில் மட்டும் வட மொழியினும் தமிழ் சிறப்பு பெற்றதென்பர் மொழி வல்லுநர்கள். அதாவது, வட மொழி பல சேய் மொழிகளை ஈன்று பேச்சு வழக்கற்றுவிட்டது. ஆனால் தமிழ் சேய் மொழிகளை ஈன்ற பின்னரும் பேச்சு மொழியாகவே, முதுமை எய்தாத கன்னி மொழியாகவே இன்னமும் வாழ்கின்றது. இது தமிழுக்குள்ள தனிச் சிறப்புதான்.

(தொடரும்)

> இந்தப் பகுதி
> திரு. நையாண்டி
> பாரதியின்
> சொந்தக்
> கருத்துக்களே.
> —ஆசிரியர்.

எனது நண்பர் ஒருவர் ஒரு சங்கத்தின் காரியதரிசி. அந்தச் சங்கம் எங்கே இருக்கிறது, என்ன செய்கிறது என்பதைத் துப்பறிந்து தான் கண்டுபிடிக்க வேண்டும். என்றாலும், எப்பவாவது 'திடீர் நிகழ்ச்சி'க்கு ஏற்பாடு செய்து விடுவார் காரியதரிசி. பெரிய மனிதர் எவராவது வருவார்; என்னவாவது பேசிவிட்டுப் போவார். மறுநாள் பத்திரிகைகளில் செய்தி வரும். அதில் எது இருந்தாலும் சரி, இல்லாமல் போனாலும் சரி, 'சங்கத்தின் காரியதரிசியாகிய இன்னார் வந்தனோபசாரம் கூறினார்' என்கிற வாக்கியம் கண்டிப்பாக இருந்தே தீரும்.

இதனால் எனது நண்பருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. சேவை செய்து விட்ட பெருமையில் பிறக்கும் மகிழ்ச்சி ஒன்று. பத்திரிகையில் பெயர் அச்சாகி விட்ட கர்வத்தில் ஏற்படுகிற மகிழ்ச்சி மற்றொன்று. இவ்விதம் மகிழ்ச்சி இறக்கை கட்டிக் கொண்டு திரியும் பண்புடைய நண்பர் அன்றொரு நாள் அழுகுணிச் சித்தர் வாரிசு மாதிரி என் முன்னால் வந்து நின்றதும் எனக்கே ஆச்சர்யமாகப் போய்விட்டது. 'என்னய்யா விஷயம்?' என்று கேட்டு வைத்தேன். அவர் தனது அனுபவத்தைச் சொன்னார், மிகவும் சுவையாகத்தான் இருந்தது.

சங்கத்தின் விசேஷக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்வதற்காக' பேராசிரியர் ஒருவரைப் பார்க்கப் போனாராம் நண்பர். விஷயத்தைப் பொறுமையோடு கேட்டிருந்த பேராசிரியர் பேசாமல் சுவரைச் சுட்டிக்காட்டினாராம். அங்கு, அச்சடிக்கப்பட்ட அறிவிப்பு ஒன்று தொங்கிக் கிடந்ததாம். 'என்னை யாரும் பொதுப் பணிகளுக்கு அழைக்க வேண்டாம். என் நேரம் வீணாவதை நான் விரும்பவில்லை' என்ற வாக்கியங்கள் 'மூஞ்சியிலறைவது போல் முழித்து'க் கொண்டிருந்தனவாம்.

நண்பர் அழுது வழிவது போல மேலும் முனங்கினார். "வேறு பல அறிவிப்புகளும் அங்கே தொங்கின. 'பிரசங்கம் செய்வதும் பிரசங்கத்தைக் கேட்பதும் எனக்குப் பிடிக்காத விஷயங்கள்; இரண்டும் காலக் கொலைக்கே வகை செய்கின்றன.'—இப்படி ஒன்று இருந்தது. அடுத்தாற் போல், 'நீங்கள் வந்த வேலை முடிந்து விட்டதா? வணக்கம். காலம் விலை மதிப்பற்றது, போய் வருக!' என்ற அறிவிப்பும் இருந்தது. அதற்குமேலும் மனுஷன் அங்கே உட்கார்ந்தா இருப்பான்?" என்று ஆத்திரமாக முடித்தார் அவர்.

"அந்தப் பேராசிரியர் பெரிய புத்திசாலியும் கூட. இது மாதிரி ஐடியாஸ் சாதாரண ஆசாமிகளுக்கு எல்லாம் வந்து விடுமா? எண்ணம் எழுந்தாலும் செயலிலே காட்டும் துணிச்சல் தான் வருமா?" என்று பாராட்டினேன்.

நண்பருக்கு எரிச்சல்தான் பொங்கி வந்தது. அதைத் தணிப்பதற்காக நான் முஸ்ஸோலினியைப் பற்றிய செய்தியைச் சொல்ல வேண்டியது அவசியமாயிற்று.

* * *

இத்தாலிய சர்வாதிகாரியாக வாழ்ந்த பெனிட்டோ முஸ்ஸோலினி—அவன் தான், 'பாஸிஸ்ட் ஜடாமுனி' — 'பாப்பொலோ டி இத்தாலியா' எனும் பத்திரிகையின் ஆசிரியனுக இருந்தான். ஆசிரியரைப் பார்க்க வருவதாகச் சொல்லி அநேகர் வந்து காலத்தைக் கரியாக்கியதை அவனுல் சகிக்க முடியவில்லை. ஆகவே, ஆசிரியர் அறையின் முகப்பிலே 'பளிச்' செனப் படும்படியாக ஒரு அறிவிப்பைத் தீட்டி வைத்தான்.

''என்னைப் பார்க்க வருகிறவர்கள் என்னை கௌரவிக்கிருர்கள். என்னைப் பார்க்க வராதவர்களே என்னை மகிழ்விக்கிருர்கள்.''

இதையும் மீறி உள்ளே வந்து விடுகிறவர்களை 'வாருங்கள், உட்காருங்கள்' என்று அவன் உபசரிப்பதில்லை. அவன் அருகில் அதிகப்படியான நாற்காலிஒன்றே ஒன்றுதான் உண்டு. அதன் மேல் கூட அவன் பெரிய பெரிய புத்தகங்களை அடுக்கி வைத்திருப்பது வழக்கம்.

'முக்கிய விஷயமாகப் பேச வந்தவர்' என்ருல், அவர் அந்த நாற்காலி மீதுள்ள புத்தகங்களை 'தொபுக்கடீர்' என்று கீழே தள்ளுவார். அந்நாற்காலியில் உட்காருகிறவர் அங்கேயே ரொம்ப நேரம் இருந்து பேச ஆசைப்படுவது அரிது தான். ஏனெனில், அது ஒட்டை உடைசலான பாடாவதி நாற்காலி; சதா 'நாட்டியம் பயிலும்' பழக்கம் கூட அதனிடம் உண்டு. பார்க்க வந்து 'போர் அடிக்க'த் துணிகிறவர்களை விரட்டி அடிக்க 'ஜடாமுனி' சரியான காரியம் தான் செய்திருந்தான்.

* * *

எனது நண்பர் வேறொரு பிரமுகரைப் பார்க்கப் போனுராம். 'சினிமா டைரக்டர் ப்ளஸ் புலம்பல் கவிராயர் ப்ளஸ் என்னென்னவோ' ஆன அந்தப் பெரிய மனிதர் ஒரு அட்டையை எடுத்து நீட்டினுராம். அதில் ''என்னிடம் எவ்விதமான உதவியையும் எதிர்பார்க்க வேண்டாம். எதிர்பாராதவர்கள் ஏமாறுவதில்லை'' என்று எழுதியிருந்ததாம்.

''மற்றுமொரு புத்திசாலியா? பேஷ்!'' என்று வியந்தேன் நான். ஆனுல், நண்பருக்கோ எரிச்சலின் சூடு அதிகரித்துக் கொண்டே போயிற்று.

அவர் சங்கத்தின் நிதி விஷயமாக ஒரு கலைஞரைக் காணப் போனுராம். கலைஞர் விஷயத்தைக் கேள்விப்பட்டதும் ஒரு நோட்டில் தீட்டி வைத்திருந்த 'சொந்த பட்ஜட்' ஒன்றை எடுத்துக் காட்டினுராம்,

வருஷ வருமானம் இவ்வளவு. செலவு: குடும்பச் செலவு—தனிப்பட்ட சொந்த வகைக்கு—பெட்ரோல் செலவு—பரோபகாரச் செலவு—அது இது என்று ரொம்பக் கணக்காக எழுதப்பட்டிருந்ததாம். தானம், தருமம், நண்பர்களுக்கு என்று பிரித்துப் பிரித்து மாதம் இவ்வளவு என ஒதுக்கப்பட்ட விவரமும் இருந்ததாம். ''சரி. இனிமேல் என்னை என்ன செய்யச் சொல்றீங்க? வரவும் செலவும் சரியாக இருக்கிறது பாருங்களேன். உபரி வருமானம் இல்லை. உங்களுக்கு உதவி புரிந்தால், துண்டு விழும் பட்ஜட்டை நான் எப்படி ஸார் சமாளிக்க முடியும்?'' என்று கேட்டாராம் அவர்.

''பிரமாதம்! மற்றுமொரு மூளை பிரதர் அவர். மந்திரி சபையில் எப்பவாவது நிதி மந்திரியாக வருவதற்கு வேண்டிய தகுதி அவரிடம் இருக்கிறது'' என்று சொன்னேன்.

எனது நண்பர் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

''ஐயா, நண்பரே; எனக்கே மனசுக்குக் கஷ்டமாகத் தான் இருக்கிறது. நான் இன்னும் என்னுடைய அற்புதமான செக் புத்தகத்தைத் தயார் பண்ணவில்லையே

என்று வருத்தப்படுகிறேன். அது இருந்தால், இப்பொழுது உமக்கு ஒரு செக் கிழித்துக் கொடுத்திருப்பேன்'' என்றேன்.

''என்ன செக் அது? எந்த பாங்குக்கு?''

''வாழ்க்கை வங்கி'' என்றேன். ('பாங்க்' என்பதைச் சிலர் 'பாங்கி' என்றும், சிலர் 'வாங்கி' எனவும், சிலர் 'வங்கி' என்றும் எழுதிக் கொண்டிருந்தார்கள் முன்பு) ''கடவுள் தான் அதன் டைரக்டர். ''அனுதாபங்கள்' என்பதே செக் தொகை. என் இதயபூர்வமான அனுதாபம் என்றெல்லாம் வாய் திறந்து சொல்லிக் கொண்டிருக்க வேண்டாமே. உடனே ஒரு செக் கொடுத்து விடலாமே!'' என்று விளக்கினேன்.

இந்த 'ஐடியாவை' ரசிக்கும் நிலைமையில் நண்பர் இருந்தாரில்லை.

* * *

'பெரிய மனிதர்' ஆக வளர்வதற்கு இது மாதிரி ஏதாவது காரியங்கள் செய்து கொண்டிருக்க வேண்டியது அவசியம் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. எனக்கும் தாராளமாகப் பணம் கிடைத்தால், நானும் ஒரு 'வேலை' செய்யலாம் என்று எண்ணியிருக்கிறேன். ஒரு 'அறிவிப்பு' அச்சடிக்க வேண்டும்.

நீங்கள் என்னோடு பேச விரும்புகிறீர்களா? தாராளமாகப் பேசுங்கள். ஆனால், தயவு செய்து, இந்தக் கேள்விகளைக் கேட்க வேண்டாம்: 1. என்ன, சென்னையிலேயேதான் இருக்கிறீரா? 2. எழுத்தாளனாக இருந்து கொண்டு சென்னையில் உம்மால் எப்படி வாழ முடிகிறது? 3. பத்திரிகைகளுக்கு எழுதுவதன் மூலம் உமக்கு எவ்வளவு பணம் கிடைக்கிறது? 4. எங்காவது ஆபீஸிலே ஏதாவது வேலை பார்க்கப்படாது? 5. ஏன் ரொம்ப மெலிந்து போயிருக்கிறீர்? [அ] ஏதாவது வியாதியா? [ஆ] மருந்து சாப்பிடப்படாது? [இ] ஹோட்டலில் ஏன் சாப்பிடனும்? [ஈ] சமைத்துச் சாப்பிடக் கூடாதோ? 6. நீர் ஏன் கல்யாணம் செய்துக் கொள்ளவில்லை? [அ] அந்த எண்ணம் உமக்கு உண்டா? [ஆ] இல்லையானல், ஏன் இல்லை? இம்மாதிரியான சொந்த விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

பேசத் தொடங்குகிறவரிடம் முன் எச்சரிக்கையாக இதை நீட்டிவிடலாம். வீணத்தனமான கேள்விகளுக்கு அநாவசியமாக பதில் சொல்லவேண்டிய தொல்லை குறையும் அல்லவா?... செய்ய வேண்டியது தான்!

<u>மேலட்டைச் சித்திரம்:</u>

மலரும் முகம்

'மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம்' என்பது வாழ்க்கையின் முதுகெலும்பான ஒரு ரகஸியம். வாழ்க்கையில் இன்பம் பெறுவதற்கு பொன்னும், பொருளும், மாட மாளிகையும் தேவையில்லை. மலர்ந்த முகம் மட்டுமே போதும் என்றனர் முன்னோர்கள். இன்று மட்டும் என்ன என்றும் அதுதான் வாழும் வழி. இதோ இரண்டு மலர்ந்த முகங்கள்! கையிலிருக்கும் மலர் கூட சிரிக்கிறது பாருங்கள்........

முல்லைக்கு ஒரு சேதி

(குயிலன்)

★

கொல்லையிலே படர்ந்தோடித் திரியும் பச்சைக்
கொடியினிலே நின்றபடி, இதழைக் காட்டி
எல்லையிலா ஆவலுடன் மலர்ந்தே தென்றல்
இன்காற்றில் ஊஞ்சலிலே ஆடுகின்றாய் !
முல்லையெனும் பேர்படைத்த அழகுப்பெண்ணே !
மொய்த்துவரும் வண்டதனின் இசையைக்கேட்டு
இல்லையெனச் சொல்லாமல் இன்பம் துய்ப்பாய் !
இத்தருணம் சென்றுவிடில் மீளாதென்றும்.

நேற்றிரவில் இக்கொடியில் மலர்ந்த பூக்கள்
நிலவினிலே மணம்வீசிப் பனிநீராடி
வீற்றிருந்த சேதியெலாம் கனவாய்ப் போச்சு
விடிந்தவுடன் தரையினிலே விழுந்துவாடிக்
காற்றினிலே உருண்டோடி; வெயிலில் பட்டுக்
காய்ந்துசரு காயிற்று. எனவே காதல்
சாற்றிவரும் வண்டுக்கு மறுக்காதே நீ.
சாவுவரும்; அதற்குமுனம் இன்பம்துய்ப்பாய்

இன்றைக்குப் பளபளக்கும் வெண்பட்டாக
இருக்கின்ற உன்னிதழ்கள் நாளைக்காலை
கன்றிப்போய் வெம்பிவிடும்; வாசம் போகும்
கண்ணெடுத்துப் பார்ப்பதற்கு யாரும் வாரார்
நன்றிகெட்ட உலகத்தின் செயலைக்கண்டு
நைந்துருகி உடலெல்லாம் கருகிச்சாவாய் !
என்றாலும், பருவத்தை வீணாக்காதே
இப்பொழுது கணமேனும் இன்பம்துய்ப்பாய் !

அலை ஓய்ந்தது

ர. சண்முகம்

3

காலைத் தூக்கத்தின் இனிமையில் கட்டுண்டு கிடந்த ஆரோக்கியத்தை கலகல வென்று இனிய சிரிப்பொலி தட்டி எழுப்பியது.

"மாமா........"

"சீ........ மாமா இல்லேடி..... அண்ணா"

"உனக்கு ரொம்ப தெரியுமாக்கும். மாமா தான்..."

"அக்காவைக் கேட்டுப் பார்ப்போமா? அண்ணா தான்...."

"மாமாவையே எழுப்பிக் கேட்டிடுவோமே....! மாமா....மாமா...."

இந்த வாக்குவாதம் ஆரோக்கியத்தின் காதுகளில் தெளிவாக விழுந்தது. கதவுக்கு வெளியே நிற்பது குழந்தைகளான மீனாவும், தங்கமும் என்பதை ஒரு நொடியில் புரிந்துக் கொண்டான்.

இந்தக் காலை நேர விவாதம் அவனுக்குப் புதிதல்ல. ஒவ்வொரு நாளும் கீழே சாவித்திரி தொட்டியில் தண்ணீர் நிரப்பிவிட்டு அந்தச் செய்தியை ஆரோக்கியத்திற்கு அறிவிக்க மீனாவையும் தங்கத்தையும் அனுப்புவாள்.

குழந்தைகளைக் கண்டால் சிடுசிடுத்து வெறுத்து ஒதுக்கும் அவ்வளவு கொடிய சுபாவம் படைத்தவனல்ல என்றாலும், சிலரைப் போல ஒரேயடியாக குழந்தைகளோடு குழந்தையாக மாறி, அவர்களோடு கலந்து அளவளாவும் பண்பு அவனுக்கு இல்லை. கலகலப்பான குடும்பத்தின் நடுவே வளராது தன்னந்தனியாக அவன் வாழ்வு அமைந்துவிட்டதுதான் அந்த குணத்திற்குக் காரணம்.

ஆரோக்கியத்துடன் எப்படியாவது பழகிவிட வேண்டும் என்பது அந்தக் குழந்தையுள்ளங்களின் ஆவல். ஏதாவது சந்தேகங்களை அவர்களுக்குள்ளாகவே எழுப்பிக் கொண்டு நிவர்த்திக்காக ஆரோக்கியத்திடம் வருவார்கள். ஆனால் அவன் அவர்கள் விஷயத்தில் அக்


ரஸாக்

களை காட்டாமல் மழுப்பி அனுப்பி விடுவான். ஆரோக்கியத்தை ''மாமா'' என்று அழைப்பதா ''அண்ணு'' என்று கூப்பிடுவதா என்பது அவர்களிடையே உள்ள திராத சந்தேகம். அக்காவைக் கேட்டால் சந்தேகம் நிவர்த்தியாகிவிடும் என்பது அவர்களுக்கே புரியும். சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டால் ஆரோக்கியத்திடம் எந்த காரணத்தை வைத்துக் கொண்டு நெருங்குவது?

கதவுக்கு வெளியே அந்தக் குழந்தைகளின் விவாதக் கூச்சல் கொஞ்சம் பலமாகவே இருந்தது. இடையிடையே ''மாமா''........ ''அண்ணு'' என்று குழப்பியடித்துக் கதவைத் தட்டவும் அவர்கள் மறக்கவில்லை.

வாரிச்சுருட்டி எழுந்து உட்கார்ந்த ஆரோக்கியத்திற்கு முந்தின இரவு நடந்த விசித்திர நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன. இரவு நடந்த தகராறுக்குப் பிறகு இனி சாவித்திரியின் நடவடிக்கைகளில் நிச்சயம் மாறுதல் ஏதாவது இருக்கும் என்று அவன் எதிர்பார்த்தான். அனேகமாக குளிப்பதற்கு தண்ணீர் இறைத்து வைத்திருக்கமாட்டாள் என்று நம்பினுன். அத்துடன் இரவு தான் வந்த பிறகு கீழே என்ன நடந்தது என்று அறிந்து கொள்ளவும் அவனுக்கு ஆவலாக இருந்தது.

கைகளை உயர நீட்டி சோம்பல் முறித்த வண்ணம் திரும்பிப் பார்த்தான். தரையில் ஒரு போர்வையை விரித்துப் போட்டு ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அந்த விசித்திர மனிதன் மீது அவன் பார்வை விழுந்ததும் உணர்ச்சியுடன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அந்த மனிதனை உற்றுக் கவனித்தான்.

கழுத்து வரையில் நன்ருகப் போர்த்திக் கொண்டு இருந்தபடியால் முகம் மட்டுமே தெரிந்தது. தாடியும் மீசையும் வளர்ந்து முகத்தின் உண்மைத் தோற்றத்தை அடியோடு மறைத்துவிட்டிருந்தது. ஆனல் இரவு நிலா வெளிச்சத்தில் சந்தித்துப் பார்த்த போது இருந்த ஒரு பயங்கரத் தோற்றம் முகத்தில் இப்பொழுது இல்லை. கண்களின் இமைகள் மூடியிருந்தாலும் அதில் ஒருவித கருணை ததும்பி நிற்பதுபோலத் தோன்றியது. திடீரென அந்த மனிதன் பற்களை நறநறவென கடித்தவாறு என்னென்னவோ முணகியவண்ணம் புரண்டு குப்புறப் படுத்துக்கொண்டான். ஏதாவது பயங்கரக் கனவு கண்டிருப்பானு?

முதல் நாள் இரவு அவனை சந்தித்த அந்த நினைவுகள் ஆரோக்கியத்தின் மனதில் நிரம்பின.

பாறையின் மீது நின்றவண்ணம் ஆடாமல் அசையாமல் ஏரியின் நீர்ப் பரப்பையே பார்த்துக் கொண்டு நின்ற அந்த மனிதனின் பின்னுல் வெகு சமீபத்தில் போய் நின்றுபோதுகூட அவன் திரும்பவில்லை.

அவன் என்ன செய்கிருன் என்று யூகிக்க முடியவில்லை. தவம் செய்கிருனு? அல்லது மனோரதத்தில் ஏறி கனவு வானத்தில் தவழ்ந்து விளையாடுகிருனு? அல்லது ஏரித் தண்ணீரில் குதித்து உயிரைவிடத் தீர்மானித்துவிட்டானு!

''நண்பரே....'' என்று மெல்லிய குரலில் அழைத்தான் ஆரோக்கியம். ''நண்பரே'' என்ற அடைமொழியை அவன் ஏன் உபயோகித்தான் என்பது அவனுக்கே புரியவில்லை.

திடுக்கிட்டவன்போல அந்த மனிதன் திரும்பி ஆரோக்கியத்தைப் பார்த்தான். ஒரு விநாடி அப்படி இப்படி திரும்பாமல் அவனை நோக்கியே பார்வையை செலுத்தினுன். பிறகு ''நீர் திருவரங்கநாதரின் ஆளா?...'' என்று கேட்டான்.

''திருவரங்கநாதரின் ஆட்கள் தான் நண்பரே என்று அழைப்பார்கள் போலும்....''

மீண்டும் ஆரோக்கியத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்த அந்த மனிதன் "நான் நண்பன் தானு? விரோதியாக ஏன் இருக்கக் கூடாது? ஒருவேளை கொள்ளைக்காரன் – கொலைகாரனுகக்கூட இருக்கலாமல்லவா" என்றான்.

"கொள்ளைக்காரர்கள் நள்ளிரவில் வானத்துச் சந்திரனைப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருக்கமாட்டார்கள்...." என்று விளையாட்டாகக் கூறினன். ஆரோக்கியம்.

அந்த மனிதன் வாய்விட்டுச் சிரித்துவிட்டு "உமது யூகம் தவருனது. இப்பொழுதைய எனது நிலை புயலுக்குப்பின் ஏற்பட்டிருக்கும் அமைதி. சற்று முன் ஒரு மனிதனைக் கொலை செய்வதற்காக ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தேன். அங்கே பார்த்தால் இரண்டு விரோதிகள் ஒரே இடத்தில் இருந்தனர். முதலில் யாரைக் கொல்வது என்று குழப்பமாகப் போய்விட்டது. அதனல் சூழ்நிலை தவறிவிட்டது. என் மனதிலிருந்த வேகம் குறைந்துவிட்டது. அதற்குள் வேலைக்காரர்கள் என்னை நோக்கிப் படையெடுத்துவிட்டனர். அவர்களிடம் தகராறு செய்து சக்தியை வீணுக்கிக் கொள்ளக் கூடாது என்று இங்கே ஓடி வந்துவிட்டேன்...." என்றான்.

ஆரோக்கியத்துக்கு ஏதோ ஒரு துப்பறியும் நாவலின் ஒரு பக்கத்தை அந்த மனிதன் படித்துக் காண்பிப்பதுபோலிருந்தது. அந்த விபரங்களை அப்படியே நம்பவும் இயலவில்லை. நம்பாமலிருக்கவும் முடியவில்லை.

ஒருவேளை இவன் தலைமறைவாக இருக்கும் அரசியல் பயங்கரவாதிகளில் ஒருவனுக இருப்பானே! பணக்காரர்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற அவர்கள் தத்துவப்படி திருவரங்கநாதரைக் கொலை செய்ய முயன்று தோல்வியுற்றுத் திரும்பிவிட்டனே?...." இப்படி அவன், மனதில் எண்ணங்கள் தோன்றவே,

"நீங்கள் பொதுவுடைமைவாதியா?...." என்று கேட்டான் ஆரோக்கியம்.

பொதுவுடைமையையும் கொலைபாதகச் செயலையும் அண்ணன் தம்பிகளைப் போலக் கருதி ஆரோக்கியம் பேசிய மாதிரி அந்த மனிதனுக்கு வேடிக்கையாக இருந்ததோ என்னவோ! சிரித்துவிட்டு "சாதாரண கொலைகாரன் தான். அதாவது எதிர்காலக் கொலைகாரன்...." என்றான்.

அவன் பேச்சுக்களிலிருந்து அவன் அப்படி ஒன்றும் பயங்கரமானவனல்ல என்று தெளிவாகத் தெரிந்தது. அவன், ஒன்று பெரிய வேதாந்தியாக இருக்க வேண்டும்; அல்லது பைத்தியக்காரனுக இருக்க வேண்டும். இந்த நினைவு தான் ஆரோக்கியத்தின் மனதில் இறுதியாக நிலைத்தது.

"அப்போ....என் அறைக்குப் போகலாமா?...." என்று கேட்டான் ஆரோக்கியம்.

"உன்னுடைய அறைக்கா?" என்று வியப்போடு கேட்டான் அந்த மனிதன்.

"ஆமாம்..." என்று நிதானமாக பதிலளித்தான் ஆரோக்கியம்.

"என்னை நம்ப உன்னுல் முடிகிறதா?...." என்று ஆச்சரியம் பொங்கத் திருப்பிக் கேட்டான் அந்த மனிதன்.

ஆரோக்கியம் புன்முறுவலுடன் "யாரையும் நம்புவது என் சுபாவம். ஏனென்றுல் என்னிடம் இருக்கும் விலையுயர்ந்த பொருள் இருதயம் ஒன்றுதான். அதை யாரும் தூக்கிக் கொண்டுபோய் விட மாட்டார்கள்...." இதைச் சொல்லிக்கொண்டு வந்த ஆரோக்கியம் திடீரென்று பேச்சை நிறுத்தினன். தன் வார்த்தைகள் அழகாக இருந்தாலும் அவை வெறும் அபத்தம் என்பது அவனுக்கு நினைவுக்கு வந்துவிட்டது. ஏனென்றுல் எதைப் பிறர் தூக்கிக் கொண்டு போய்விட மாட்டார்கள்

பிரசங்கி: எல்லாம் பொதுவுடமை! எல்லோருக்கும் சொந்தம்.

குடைக்காரர்: என் மேல் துண்டை கொடுத்துட்டு அப்புறம் பேசய்யா!

என்று அவன் கூறினானே அந்த இருதயத்தை சாவித்திரி சுலபமாக பறித்துக் கொண்டுவிட்டாளே!

எதிரில் நின்ற அந்த மனிதன் திடீரென நெருங்கி வந்து ஆரோக்கியத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு ''தம்பி....என்ன காரணத்தாலோ என் மனம் உன்னோடு ஐக்கியமாகிவிட்டது. நீ யார் என்று புரியாவிட்டாலும் உன்னை மனப்பூர்வமாக நம்ப வேண்டும் போல் தோன்றுகிறது. நீ இஷ்டப்பட்டால் உன்னுடன் கொஞ்சநாள் தங்கியிருக்கவிரும்புகிறேன். எனக்கு அடைக்கலம் தர முடியுமா?'' என்று உணர்ச்சி பொங்கும் குரலில் கேட்டான்.

ஆரோக்கியம் ஒன்றும் பேசாமல் அந்த மனிதனின் கரங்களை உரிமையுடன் பற்றிக் கொண்டு அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அறைக்கு வந்த பிறகு அவனுக்கு உணவு ஏற்பாடுகள் ஏதாவது செய்ய ஆரோக்கியம் முயற்சித்தபோது அந்த மனிதன் அதை மறுத்துவிட்டு கீழே வெறுந் தரையில் படுத்து ஒரு போர்வையை மட்டும் கேட்டு வாங்கிப் போர்த்திக்கொண்டு வெகு சீக்கிரத்தில் உறங்கிவிட்டான்.

அந்த விசித்திர மனிதனைப் பார்த்தபடியே நீண்டநேரம் சிந்தித்துக் கொண்டிருந்த ஆரோக்கியம் எப்படியோ உறங்கி விட்டான். காலையில் குழந்தைகளின் அந்த விவாத ஓசைதான் அவனை தட்டி எழுப்பியது.

வெளியே தங்கம், மீனா இருவரின் விவாதம் வளர்ந்து ஒருவர்க்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளும் நிலையை அடைந்து விடவே ஆரோக்கியம் சிந்தனை கலைந்து தாமதிக்காமல் எழுந்து கதவைத் திறந்துக்கொண்டு வெளியே வந்தான்.

''மாமா வந்துட்டார்.... அண்ணா வந்துட்டார்....'' என்று குழந்தைகள் குதித்துக் கூத்தாடினர். அவர்களை திக்பிரமையடைய வைக்கும் செயல் ஒன்றைச் செய்தான் ஆரோக்கியம்.

வழக்கத்துக்கு விரோதமாக தங்கத்தையும், மீனாவையும் அன்பு ததும்ப வாரியணைத்துக் கொண்டு எதிரே இருந்த சிமெண்ட் மேடையில் சென்று உட்கார்ந்தான்.

இவ்வளவு சுமுகமாக அவனால் பழக முடியும் என்று அவர்களால் நம்பவே முடியவில்லை. அவர்களது மகிழ்ச்சி கரை கடந்து போய்விட்டது. தங்கம் உரிமையுடன் அவன் மடியில் ஏறி அமர்ந்துக் கொண்டாள். மீனா அவன் முதுகுப்புறம் வந்து கழுத்தில் கைகளைக் கோர்த்துச் சாய்ந்துக் கொண்டாள்.

''நீங்க 'மாமா'தானே........?'' என்று தன் வாதத்தை ஆரம்பித்தாள் தங்கம்.

''இல்லை.... அண்ணாதான்.... இவளுக்கு ஒன்றுமே தெரியறதில்லே....'' என்று எதிர்வாதம் செய்தாள் மீனா.

மீண்டும் சண்டை வலுக்கும் போல் இருக்கவே ஆரோக்கியம் குறுக்கிட்டாக வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

''உங்கள் தகருரை நான் தீர்க்கிறேன்.... நான் சொல்கிறபடி நீங்கள் கேட்கணும்....'' என்ருன் ஆரோக்கியம்.

''ஓ....'' என்று தங்கமும் மீனுவும் ஒரே குரலில் கூச்சலிட்டனர்.

''மீனு.... நீ என்னை அண்ணு என்று கூப்பிட வேண்டும்! தங்கத்திற்கு நான் மாமா....! என்ன சரி தானே....''

மீனு பெரியவள். தகருரை வளர்க்க அவளுக்கு விருப்பமில்லை. ஒப்புக்கொண்டாள். தங்கத்தால் அந்த ஏற்பாட்டிற்கு ஒத்துவர முடியவில்லை.

''இது எங்கேயாவது நடக்குமா? வீட்டிலே அக்கா இருக்காளே அவளை ரெண்டு பேரும் ஒரே மாதிரியாத்தானே கூப்பிடுரும். அப்பாவையும் அப்படித் தானே ஒரே மாதிரி கூப்பிடுருேம். உங்களை மட்டும் ரெண்டு மாதிரியா எப்படிக் கூப்பிடறது....?'' என்று அவள் சிணுங்கினுள்.

ஆரோக்கியம் மெல்ல அவளைச் சமாதானப்படுத்திவிட்டு, ''அப்பாவுக்கு உடம்பு தேவலையா? ராத்திரி ரொம்ப கஷ்டப்பட்டாரா!'' என்ருன்.

''ராத்திரி என்ன! எப்போதும் அப்படித்தான்.... திடீர் திடீர்னு ஏதாவது வந்துவிடும்....'' என்று சுவாரஸ்யமற்ற குரலில் கூறி விட்டு மீனு ''அக்கா குளிக்க வரச் சொன்னுள். தண்ணீர் தயாராக இருக்கிறது....'' என்ருள்.

''அக்காள் வேறு ஒன்றும் சொல்லவில்லையா....?'' என்று ஆவலோடு கேட்டான் ஆரோக்கியம்.

''இல்லையே'' என்று உதட்டைப் பிதுக்கிவிட்டு ஆரோக்கியம் தங்களுடன் பேச ஆரம்பித்து விட்ட புதுச் செய்தியை அக்காளிடம் தெரிவிக்க தங்கம் கிளம்பினுள். மீனுவும் தொடர்ந்தாள்.

ஆரவாரத்துடன் குழந்தைகள் படிக்கட்டுகளின் வழியே கீழே இறங்கினுர்கள்.

ஆரோக்கியம் எழுந்து வந்து கீழே எட்டிப் பார்த்தான். கிணற்றடியில் ஆடாது அசையாது சிந்தனையே உருவாய் சாவித்திரி நின்றிருந்தாள். குழந்தைகளின் கூச்சலைக் கேட்டு மேலே நிமிர்ந்து பார்த்தவள் அங்கே ஆரோக்கியத்தைக் கண்டதும் ஒரு விணுடி ஆவல் ததும்ப தன் பார்வையை அங்கே நிலைக்கவைத்தாள். அவள் வாய் திறந்து பேசவில்லை. ஆனுல் அந்தப் பார்வையில் முன் தினம் நடந்த அந்த நிகழ்ச்சிக்கு மன்னிப்புக் கேட்கும் பண்பு நிறைந்து நிற்பதை ஆரோக்கியம் புரிந்து கொண்டான்.

சட்டெனத் திரும்பி சாவித்திரி உள்ளே போய்விட்டாள். ஆரோக்கியத்தின் மனதில் இவ்வளவு நேரம் அழுத்திக்கொண்டிருந்த ஒரு பெரும் பாரம் திடீரென தெரித்துச் சிதறியது போலிருந்தது. நிம்மதியுடன் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

4

வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு சாவித்திரி அப்பொழுதுதான் ஓய்வாக கூடத்தில் உட்கார்ந்தாள். மணி ஐந்துக்கு மேலாகிவிட்டது. மீனுவும் தங்கமும் சற்று நேரத்திற் கெல்லாம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி விடுவார்கள். அதுவரை வீட்டில் நிலவும் அமைதியில் ஏதோ ஒரு பயங்கரம் கலந்திருப்பதாகத்தான் தோன்றும். ஆகவே அவள் மனமும் கண்களும் குழந்தைகளின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றன.

எதிரே திறந்த வெளி முற்றத்தில் அவள் தந்தை முருகானந்தர் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் கண்களை மூடிக்கொண்டு எதைப் பற்றியோ தீவிர சிந்தனை

யில் ஆழ்ந்திருப்பவர் போலக் காணப்பட்டார். வயோதிகத்தால் தளர்ந்து. மனக் கவலைகளால் வாடிக் கிடந்த அவர் முகத்தில் தாங்க இயலாத வேதனையைத் தாங்க முயற்சிக்கும் ஒரு அசாதரண துயரத்தின் ரேகைகள் படிந்திருந்தன. அடிக்கடி புரண்டு படுக்கும்போது, கிரீச்சிடும் சாய்வு நாற்காலியின் ஓசையும், திடீர் திடீரென தனக்குத்தானே பேசிக் கொள்ளும் விநோத முணகலுந் தான் அந்த சூழ்நிலையில் சிறு சலனத்தைத் தந்துக் கொண்டிருந்தது.

சாவித்திரி சிறுமியாக இருந்த போது, அவர் குழந்தைகள் அத்தனையும் பெண்களாக இருக்கிறதே என்று அக்கம்பக்கத்திலிருப்பவர்கள் பரிகாசம் செய்யும்போது அவர் "எனக்கு தடித்தடியான மரங்கள் வேண்டியதில்லை. சின்னச் சின்ன மலர்ச் செடிகளே போதும்..." என்று கம்பீரமாகக் கூறுவார்.

பெண் குழந்தைகளின் மீதுள்ள வாஞ்சையிலோ, அல்லது பிறந்து தொலைத்துவிட்ட ஆத்மாக்களை வேறென்ன செய்துத்தொலைப்பது என்ற சலிப்பாலோ அப்பொழுது அவர் கூறும் வார்த்தைகளைக் கேட்கும்போது அவளுக்கு குதூகலம் உண்டாகும். ஆனால் இப்பொழுது அந்த உபமானம் வெறுப்பைத்தான் அளித்தது.

மலர்களின் மணமும் அழகும் மட்டுமே வாழ்க்கைக்கு உதவி செய்யாது என்ற உண்மை அப்பொழுது ஏனோ அவருக்குப் புரியவில்லை. தடித் தடியான மரங்களை வளர்த்துவிட்டிருந்தால் இப்பொழுது அவை தரும் பலன்களை அனுபவித்துக் கொண்டு அவர் குஷியாக காலத்தை ஓட்டலாமே.

இப்படி அவள் எண்ணியபோது பெண்ணாகப் பிறந்த தன் மீது அவளுக்கு ஆத்திரம் பொங்கியெழுந்தது. அத்துடன் அவளுடைய குழந்தைப் பருவ எண்ணங்களும் குமிழியிட்டதால் அவளது ஆத்திரம் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட, அவள் மனம் இன்பகரமான கனவு உலகத்தில் தவழ்ந்து விளையாடத் தொடங்கியது.

அப்பொழுது சாவித்திரிக்கு பதினன்கு வயதிருக்கும். மலர்ச்சியின் எல்லைக் கோட்டில் கால் வைத்து நிற்கும் இளம் பெண். புதுமலர்ச்சியும் பூரிப்பும் அவளைச் சூழ்ந்து நர்த்தனமாடிக் கொண்டிருந்தன.

அப்பொழுது தங்கம் பிறக்கவில்லை. மீனு ஒரு வயதுக் குழந்தை. ஆகவே சாவித்திரிதான் வீட்டுக்கு செல்லப்பிள்ளை.

முருகானந்தர் வியாபாரத்தில் நல்ல சம்பாதியத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார். அழகான மாடி வீடு. எந்த வசதிக்கும் குறைவில்லை. சாவித்திரி விரலசைத்தால் வீடே ஆடும். அந்த அளவுக்கு பெற்றோர் அவள் மீது உயிரை வைத்திருந்தனர். ஆஹா..! அன்று நடத்திய அந்தக் கோலாகல வாழ்வு....! அந்தோ! இன்று நிகழும் இந்த அவல வாழ்க்கை.... அப்பப்பா...மலையும் மடுவும்........!

தட தடவென யாரோ உள்ளே வரும் காலோசை அவள் நினைவு ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தவே குழந்தைகளாகத்தான் இருக்கும் என்று ஆவலுடன் முகத்தைத் தூக்கிப் பார்த்தாள்.

வந்தது குழந்தைகளல்ல ஆரோக்கியமும் அவனுடைய புது விருந்தாளியும் உள்ளே பிரவேசித்து படிக்கட்டுகள் வழியே மேலே ஏறிச் சென்றனர்.

ஆரோக்கியத்திற்குப் பின்னல் வந்த அந்த விநோதப் புது மனிதரை வியப்புடன் கவனித்தாள் சாவித்திரி. அவர் வந்தது சாவித்திரிக்குத் தெரியாது. ஆனால் ஆரோக்கியத்தின் மனோபாவத்தை எட்ட நின்றே நன்ருக கவனித்து வைத்திருக்கும் அவளுக்கு அந்தப் புது மனிதனின் வரவு பிர

மாதமான புதுமையாகத் தென்படவில்லை.

இந்த மனிதன் ஏதாவது தொல்லைகளில் மாட்டிக்கொண்டு அவதிப்பட்டிருப்பான்; அல்லது வாழமுடியாதபடி பிறரால் துன்புறுத்தப்பட்டிருப்பான். வாழ்க்கையில் தோல்விகள் சகிக்க முடியாமல் எங்காவது நின்று உயிரைவிட முயற்சித்திருப்பான்; எதிர்பாராத விதமாக அந்த சூழ்நிலையில் அவன் ஆரோக்கியத்தின் கண்களில் பட்டிருப்பான். அவ்வளவுதான்! உடனே பாய்ந்து சென்று அவனுக்குக் கை கொடுத்துக் காப்பாற்ற ஆரோக்கியம் முயன்றிருப்பான். கையோடு அவனையும் அழைத்துக்கொண்டு வந்திருப்பான்.

இப்படிப்பட்ட எண்ணங்கள் உண்டானதும் அவளுக்கு இனந்தெரியாத ஒரு குதூகலம் உண்டாயிற்று.

பார்வைக்கு எவ்வளவோ அடக்கமானவனகத் தோன்றும் ஆரோக்கியம் பிறருக்கு உதவுவது என்று தீர்மானித்து விட்டால் அப்புறம் புயலாகத்தான் சீறிக்கொண்டு நிற்பான் என்பதை பல தடவை நேரில் பார்த்தும், பலர் பேசிக்கொள்ளும் கதைகள் மூலம் அவள் கேள்விப்பட்டும் இருக்கிருள்.

ஒரு தடவை ஒரு ஏழைக்கடைக்காரன் லைசென்ஸ் விஷயமாக நகர சபையில் பாரபட்சமான தீர்ப்பு தரப்பட்டுவிட்டது. தனக்கு மறுக்கப்பட்ட லைசென்ஸ், நகர சபைத் தலைவர் திருவரங்கநாதருக்கு மிகவும் வேண்டிய ஒரு பெரிய வியாபாரிக்கு தரப்பட்டதாக கடைக்காரன் ஆரோக்கியத்திடம் ஓடிவந்து முறையிட்டான்.

லைசென்ஸ் தனக்குக் கிடைத்திருந்தால் ஏழெட்டுக் குழந்தைக் குட்டிகளுடைய தன் குடும்பம் பட்டினியில்லாமல் காலம் கடத்தும். அந்த வியாபாரிக்குக் கிடைப்பதின் மூலம் அவன் பாங்க் கணக்குத்தான் உயரும். இதைக் கடைக்காரன் அழாத குறையாக ஆரோக்கியத்திடம் கூறிக்கொண்டான்.

இதனுல் ஊரிலுள்ள பெரிய மனிதர்களின் விரோதம் தனக்குக் கிட்டும் என்று தெரிந்திருந்தும் கடைக்காரனுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் ஈடுபட்டான் ஆரோக்கியம்.

தகராறு அரசாங்கத்துக்கே போகும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. கடைசியில் கடைக்காரனுக்கு சாதகமான பலன் கிடைத்ததென்னவோ உண்மை. ஆனுல் அதற்காக ஆரோக்கியம் பெரும் சோதனைக்கு உள்ளாக நேர்ந்தது. தொழிலில் எக்கச்சக்கமான முட்டுக் கட்டைகள் ஏற்பட்டன. ஆரோக்கியத்தின் தையற்கடை தொழில் நடத்த முடியாத அளவு ஸ்தம்பித்துவிட்டது.! அதனுல் கடையை மூடிவிட வேண்டியதாகிவிட்டது. திருவரங்கநாதரிடம் தன் செயலுக்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டதைப் பற்றிக் கவலைப்படாமல் கடையை மூடிவிட்டு தையற் தொழிலை விட்டு வேறு தொழிலை செய்வது என்று தீர்மானித்துவிட்டான். அவனுல் அனுகூலம் பெற்ற கடைக்காரன் அவன் பட்டினி கிடந்து சங்கடப்படாமல் நன்றியுடன் கவனித்துக் கொள்ளவே, கட்டுப்பாடெல்லாம் தூளாகிவிட்டது.

இப்படி எத்தனையோ சம்பவங்கள்.

கதியற்று நிற்பவர்களைக் கண்டால் அவர்கள் யார்? அந்த நிலைக்கு வந்த காரணம் என்ன என்றெல்லாம் ஆலோசித்து நிற்பதில்லை. உடனே தன் வீட்டுக்குக் கூப்பிட்டு வந்து அவர்களது துயரத்தைத் துடைக்கப் பாடுபடுவான். இப்படி அவனுடைய அனுதாபத்திற்குப் பாத்திரமான சிலர் அவன் அறையிலிருக்கும் நல்ல பொருட்களையோ, மணிபர்ஸையோ தூக்கிக் கொண்டு போய்விடுவதும் உண்டு. பலர் அவரால் அனுகூலம் பெற்றுக்

கொண்டு பணத்துக்கு ஆசைப் பட்டு அவனுக்கு விரோதமாக நின்று தொல்லை கொடுப்பதும் உண்டு. ஆனல் ஆரோக்கியம் இதையெல்லாம் பாராட்டுவ தில்லை. அவனுடைய இந்த அசா தாரண மனப்பண்பைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் தன் உள் ளத்தில் ஏன் ஆனந்தப் பெருக் கெடுத்தோட வேண்டும் என்று அவளுக்குப்புரிவதில்லை.

அவனுக்கும் தனக்கும் ஒருவித சம்பந்தமில்லாதிருக்கும் போது, காதலைப் பற்றியோ, கல்யாணத் தைப் பற்றியோ சிந்திக்கக் கூடாத தன்னுடைய பரிதாப சூழ் நிலையில் ஆரோக்கியத்தைப் பற் றிய எண்ணத்தை தன் மனதில் நிலைக்க வைப்பதே தவறுதான் என்பதை அவள் உணர்ந்திருந் தாலும், அவ்வளவு எளிதில் அவனை மறக்க முடியவில்லை.

இப்பொழுதெல்லாம் மறைவி லிருந்தே அவள் ஆரோக்கியம் துக்கு வேண்டிய சேவையை செய் துக்கொண்டிருந்தாள். தெரிந்தோ தெரியாமலோ அவன் வாழ்வை தன்னோடு இணைத்துக்கொள்வதை உணரத்தான் செய்தாள்.

குழந்தைகளின் மூலம் அறைச் சாவியை வாங்கிவைத்திருந்து அவன் இல்லாத சமயத்தில் அறையைப் பெருக்கி சுத்தம் செய்து புத்தகம் போன்ற சாமான்களை ஒழுங்குபடுத்தி வைப்பாள். அழுக்குத் துணிகளை வெளுக்கப் போட்டு வாங்கிவைப் பது, படுக்கையை வெய்யிலில் உலரவைத்து எடுத்து வைப்பது, ஜன்னல்களுக்குப் புதுத் திரை களைத் தொங்கவிடுவது போன்று அவனுடைய அன்றாடத் தேவை கள் ஒவ்வொன்றிலும் சாவித்திரி யின் சேவை எப்படியாவது கலந்துதான் இருக்கும். சாப் பாட்டு விஷயத்தில் ஆரோக்கியம் ஒரு ஒழுங்கான ஏற்பாடு செய்துக் கொள்ளாமல் கண்ட கண்ட ஹோட்டல்களில் சாப்பிடுவதைக் கூட மெல்ல மாற்றி அந்தப் பொறுப்பையும் விரைவில் ஏற்றுக் கொள்வது என்று கூட திட்டமிட் டிருந்தாள்.

இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றல் சாவித்திரியும் ஆரோக் கியமும் ஒருவரை யொருவர் நேரடியாகப் பார்த்துக் கொண் டதோ, ஒரு வார்த்தைபேசியதோ கிடையாது. இப்படியெல்லாம் தன்னுடைய நடவடிக்கைகள் ஏன் மாற வேண்டும் என்று கேள்விக் குத்தான் அவள் அடிக்கடி விடை தேடிக் கொண்டிருந்தாள்.

''கொஞ்சம் உங்களுடன் பேச லாமா?'' என்ற மெல்லிய குர லொலி அவளை சிந்தனை உலகத்தி லிருந்து தட்டி யெழுப்பியது. திடுக்கிட்டு கண்களைத் திறந்தாள்.

படிக்கட்டுகள் பக்கம் கீழே ஆரோக்கியம் நின்றிருந்தான். அவளைப் பார்த்துத்தான் அப்படிக் கேட்டான்.

தீயின் அனல் தாக்குவதுபோல குபீரென ஒரு உணர்ச்சி அவள் உடலெங்கும் பரவியது. பேயைக் கண்டு மிரளுவது போன்று ஒரு படபடப்பும் நடுக்கமும் கலக்க பீதி பரவிய முகத்துடன் அவனை நோக்கினாள், உடனே அச்சத் தோடு தன் தந்தை அமர்ந்திருந்த திசையில் கண்களை ஓட்டினாள். நல்லவேளை அவர் இன்னும் கண் களை மூடியவண்ணமே அமர்ந் திருந்தார். ஆரோக்கியத்தின் குரலை அவர் நிச்சயம் கேட்டிருக்க முடியாது. சாவித்திரி ஒரே பாய்ச் சலாக உள்ளே ஓடிப்போய் ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டாள். அப்படியே எவ்வளவு நேரம் இருந் தாள் என்று அவளுக்கே தெரி யாது. குழந்தைகள் திரும்பிவிட்ட ஆரவாரத்தைக் கேட்ட பிறகுதான் வெளியே வந்தாள்.

தனது செய்கையை எண்ணிய போது அவளுக்கு வெட்கமாகப் போய்விட்டது. ஆரோக்கியம் முன்தின இரவு நடந்த அந்த விநோத நிகழ்ச்சியைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் வந்திருப் பான். தந்தை வெளிப்புறம் முற்

றத்தில் உட்கார்ந்திருந்தது அவன் கண்களில் பட்டிருக்க முடியாது. அவர் இல்லை என்று கருதியே அவளுடன் பேச முயற்சித்திருப்பான். தகப்பனுர் இருக்கிருர் என்பதை சாடையாகத் தெரிவித்திருந்தால் கூடத் திரும்பிப் போய் விட்டிருப்பான், இந்த அற்ப விஷயத்தைப் பிரமாதப்படுத்திவிட்ட தன் செயலை எண்ணியதும் அவள் மனம் வெட்கப்பட்டது; வேதனைப் பட்டது.

குழந்தைகளுக்கு காபி ஊற்றிக் கொடுத்துவிட்டு மெல்ல தந்தையின் பக்கம் வந்தாள் சாவித்திரி. இன்னும் அவர் கண்களை மூடிய வண்ணம்தான் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

முகத்திலே மாறி மாறித் தோன்றும் உணர்ச்சி நிழல்களின் மூலம் அவர் இதயத்தின் குமுறலைத் தெளிவாக அறிய முடிந்தது. இதயத்தில் துளிர்ந்தெழுந்து உடலை வாட்டும் வேதனைத் தீயின் கொடுமையை சமாளிக்க அவர் மேற்கொள்ளும் முயற்சிதான் அவரிடம் நிலவும் அமைதி என்பதை உணரும்போது சாவித்திரியின் மண்டையை யாரோ பலம் கொண்ட மட்டும் தாக்குவது போலிருந்தது.

''அப்பா....'' என்று மெல்ல கூப்பிட்டாள்.

அவர் எதையோ நினைத்துக் கொண்டு பற்களை நறநறவெனக் கடித்தார். மன உலகத்தில் அவர் தன் பரம வைரியை பிடித்து தண்டித்துக் கொண்டிருந்தாரோ என்னவோ.

''அப்பா.......'' என்று சற்று உறக்க கூப்பிட்டாள் சாவித்திரி. இந்தத் தடவை ஏதோ கெட்ட கனவு கண்டுவிட்டமாதிரி துள்ளிக் குதித்துக் கண்களைத் திறந்தார்.

''கொஞ்சம் காப்பி சாப்பிடுகிறீர்களா! இப்படியே படுத்துக் கிடந்தால் உடம்பு என்னத்திற்கு ஆகும்.... குன்றின் பக்கம் போய் காற்ருேட்டமாக கொஞ்சம் உலாவிவிட்டு வாருங்களேன்....''

சாவித்திரியின் குரலில் இருந்த கவலையும் பயமும் முருகானந்தத்திற்கு புரிந்தது. அவளுக்கு தைரியம் கூறும் பாவனையில் சிரித்துக் கொண்டே பேசினர். ''நீதான் என்னை நோயாளியாக மாற்றுகிருய் அம்மா.... என் உடம்பு எப்பொழுதும் போல்தான் இருக்கிறது. என்ன சொன்னுய்....! காப்பியா....! கொண்டு வாயேன்! நானே கேட்கலாமென்றிருந்தேன்....ஆமாம்...குன்றின் பக்கம் போய் உலாவிவிட்டுத்தான் வர வேண்டும்........''

தன்னைச் சிறு குழந்தையாக எண்ணி வார்த்தைகளால் ஏமாற்றிவிட நினைக்கும் தந்தையின் மன நிலையைக் கண்டு சாவித்திரிக்கு ஒருபுறம் சிரிப்பும், மறுபுறம் பரிதாபமும் ஏற்பட்டது.

சட்டையை மாட்டிக்கொண்டு கைத்தடியை கையில் பற்றியவாறு ''தங்கம்.... மீனு.... யாராவது காற்று வாங்க வருகிறீர்களா ?....'' என்று குழந்தைகள் பக்கம் பார்த்துக் கேட்டார் முருகானந்தர்.

''வர்லேப்பா....இன்னைக்கு பள்ளிக்கூடத்திலே ஒரு கதை சொன்னுங்க. அக்காகிட்டே சொல்லப் போருேம்....'' என்று நீட்டி முழக்கினுள் மீனு.

''அப்போ....சரி....'' என்று புறப்பட்டார் முருகானந்தம். வெளியே செல்ல அவருக்குத் துளிகூட விருப்பமில்லை என்பதை அவரது மெதுவான நடையே காட்டியது. இப்படிப் புறப்படுவதன் மூலம், தான் மகிழ்ச்சியுடன் இருப்பதாக சாவித்திரி நினைக்க வேண்டும் என்பது அவருடைய தீர்மானம். இது அவளுக்குப் புரியாமல் இல்லை. தந்தை செல்லும் திசையையே கவனித்தாள் சாவித்திரி. காப்பி சாப்பிட்டு முடித்த குழந்தைகள் இரண்டும் அருகில் வந்து உட்கார்ந்ததைக் கூட அவள் கவனிக்கவில்லை,

''அக்கா....'' சூடுகண்ட பூனை தெரியுமா உனக்கு?....'' என்று

அவள் மடியில் படுத்துக் கொண்டு கேட்டாள் தங்கம்.

சூடு கண்ட பூனை..........!

குழந்தை கூறிய அந்தச் சொல் சாவித்ரியை ஒரு உலுக்கு உலுக்கியது........

''அது ஒரு கதை........பள்ளிக் கூடத்திலே சொன்னுங்க....'' என்ருள் மீனு, தன்னைக் கதை சொல்லத் தயார் செய்துக் கொண்டு,

கதைசொல்லும் உரிமை தன்னை விட்டுத் தாண்டிவிடுமோ என்ற அச்சத்தில் அவசர அவசரமாக தங்கம் ஆரம்பித்தாள்,........

''ஒரு ஊரிலே ஒருபூனை இருந்ததாம். ஒரு நாள் அது நன்ருகக் கொதித்துக்கொண்டிருந்த பாலில் அதன் சூடு தெரியாமல் வாயை வைத்து விட்டதாம்........

மீனு கதையை முடித்தாள். ''கொதிக்கும் பால் பூனையின் வாயை நன்ருக சுட்டுவிட்டதாம். அதனல் வாயெல்லாம் ரணமாகப் போய்விட்டதாம். அதிலிருந்து அந்தப் பூனை ஆறின பாலைப் பார்த்தால் கூட பயப்பட்டுக் கொண்டு ஓட ஆரம்பித்ததாம். கடைசியில் பால் சாப்பிடப் பயந்தே உயிரை விட்டு விட்டதாம்........''

தங்கம் வாத்தியார் கூறின நீதி மொழியை கடைசியாக ஒப்பு விக்க ஆரம்பித்தாள் ''........ஆகையால் பிள்ளைகளே அவசரப்பட்டு எதையும் ஆராயாமல் செய்யக் கூடாது...........''

இந்த மகிழ்ச்சி ஆரவாரத்தில் சாவித்திரி கலந்து கொள்ளாமல் பிரமை பிடித்தவள் மாதிரி அசைவற்று உட்கார்ந்திருக்கவே குழந்தைகளின் உற்சாகம் அடியோடு குறைந்து போயிற்று.

''அக்காவுக்கு கதை புரியவே இல்லை....'' என்று முணுமுணுத்தாள் மீனு. பிறகு இருவரும் சாவித்திரியிடம் கோபித்துக் கொண்டு தெருப் பக்கம் விளையாடப் போய்விட்டனர்.

''சூடு கண்ட பூனை........''

''அவசரப்பட்டு ஆராயாமல் எதையும் செய்யக் கூடாது....''

குழந்தைகளின் இந்த வாக்கியங்கள் சாவித்திரியின் மனதில் இடி முழக்கம் போல எதிரொலி செய்தன.

அவள் மனத்திரையில் இரண்டு பூனைகளின் முகங்கள் தென்பட்டன. இரண்டு பூனைகளின் வாய்களும் நன்ருக வெந்து புண்ணுக இருக்கின்றன. பரிதாபத்துடன் விழித்துக் கொண்டிருந்த அந்தப் பூனைகளின் முகங்களை உற்றுக் கவனித்தாள். இப்பொழுது அந்த பூனைகள் மெல்ல மறைய அங்கே இரண்டு மனித முகங்கள் காட்சியளித்தன. ஒன்று அவள்; இன்னொன்று அவள் தந்தை முருகானந்தம்....

கண்ணிமைகளைத் திரும்பத் திரும்ப மூடித் திறந்து அந்தக் காட்சியை மனத்திரையை விட்டு அகற்ற முயற்சித்தாள் சாவித்திரி.

முதல்நாள் இரவு அவள் தந்தை ஆரோக்கியத்திடம் நடந்து கொண்ட மாதிரி... அவள் ஆரோக்கியத்தை நேருக்கு நேர் காண நேரும்போதெல்லாம் ஓடி ஒளிந்துக்கொள்ளும் முறை....! ஆம், வாயில் சூடுபட்ட பூனைகள் குளிர்ந்த பாலைக் கண்டபோதுகூட இப்படித்தானே மிரண்டு ஓடியிருக்கும்....

இந்த உவமை அவள் மனதில் நிலைத்ததும் ஏழு வருடங்களுக்கு முன்னல் அவள் வாழ்வில் நிகழ்ந்த அந்த சூடான நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது, அவள் வாழ்வையே தடம்புரள வைத்து எக்கச்சக்கமான முனையில் திருப்பி விட்ட அந்த நிகழ்ச்சியை நினைக்கும் போதே பயங்கரக்கனவு கண்டது போல அவள் உடல் நடுங்கியது.

(தொடரும்)

புயலும் தென்றலும்

அன்று காரியாலயத்திற்குவந்தக் கடிதங்களை படித்துக்கொண்டிருந்த "தென்றல்" என்ற முற்போக்கு மாதப் பத்திரிகையின் ஆசிரியரான மருத நாயகத்திற்கு 'புயல்' அடித்தாற்போல் இருந்தது, திகைத்துப் போய் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டார். அவரின் கையில் எழுத்தாளர் 'எண்ணெய்சட்டி' [உண்மை பெயரல்ல! புனைப் பெயர் தான்] எழுதிய கடிதம் விரித்தப்படியே இருந்தது.

இதுவரையில் எத்தனையோ லட்சக் கடிதங்களை படித்திருக்கிருர் — ஏன்? எழுதியும்கூட இருக்கிருர். அத்துடன் சுய விளம்பரங்களோடு "அன்புடையீர், வணக்கம். நான் ஒரு இளம் எழுத்தாளன். அதுவும் தங்கள் பத்திரிகையிலேயே எழுத வேண்டும் என்ற ஆசையே மூச்சாக உள்ளவன். நான் இப்போது உலகத்திலேயே இதுவரையில் வெளிவராத திடுக்கிடும் காதல், பட படக்கும் வீரம், மனதை தொட்டமுக்கும் சோகம் முதலிய நவரசங்களும் கலந்த தொடர் கதை ஒன்றை சிருஷ்டித்துள்ளேன். அதை தங்கள் பத்திரிகையில் தான் வெளியிடவேண்டும் என்ற ஆசை என்னுள்ளத்தில் நெருப்பாக கொழுந்துவிட்டுக் கொண்டிருக்கிறது. அந்த தீச்சுவாலையை தங்கள் 'தென்றல்' தணிக்குமா?" என்று ஆரம்பிக்கும் தொடர் கடிதங்களை இதற்கு முன்பாக படித்திருந்தும்கூட அவர் இப்படி அசந்துப் போனதில்லை. அதுமட்டுமா?

"அறிஞர் அவர்களே, தென்றலில் தாங்கள் எழுதும் ஒவ்வொரு எழுத்தும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய எழுத்துக்கள். நீங்கள் அல்லவா மேதை! மற்றவர்களும் எழுதுகிருர்களே கழுத்தும் தலையும் இல்லாமல்! இத்துடன் "எழுத்தாளன் யார்?" என்ற கதையை அனுப்பி வைத்திருக்கிறேன். அடுத்த இதழிலேயே பிரசுரித்து ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்ற அணுக்குண்டு — ஹைட்ரஜன் கடிதங்களைக் கண்டுகூட ஆசிரியர் மருதநாயகம் இப்படி மருண்டதில்லை! அப்படிப்பட்ட ஒரு பத்திராதிபரை பதை பதைக்கச் செய்யும்படி எழுத்தாளர் "எண்ணெய் சட்டி" என்ன எழுதியிருக்கிருர்!

மருதநாயகம் மீண்டும் ஒரு முறை அந்தக் கடிதத்தை படிக்க ஆரம்பித்தார்.

தென்றல் ஆசிரியர் அவர்களே!

சென்ற இரண்டு வருடங்களில் தங்கள் பத்திரிகையில் நான் எழுதியுள்ள விஷயங்களின் மொத்த எண்ணிக்கை இருபது! அவைகளில் சிறுகதைகள் பத்து; கட்டுரைகள் ஐந்து; வசனக் கவிதைகள் இரண்டு; உண்மைக் கவிதைகள் மூன்று! அவற்றிற்கான 'பில்'லும் இத்துடன் அனுப்பி வைத்திருக்கிறேன். 'பில்'லில் கண்ட தொகையை உடனே அனுப்பி வைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

தங்கள்,
"எண்ணெய் சட்டி"
வரட்சியான்குடி.

கடிதத்தை படித்து முடித்த மருத நாயகம் பெருமூச்சு விட்டுக் கொண்டே உறையில் பதுங்கிக் கொண்டிருந்த 'பில்'லை வெளியே இழுத்து அதிலே ஒரு கண்ணோட்டம் செய்தார். அதன் முதல் 'அயிட்ட'த்தைக் கண்டதுமே ஆசி

"பாகவதர்வாள்! நேத்து உங்க கச்சேரியிலே நல்லா தூங்கிக்கிட்டிருந்தேன். நீங்க நீலாம்புரி பாட ஆரம்பித்ததும் தூக்கம் கலைஞ்சுட்டுது".

ரியர் அவர்களுக்கு மயக்கம் வந்து விட்டது. சமாளித்துக் கொண்டார்.

சிறுகதை ஒன்றுக்கு ரூ. 10-0-0 வீதம் பத்து கதைகளுக்கு	ரூ.	100 0 0
கட்டுரை ஒன்றுக்கு ரூ. 8 வீதம் ஐந்து கட்டுரைகளுக்கு	ரூ.	40 0 0
வசனக் கவிதை ஒன்றுக்கு ரூ. 5 வீதம் இரண்டு கவிதைக்கு	ரூ.	10 0 0
உண்மைக் கவிதை ஒன்றுக்கு ரூ. 6 வீதம் மூன்று கவிதைகளுக்கு	ஞ.	18 0 0
ஷை சம்பந்தமாக காகிதம், இங்க், தபால் முதலியன	ரூ.	5 0-0
ஆக....		173 0 0

குறிப்பு: பில் கண்ட ஒரு வாரத்துக்குள் தொகையை அனுப்பி வைத்துவிட வேண்டும்.

இதுவரை சமாளித்துகொண்ட மருதநாயகம் அவர்கள் கூட்டுப் புள்ளியைக் கண்டதுதான் தாமதம், கிர்....ரென்று தலையை சுற்ற ஆரம்பித்தது அவருக்கு! அப்படியே நாற்காலியில் சாய்ந்து விட்டார். எவ்வளவு நேரம் அந்த நிலையிலே இருந்தார் என்று அவருக்கே தெரியாது. 'சார்' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டார். "'எழுத்தாளர் எண்ணெய் சட்டி' அவர்களே நேரில் வந்துவிட்டாரோ' என்ற பயம், பிரமை எல்லாம் சேர்ந்தாற்போல அவரைத் தாக்கின! கண்களை ஒருமுறை கசக்கி விட்டுக் கொண்டார். எதிரே 'கம்பாஸிடர்' நின்றுக் கொண்டிருந்தார்,

"ப்ரூப் கரெக்‌ஷன் போட்டாச்சு! பைனலா ஒருதரம் பார்த்தீங்கன்னு, மிஷின்லே விட்டுடலாம்னு மிஷின் மேன் கேட்டு வர சொன்னரு" என்ருர் பத்திரிகை ஆபீஸ் பாஷையில்!

"பழைய 'ப்ரூப்' கரெக்‌ஷன் செஞ்சாச்சின்னு மிஷின்லே விடறதுதானே? இதுக்காக ஒரு ஆள் வந்து கேக்கணுமா?" என்று பாய்ந்து விழுந்தார் மருதநாயகம். அவர் மனக்கண்ணில் "ஆக ரூ. 173-0-0" என்ற கூட்டுப்புள்ளி எழுந்து நடனமாடிக் கொண்டே இருந்தது.

"இல்லே நீங்க பைனலா ஒரு தரம்....!" என்று குழறினர் 'கம்பாஸிடர்'.

"சரிதான் போய்யா! போய் விடச்சொல் மிஷினை!" என்று மீண்டும் ஒருமுறை துள்ளிக் குதித்தார் ஆசிரியர்.

'கம்பாஸிடர்' ஆசிரியரின் மாறுதலான நிலையைக் கண்டு பயந்து அறையை விட்டு வெளியேறினர். அதைத் தொடர்ந்து 'கடாங்-டங்' என்று மிஷின்

ஓடும் சப்தம் காரியாலயம் பூரா வும் பரவியது. ஆசிரியர் மருத நாயகமும் அதை ரசித்தவாறே 'லெட்டர் பேப்பரை' எடுத்து விரு, விருப்புடன் எழுத ஆரம்பித் தார்.

அன்புள்ள எண்ணெய்சட்டி
அவர்களே,

தங்கள் சூடான, மின்சாரக் கடி தம் கிடைத்தது. அத்துடன் தங் கள் பட்டியலையும் பார்த்தோம். சந்தோஷம்! ஆனால், இந்த நெருக் கடியான நிலையில் இவ்வளவு விலைக்கொடுத்து விஷயங்களை கொள்முதல் செய்வது எங்கள் தென்றலை மிகவும் பாதிக்கும் என்று கருதுகிறோம். மற்றும் தாங் கள் எழுதியுள்ள சிறுகதை பத்தும் சொத்தைகள் என்பதை இப் பொழுது சொல்வதற்காக மன் னிக்கவும். ஐந்து கட்டுரைகள் எழுதியுள்ளதாக தெரிவித்திருக் கிறீர்கள். ஆனால், [அன்புள்ள எண்ணெய்சட்டி அவர்களே! மனப்பூர்வமாக சொல்கிறேன்] ''பட்சணமாவது யாரால்........?'' என்ற கட்டுரையைத் தவிர மற் றவைகள் எல்லாம் மிகவும் உயர்ந்த முறையில் ''தென்றல்'' வாசகர்களின் பொறுமையை சோதித்து விற்பனையை பாதித்து விட்டது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தங் கள் கவிதைகள் ஐந்தும் பிரசுரித்து விட்டேன். என்றாலும் ஒவ்வொரு கவிதைகளுக்காக மட்டும் 'ப்ரூப்' திருத்த முறையே மூன்று நாட்கள் செலவழிந்திருக்கின்றன. தமிழில் உள்ள அகராதிகள் போதாமல் ஆங்கில பேரகராதிகளும் அதற்கு தேவையாக இருந்தது. அத்துடன் 'தென்றல்' பெயரில் மட்டுமல்ல பொருளாதார துறையிலும் இன் னும் தென்றலாகவே இருந்து வரு கிறதென்பதை தாங்கள் மறந்து விடக் கூடாது.

இங்ஙனம்,
மருத நாயகம்
ஆசிரியர் ''தென்றல்''
'இடி இல்லம்' சென்னை.

கடிதம் முடிந்தது. மருத நாய கம் அவர்களுக்கு காபியோ, சோடாவே சாப்பிட வேண்டும் என்ற களைப்பு ஏற்பட்டது. இரவு பகலாக எழுதிக் குவிக்கும் எழுத் துலக மன்னரான அவருக்கு இதைப் போன்ற களைப்பு என் றுமே ஏற்பட்டதில்லை! சட்டென்று எதையோ நினைத்துக் கொண்ட தைப்போல் பழைய பில்களை கோர்த்துவைத்துள்ள பைல்களை எடுத்து புரட்டினார். உடனே ''பின் பக்கம் பார்க்க'' என்று எழுதி விட்டு லெட்டர் பேப்பரை திருப்பி வைத்துக் கொண்டு எழுத ஆரம் பித்தார் மீண்டும்....

கதை ஒன்றுக்கு ரூ. 7-0-0 வீதம் பத்து கதைகளுக்கு படம் 'பிளாக்' செய்ய	ரூ.	70 0 0
கட்டுரை ஒன்றுக்கு ரூ. 5 0 0 வீதம் ஐந்து கட்டுரைகளுக்கு தலைப்புகளை பிளாக் செய்ய	ரூ.	25 0 0
கவிதை ஒன்றுக்கு ரூ. 15-0-0 வீதம் ஐந்து கவிதைகளுக்கு கட்டவுட் பிளாக்கு செய்ய	ரூ.	75 0 0
ஆக	ரூ.	170 0 0

மற்றும், அச்சு கோர்த்தல், அச்சு அடித்தல் முதலிவைகள் தனி.

குறிப்பு: இவைகளை நீங்கள் அனுப்பிவைக்கவேண்டும் என்ப தில்லை. தங்களின் 'பில்' தொகை யில் இந்த பில் தொகையைக் கழித்துக் கொண்டு மீதி உள்ள ரூபாய் மூன்றுக்கும் தங்களை தென்றல் சந்தாதாராக பதிவு செய்துக் கொண்டுள்ளோம்.

என்று கடிதத்தை முடித்தார். மனம் நிலை இழந்து தத்தளித்தது. அதோடுமனதிலிருந்த பெரியபார மும் கரைந்து விட்டதைப்போன்ற

பிரமை தட்டியது மருத நாயகத்திற்கு!

* * *

இரண்டு நாட்கள் தீர்ந்தன! காரியாலயத்தில் இரண்டு தஸ்தாகனத்தில் வந்து கிடந்த காகிதக் கட்டைப் பிரித்துப் பார்த்ததுமே, நட்டநடுப்பகலில், தார்ரோடில் வாழைப்பழத் தோலின் மேல் காலை வைத்து விட்டவரின் முகத்தைப் போல மருத நாயகம் அவர்களின் முகமும் மாறி விகாரமடைந்தது. காரணம்....? எழுத்தாளர் 'எண்ணெய்சட்டி' சளைக்கவில்லை, அந்தப் பெரிய காகிதப் பார்ஸல் அவரால் அனுப்பப்பட்டது தான். மருதநாயகம் தடுமாறிக் கொண்டே அதையும் படிக்க ஆரம்பித்தார்.

தென்றல் ஆசிரியர் அவர்களே,

தங்கள் வரட்டு கடிதம் கிடைக்கும் பாக்கியம் பெற்றேன். ஒரு எழுத்தாளனுடைய வாழ்க்கை எப்படி இருக்கும் என்று தெரியாததினால்தான் தாங்கள் இப்படி ஒப்பாரி வைத்திருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். இத்துடன் என் வாழ்க்கையைப் பற்றின விரிவான விளக்கத்தை தங்கட்கு அனுப்பி வைத்திருக்கிறேன். அதைப்படித்துப் பிறகாவது தங்கள் கல்லுள்ளம் கரையும் என்று நினைக்கிறேன்...

தங்கள்,

எ. ச.

வ. குடி.

கடிதத்தை படித்து முடித்து விட்டு அத்துடன் வந்துகிடந்த கட்டு காகிதத்தையையும் மலையை விழுங்குவது போல் படித்து முடித்தார். உடனே மண்டைக்குள் ஏதோ நரம்புகள் அறுந்து விட்டதை போன்ற வேதனை ஆரம்பித்து விட்டது. அதையும் பொறுத்துக் கொண்டு மறுநாளே எழுத்தாளர் 'எண்ணெய் சட்டி'க்கு கடிதம் ஒன்றை எழுத ஆரம்பித்தார் ஆசிரியர்.

எழுத்தாளர் அவர்களே,

தங்கள் 'காகிதப்போர்' கிடைத்தது. வெகுநேரம் அதனோடு போரிட்டு தங்களின் வாழ்க்கை வெறும் பாலைவனமல்ல! காண்டாமிருகமும், முள்ளம்பன்றிகளும் உலாவும் அடர்ந்த சோலைவனம் என்பதைப் புரிந்துக்கொண்டேன். ஆனால், அது என்னுள்ளத்தை மட்டும் கரைத்து கர்ஜனை செய்வதால் பிரயோசனம் இல்லை என்பதற்காக பத்திரிகையின் எமன்களை— அதாவது பத்திரிகையின் ஆயுளை நிர்ணயிக்கும் ஏஜண்டுகளின் உள்ளத்தைக் கரைத்து, பிழிந்து, பயமுறுத்தியாவது தென்றலுக்கு உதவட்டும் என்ற நோக்கத்தோடு அடுத்த இதழில் பிரசுரமாகிறது. ஆனல் ஒரு விஷயம். மேற்படி தங்கள் வாழ்க்கை வரலாறு உங்களுக்கும், ஒரு விளம்பரமாக அமையுமாதலால் அதற்கு அன்பளிப்பு அனுப்ப இயலாது என்பதையும் பணிவுடன் அறிவித்துக் கொள்கிறேன். நீங்கள் வாழ்க!

தங்கள்,

ம. நா.

ஆ. தென்றல்.

இ. இ. சென்னை.

கடிதத்தை 'எக்ஸ்பிரஸ்' தபாலில் அனுப்பிவைத்துவிட்டு இருமாந்திருந்தார் ஆசிரியர் மருத நாயகம்! ஆனல், நாட்கள் பலவாகி, மாதங்களாக மாறிய பிறகும் கூட எழுத்தாளர் 'எண்ணெய் சட்டி'யிடமிருந்து எந்த விதமான பதிலும் வரவில்லை. அதற்காக தென்றல் காரியாலயமும் காத்திருக்கவில்லை. புகைந்துக்கொண்டிருந்த பொருளாதாரப் புயல் திடீரென்று கிளம்பி தென்றலை விழுங்கி ஏப்பம் விட்டு விட்டது.

குற்றமும் தண்டனையும்

பூவை எஸ். ஆறுமுகம்

டக் – டிக்!

கடிகாரமல்ல; அவன் நெஞ்சு அடித்துக் கொண்டது. அழுந்தப் பிடித்துக் கொண்டான். ஒன்று, இரண்டு என்று எண்ணிக் கணக்கெடுத்துப் படிகளைக் கடந்தான். கண்கொள்ளாக் காட்சி விரிந்திருந்தது; எந்தப் பணம் படைத்தவனின் பங்களாவோ? நடந்தான். 'வா' என்று சொல்ல யாரோ தன் முன் நிற்பதாக எண்ணினன்; தலை உயர்ந்தது.

'பூ, இந்த மூதேவிக்கு வரவேற்பு ஒன்றுதான் கேடாக்கும்....!'

நிலைக் கண்ணுடி நின்றது எதிரே. மறுபடியும் தன்னை அதில் பார்ப்பதற்குள், அவனுக்கு அழுகை முட்டி மோதிக் கொண்டு புறப்பட்டது. அழுவதென்ருலும்தான் லேசில் நடந்து விடக்கூடிய காரியமா? தாடியும் மீசையுமாக பார்ப்பதற்கே அச்சத்தையும் அருவருப்பையும் அள்ளித் தெளித்திருந்த முகவிலாசம்; அதில் ஊடும் பாவுமாகக் குறுக்கோடிக் கிடந்தது தாங்கமுடியாத சஞ்சலமும், சொல்லிடங்காத விரக்தியும். அவனுடைய கொள்ளை எழில் எங்குதான் ஓடி ஒளிந்து கொண்டதோ?

திரும்பினன்; அவன் பார்வை எதிர்ச் சுவரில் மாட்டியிருந்த அந்தப் படத்தில் நின்றது. 'யார், சுந்தரியா?' என்ற கேள்வியில் அவன் தலை சுற்றியது; அவன் கண்களில் மற்றுமொரு படம் தட்டுப்பட்டது. 'யார்.... கஜேந்திரனு?' என்ற அடுத்தகேள்வியில் அவனே சுற்றினன்.

''சுந்தரி பவனம்—கஜேந்திரன், பாங்கர்....'' என்ற பலகை அவனை விரட்டி விரட்டி அடித்தது. அந்த அவன் உயிரைக் கைக்குள் பற்றிப் பிடித்தவனுக ஓட்டமாக ஓடிக் கொண்டிருந்தான்.

இரவு சிரித்துக்கொண்டிருந்தது.

* * *

சிரிக்கும் இரவைப் பற்றின சிந்தை அவனுக்கில்லை; தனித்துக் கிடந்த ஒற்றை விண்மீனை வலை விசிறிப் பிடித்தான். அது சிரித்தது; அவனுக்குத் தன்னை மறந்து, தன் கதையைக்கூட மறந்து இமைக்கும் நேரம் சிரிக்க மனம் வந்தது. அதில் அவனுக்கு ஒரு ஆசை. அந்த நட்சத்திரத்தைப் போலே அவனும் ஒற்றையாகி விட்ட விதிவசத்தாலா?.... ஆனல் அவன் கண்கள் அந்த ஒரு நட்சத்திரத்தில் சுந்தரியை அன்றே தரிசித்துக் கொண்டிருந்தன! அதனல் தானே அவனுக்கும்கூட சிரிப்பு என்ற ஒன்றின் ஞாபகம் இருந்தது. அடுத்த கணம், அவன் விழிகளில் கனல் பறந்தது. சுந்தரியின் சூழலில் அவன் கஜேந்திரனையும் தரிசித்து விட்டான். வெறி பிடித்தாற்போல நடந்தான்; ஓடினன்.

அந்த அவன்! — அவன் பெயர் ராஜேந்திரன். ராஜவடிவு சொட்டியது பெயரில் மட்டுமல்லாமல், அழகிலும் சேர்த்து! அவனுடன் உடன் பிறந்தவன கஜேந்திரன். இருவரும் ஒரு தாய் வயிற்றில் சிறைப்பட்டு விடுதலை பெற்றவர்கள். அறந்தாங்கியில் 'ரங்கூன் கார நாயுடு' என்ருல் ஏகப் பிரசித்தம். பர்மாவில் நாயுடு உழைத்த உழைப்புக்குப் பிறந்த மண்ணில் அவருக்கு நிதி குவிந்தது. முன் நடந்த பர்மிய யுத்தக் குமுறலில், கால்நடையாக நடந்து வந்த ஆயிரமாயிரம் இந்தியர்

களுள் நாயுடுவும் ஒருவராகி, இந்தியாவை மிதித்து, கடைசியில் பிறந்த மண்ணிலேயே கண்ணை மூடினர். மூத்த பையன் கஜேந்திரனிடம் அவர் தன் சொத்து பூராவையும் ஒப்படைத்திருந்தார். பின்னர், அவனே தன் தம்பி ராஜேந்திரனுக்கும் பாகம் பிரித்துக் கொடுத்துவிட வேண்டுமென்றும் நாயுடு மூத்த மகனிடம் 'கையடித்து'ம் வாங்கியிருந்தார்.

சொத்து, பத்து, நிலம், நீச்சு, பத்திரம் முதலிய அனைத்தும் கஜேந்திரன் பெயரில் தான் இயங்கின. அண்ணன் பேரில் அளவற்ற அன்பு, மரியாதை, நம்பிக்கை யுண்டு தம்பிக்கு. அண்ணன்-தம்பி என்ற முறையில் இருவரும் அன்று போல என்றும் இருந்திருப்பார்கள், அவர்களிடையே எரிநட்சத்திரமாக சுந்தரி மட்டும் குறுக்கிடாமலிருந்திருந்தால்....!

சுந்தரி என்றல் பெயரில் மட்டுமல்ல; அழகிலும் குணத்திலும் சுந்தரிதான். அவள் அவர்கள் இருவருக்கும் முறைப் பெண். அவர்கள் இருவருக்கும் அவள் என்றுலே உயிர். முறைப் பிரகாரம் பார்த்தால் மூத்தவன் கஜேந்திரனுக்குத்தான் சுந்தரி உரியவள், அவன் குடும்பத் தலைவன், மூத்த பிள்ளை என்ற சலுகை காரணமாக. ஆனல் அவளோ ராஜேந்திரனிடம் தன் உயிரை 'அடகு' வைத்திருந்தாள். அவனும் அப்படியே அவள் உள்ளம் தந்த இடத்தில் ஒதுங்கிக்கொண்டு, அவள் கரம் பற்றக் கனு கண்டு கொண்டிருந்தான்.

அண்ணனும் தம்பியும் ரகசியமாகக் கண்ணி வைத்து சுந்தரியைப் பிடிக்கப் போட்ட திட்டம் ஒரு நாள் அம்பலமாகத்தான் ஆனது. அவர்களிருவரும் தங்கள் உறவு முறையைக்கூட ஒதுக்கி வைத்து, பரம வைரிகளாகிச் சண்டையிட்டனர். அதே இரவு, ராஜேந்திரனும் சுந்தரியும் கள்ளத் தோணியில் அக்கரைச் சீமைக்கு 'ஓடி' விடுவதெனத் திட்டம் போட்டு, மணமேற்குடிக் கடற்கரையை அடைந்து, தோணி ஏறப் போன சமயத்தில், கஜேந்திரன் போலீஸ்காரர்களுடன் அங்கு தோன்றிவிட்டான். சுந்தரியை அழைத்துப்போனன் கஜேந்திரன். போலீஸ்காரர்கள் ராஜேந்திரனை இட்டுச் சென்றுர்கள். குற்றத்துக்கு அவன் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்தான். அடுத்து, இந்தப் பதினைந்து மாதங்கள் இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊரில் சுற்றிச்

சுற்றி அலைந்து திரிந்தான். பைத்தியம் பிடிக்காமல் தப்பித்துவிட்ட அவனுக்கு இப்பொழுதுதான் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. இல்லையென்ருல், தஞ்சாவூரில் – அதுவும் தனக்குத் துரோகம் செயது, தன் ஆசைக் கிளியையும் அபகரித்துக்கொண்ட அவனுடைய அண்ணனுடைய வீட்டில் — பங்களாவில் கால் வைத்திருப்பானு....? விதி எங்கிருந்தவனை எப்படிக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது....!

சிதைந்த உள்ளத்துக்கு இப்போது சிரிக்கத்தான் சிந்தை ஏது, தெம்பு ஏது?

* * *

"தம்பி"

யார் கஜேந்திரனு என்று ராஜேந்திரன் திரும்பினன்; ஆவலுடன் அண்ணனைப் பார்க்கத் துடித்தல்ல; தன்னை வஞ்சித்த தமையனைப் பழிக்குப் பழிவாங்க....! அவன் மனம் அந்தச் சிலமணி நேரம் பூராவும் கஜேந்திரனைத் தான் சுற்றிச் சுழன்று சுழலடித்துக் கொண்டிருந்தது. தன் தமையனைக் கழுத்தைப் பிடித்து அப்படியே நெறித்துவிட வேண்டுமென அவன் கைகள் துடித்தன; பற்களை 'நறநற'வென்று கடித்துக்கொண்டான். அவனுக்கு வெறி மூண்டது. பழி....! வஞ்சம்....! உடன் பிறந்த இரண்டு சகோதரர்களுக்கிடையே இப்படிப் பழி.... வஞ்சம்....! பல மாதங்கள் மறைந்திருந்த வெறி மீண்டது....!

"தம்பி!"

அங்கு அவன் அண்ணன் நின்ருல்தானே....!

சுய நினைவுடன் விழித்தான். யாரோ ஒரு மனிதர் அவன்மீது விழி பதித்து நின்ருர்.

'உறைந்து கட்டியாக மாற முடியாத திரவ பதார்த்தத்துக்கு ஒரு உதாரணம் சொல்ல முடியுமா?' என்று சயன்ஸ் வாத்தியார் கேட்டார்

'சூடான தண்ணீர்' என்று டக்கெனப் பதில் சொன்னன் புத்திசாலி மாணவன் ஒருவன்.

'என்மீது உள்ளன்பு கொண்ட ஒருவர்கூட உண்டா?' என்ற நினைவுடன் அந்த மனிதரையே வெறித்துப் பார்த்தான் ராஜேந்திரன். வந்தவர் அண்டி அவனை ஏதேதோ விசாரித்தார்; அவனே 'நான் யாருமில்லாத அனாதை' என்ற ஒரே வரியைத்தான் பல்லவியாக்கிப் பாடினன். அவனுக்கு மயக்கம் வந்தது. அவர் அழைத்துப்போய், நல்ல சாப்பாடு போட்டார். அவரைப் பார்க்க அவனுக்கு அதிசயமாயிருந்தது. நன்றி சொல்லிவிட்டு, வீட்டுத் திண்ணையில் தலைக்குக் கையை அணை வைத்துப் படுத்துக் கொண்டான். தன்னை நினைத்தான்; தன் விதியை நினைத்தான். சுந்தரி அவன் நெஞ்சிலிருந்து நினைவில் எட்டிப் பார்த்தாள்.

''....சுந்தரி....! நீ இந்நேரம் அந்தப் பாவிப் பயல் கஜேந்திரனின் உரிமையாகி யிருப்பாயே! மூன்று வருஷங்களுக்குமேல் ஆகிவிட்டனவே உன் ஆசை முகம் கண்டு. உன்னைக் கடைசி முறையாகக்கூடக் காண கொடுத்து வைக்கமாட்டேனா நான்?....' என்றெண்ணும்போது, அவனுக்கு கஜேந்திரனைப் பழி வாங்கும் நினைவு விசுவரூபம் எடுத்தது.

'கஜேந்திரா, இதோ வருகிறேன் உன்னைப் பழிக்குப் பழி வாங்க!' என்று, வெறி பிடித்தாற்போல அவன் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து, வெளியே இறங்கினன்.

அதே சமயம், அவனுக்கு உணவு தந்த மனிதர் முன் வந்து, ''தம்பி, என்ன புறப்பட்டுவிட்டாய்? இங்கேயே தூங்கு. நாளையிலிருந்து என் மில்லில் நீதான் மானேஜர். உன்னைக் கண்டதுமே எனக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. மானேஜர் கோலத்தில் உன்னை நாளை நான் பார்ப்பதற்குத் துடிதுடிக்கிறேன்....! தம்பி, உன்னிடம் ஒரு முக்கியமான சேதி சொல்ல வேண்டும்.... உள்ளே பார்....! மஞ்சத்தில் படுத்திருக்கிறவன் என்னுடன் சேர்ந்து தொழில் நடத்திய பங்குதாரன் கஜேந்திரன். என்னை வஞ்சித்து, இன்று அவன் பெரிய பாங்கராகிவிட்டான். அவனை இன்று என்னுடைய விருந்தாளியாக்கி விட்டேன். இப்பொழுது அவன் வசமிருக்கும் லக்ஷ ரூபாயையும் எப்படியும் அபேஸ் செய்துவிட்டால்தான் நான் நிம்மதி யடைவேன். என்னை ஏமாற்றிய அவனைப் பதிலுக்கு ஏமாற்றினல்தான் எனக்கு நெஞ்சு ஆறும். நீ செய்யவேண்டிய உதவி, தெருவில் போலீஸ் வந்தால், என்னிடம் ரகசியமாய்ச் சொல்லவேண்டிய தொன்றுதான்....!'' என்று ரகசியமாகச் சொன்னர்.

ராஜேந்திரன் எடுத்த எடுப்பிலேயே ''சரி'' என்று விட்டான். தேடிப்போக இருந்தான் மூலிகைக்கு; அதுதான் அவன் வழியில் காலில் சிக்கிக்கொண்டு விட்டதே....! ''கஜேந்திரா! நீ என் அண்ணனா....? பார், என் வீரத்தையும்! என்னை வஞ்சித்த உன்னையும் நான் வஞ்சிக்க கடவுள் நல்ல சந்தர்ப்பத்தைத் தேடி வந்து எனக்குக் காட்டியுள்ளார்....'' என்று நினைத்தவனாக, அந்த மனிதரைத் தொடர்ந்தான். அவனுக்கு மனம் அடித்துக் கொண்டது.

அந்த மனிதர் உள்ளே நடந்தார். அவன் தூண் மறைவில் ஒதுங்கினன். கஜேந்திரன், தன்னை மறந்து தூக்கத்தில் லயித்துவிட்டிருந்தான். அவன் மேனி முழுமையிலும் வைரங்கள் ஜொலித்தன.

அந்த மனிதர் பூனைபோல கஜேந்திரனை நெருங்கினர்; ஸ்டூலில்

கிடந்த ரிவால்வரைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டார்; உடம்பு பதறியது; ரிவால்வரைக் கையிலெடுத்துக் குறி பார்த்த சமயம்; ராஜேந்திரனுக்கு என்ன தோன்றியதோ, வெளியிலிருந்து உள்ளே 'விசுக்' கென்று ஓடினன். அந்த மனிதர் கையில் குறி பார்த்து வைத்திருந்த ரிவால்வரைத் தான் பிடுங்கிக்கொண்டு, ''ஐயா, இந்தத் துரோகியைக் கொன்ற புண்ணியம் என்னையே சாரட்டும்....'' என்று சொல்லி, ரிவால்வரின் விசையைப் பிடித்து அழுத்தினன்.

குண்டுகள் வெடித்த சத்தம் எதிரொலித்தது; அதே தருணத்தில் ''ஐயோ, அத்தான்'' என்ற ஓலமும் சேர்ந்து எதிரொலித்தது. உணர்வு ஒடுங்க, உள்ளம் ஒடுங்க, தலையைத் திருப்பினன் ராஜேந்திரன். அங்கே சுந்தரி கதறி ஓடி வந்து கஜேந்திரனின் ரத்தம் சொட்டின உடம்பைக் கண்டு கதறினுள். ''ஆ!'' என்று அலறினுர் அந்த மனிதரும்.

கனவினின்றும் விழிப்பவர் போல, கஜேந்திரன் மெல்லக் கண்களைப் பிரித்து, ராஜேந்திரனைப் பார்த்தார்; அவர் பார்வையில் சிரிப்பு குரல் தந்தது.

''ஐயோ, என்னுங்க இதெல்லாம்....? வெத்து வேட்டுக் குண்டுகளை அல்லவா ரிவால்வரிலே வைத்திருந்தேன். கடைசியில் நிஜக் குண்டுகள் இதில் எப்படி வந்தன? ரத்தம் சொட்டுகிறதே..! நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன்...இந்த விஷப்பரீட்சை வேண்டாமென்று நான் அப்போதே உங்களிடம் மண்டியிட்டுக் கெஞ்சினேனே, ஐயா...!'' என்று விம்மினுர் அந்த மனிதர். ஆம்; கஜேந்திரனைக் கொல்ல முயன்ற அதே மனிதர்!

''சோமையா, நீங்கள் ஏன் இப்படிப் பதறுகிறீர்கள். நீங்கள் ஜாக்கிறதையாக அந்த ரிவால்வரில் வைத்துச் சென்ற வெத்து வேட்டுக் குண்டுகளை நீக்கிவிட்டு, நானே

ஆற்றில் கொந்தளிட்டு வரும் செந்நீரைக் கண்டு மேற்கே மழை பெய்ததை உணர்கிறேம். காணுத மழையைக் காணும் செந்நீரைக் கொண்டு நிர்ணயிப்பது போன்றதே, இறைவனின் ஆக்கங்களைக் கண்டு அவனை நிர்ணயிக்கும் தன்மையும்.

—வெ. ஸ்ரீ.

தான் நிஜ வெடிக் குண்டுகளை ரகசியமாகத் திணித்துவிட்டேன் ரிவால்வரிலே, விஷப்பரிட்சையை விஷப்பரீட்சையாகவே ஆக்கிக் கொண்டேன். இப்போது என் மனம் எவ்வளவு சாந்தியடைகிறது தெரியுமா? என் நெஞ்சிலிருந்து சொட்டும் ஒவ்வொரு துளி ரத்தமும் என் தம்பிக்குச் செய்த பாவத்துக்குப் பரிகாரம் கோருகின்றன...ஆஹா....'' என்ருன் கஜேந்திரன். அவன் கண்கள் சுழன்றன. மறுபடியும் மயங்கி விழுந்துவிட்டான்.

''அத்தான், நீங்கள் பாவி. பெரிய அத்தானை ரத்தம் சொட்டச் சுட்டுவிட்டீர்களே! ஐயோ, அத்தான்'' என்று அலறினுள் சுந்தரி.

''ஆம்; நான் தான் கொன்றேன். அதற்குரிய தண்டனையை அனுபவிக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனுல்.... ஆம்; எனக்குரிய கிளியை இந்தப் பாவி தனக்குரியதாக ஆக்கிக் கொண்டானே, இவனுக்கு இந்தத் தண்டனை போதவே போதாது; அப்படியே துண்டம் துண்டமாக....''என்று வீறிட்டான் ராஜேந்திரன்.

''தம்பி, நிறுத்து இப்போது எல்லாம் உனக்குப் புதிராகத்தான் படும். நான் உன்னிடம் சற்றுமுன் சொன்னதெல்லாம் நடித்ததெல்லாம் வெறும் நாடகம். அந்த வெறும் நாடகம் கடைசியில் உன்னுல் உண்மை நாடகமாகி விட்டது. எனக்கு உப்பிட்டு வளர்ப்பவர்

இந்த கஜேஜந்திரன்தான். ஆனால்' பாவம், இவருக்கோ அடிக்கடி சித்த சுவாதீனம் அற்றுவிடுகிறது. உன்னைப்பற்றியும் ஏற்கனவே நான் அறிவேன். சாயங்காலம் நீ அவர் வீட்டில் அடியெடுத்து வைப் பதைக் கண்டு அவர் குதூகலித் தாராம்; ஆனால் நீயோ அடுத்த நிமிஷமே மறைந்து விட்டாயாம். கடைசியில் என்னிடம் சொல்லி, உன்னை எப்படியாகிலும் கண்டு பிடித்து வைத்துக் கொள்ளச் சொன்னார். உன்னைக் கண்ட களிப் பில் அவர் தன்னை மறந்தே போனார். பல நாட்களுக்குப் பின் னர், இன்றைக்குத்தான் அவர் சிரித்தார். ஆம்; அன்று உனக்கு அவர் செய்த தீவினையை உணர்ந்து அதற்கு மன்னிப்புக் கோர அவர் துடியாய்த் துடிக்கிறார். சுயநினைவு வரும்போதெல்லாம் ''தம்பி, தம்பி'' என்று கத்துகிறார். அப் படிப்பட்ட சமயத்தில் தான் அவர் என் வீட்டிலே இந்த விஷப் பரீட்சையை நடத்தச் சொன்னார். நான் கஜேந்திரனைக் கொன்று, அவர் பணத்தை அபகரித்துக் கொள்ளப் போவதைப் போலவும் என்னை நடிக்கச் செய்து, ரிவால் வரையும் தந்தார். விஷயத்தை உன்னிடம் நான் சொல்லி, அதிலி ருந்து உன் மனத்தை அறியவும் எண்ணியிருக்கிறார். முன் கதை பூராவையும் அறிந்த நானே ரிவால்வரில் போலிக் குண்டுகளைத் திணித்துவிட்டு, உன்னிடம் அந்த நாடகம் போட்டேன். நீயோ பழைய வஞ்சத்தை மறக்காமல், உன் உடன் பிறந்தானிடம பழி தீர்த்துக் கொள்ள ரிவால்வரை உபயோகித்து விட்டாய். ஆனால், ரிவால்வரில் வேண்டுமென்றே எப்படியோ நிஜக் குண்டுகளை அவர் நுழைத்து விட்டிருக்கின் றாரே....! விதி விளையாடி விட்டதே! ஐயோ! பாவம்! என்றோ ஓர் நாள் அவர் உனக்குத் துரோகம் செய் திருக்கலாம்; ஆனால் அவர் தன் தவறுக்குப் பிராயச்சித்தம் தேடி, உன்னிடம் மன்னிப்புப் பெற இத் தனை நாட்களும் நடைப்பிணமாக, அரைப்பைத்தியமாக கிடப்பதை நீ எங்கே அறியப் போகிறாய்? பார், இத்தனை கடிதங்களும் உனக்கு எழுதியவை, அங்கங்கே தெரிந்தவர்கள் மேல்விலா சமிட்டு! ஆனால் அவை எல்லாமே கடைசியில் திரும்பிவிட்டன. எல் லாம் உன்னிடம் மன்னிப்புக் கோரத்தான்! ஆனால் இன்று நீ பிரயோகித்த ரிவால்வர் காட்டிய அவரின் ரத்தத் துளிகள்தாம் ஒரு வேளை அவருக்குப் பரிகாரம் சொல்லியிருக்கும் போலும்...! பாவம்....!'' என்று குரல் கம்மக் கூறினார் அந்த மனிதர் சோமையா.

ராஜேந்திரன் ஒரு கடிதத்தைப் படிக்கலானான் :

''என் அருமைத் தம்பி ராஜேந் திரனுக்கு,

உனக்கு அதிசயமாக இருக்கும்; ஆத்திரமாகவும் இருக்கும். எனக்கு நல்ல நினைவு இருக்கையில் இக் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன், உன்னை ஆசையுடன் 'தம்பி' என்று நெஞ்சடியிலிருந்து எழும் அன்புடன் கூப்பிடுவதில் என் பாவம், நான் உனக்குச் செய்த பாவம் அனைத்துமே பரிகாரம் தேடிக் கொண்டதாக எண்ணு கிறேன். அன்று நான் உனக்குச் செய்தது பாவம் தான்; குற்றம் தான்; துரோகம் தான். இளம் ரத்த வெறியில் தான் சுந்தரியை அடைய வேண்டுமென்றிருந்த கனவு வெறியில் தான் உன்னை போலீசுக்குக் காட்டிக் கொடுத் தேன். ஆனால் நான் சுந்தரியை அழைத்து வந்த அன்றிரவு அவள் தற்கொலை புரிந்துகொள்ளவிருந்த சமயம் நான் அவளைப் பார்த்து விட்டேன்; அவள் சின்ன அத் தானை அதாவது உன்னையே தான் மணம்புரிந்து கொள்வேன்; இல்லை யேல் இறப்பேன் என்று விறிட் டாள். என் மனத்தை தெய்வம் மாற்றியது. நான் நல்லவனாக மாறினேன். சுந்தரியை உன்னி டமே ஒப்படைப்பதாக வாக்குக் கொடுத்து, என் நண்பர் சோமையாவின் வீட்டில் தங்கச் செய்தேன். நான் அவளிடம்

கொடுத்த வாக்கைக் காப்பாற்றினால் தான் எனக்கு ஆறுதல்! தம்பி, ஓடிவா....! சொத்து சுதந்திரம், உனக்காக சுந்தரியின் பெயரில் கட்டியுள்ள 'சுந்தரி பவனம்' எல்லாம் உன் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்ட 'உயில்' உன் வரவுக்காகக் காத்திருக்கிறது. உனக்குச் செய்த பாவத்திற்கு, தெய்வம் தந்த தண்டனை எனக்கு அரைப் பைத்தியம் வந்ததுதான்! நடைப் பிணமாக உழலும் எனக்கு ஆறுதல் தர ஓடிவா.... தம்பி! ஓடி வந்து, உன் ஆத்திரம் தீர, உன் கையாலேயே வேண்டுமானாலும் நீ என்னைக் கொன்றுவிடு! நான் அப்போதுதான் குற்றத்துக்குத் தக்க தண்டனை பெற்றவனாகி, செய்த பாவத்துக்குத் தக்க பரிகாரத்தைச் சம்பாதித்துக் கொண்டவனாக நிம்மதியுடன் இறப்பேன்....! ராஜேந்திரா, என்று நான் உன்னைக் கண்டு மன்னிப்புப் பெறுவேன்? என்றைக்கு உன்னையும் சுந்தரியையும் தம்பதிகளாக மணக்கோலத்தில் காணும் பாக்கியம் செய்வேனோ....? தெய்வமே, இந்த ஒரு வரத்தையாகிலும் என் பொருட்டு இரங்கி அருள்வாயா?....

இப்படிக்கு,
உன் தமையன்,
கஜேந்திரன்''

''ஐயோ, அண்ணா!'' என்று அலறியவாறு, கஜேந்திரனைக் கட்டிப் பிடித்துக் கதறினான் ராஜேந்திரன்.

அப்பொழுதுதான் கஜேந்திரனின் முகத்தில் சாந்தி படர்ந்து ஒளி வீசியது!

ராஜேந்திரனும் சுந்தரியும் நெஞ்சு வெடிக்கக் கதறிக் கொண்டிருந்தார்கள்!

தாதி மகள்

அவள் அவ்வளவு அதிகமாகப் பேசக்கூடாது, உணர்ச்சிவசப் படக்கூடாது, அதனால் அவளது ஜுரம் அதிகமாய்விடும் எனத் தன் மகளை எச்சரிப்பதற்காக டோராதியின் தாய் இரண்டு தடவை வாசல் நடையண்டை வந்து எட்டிப் பார்த்துவிட்டாள்.

''ஓயாமல் நீ பேசிக்கொண்டிருக்கிறாய். முழுக்க முழுக்க நீயே தான் விளையாடுகிறாய்.''

அடுக்கான தலையணைகளின் மீது சாய்ந்தவண்ணம் டோராதி தன் சிறு படுக்கையில் அமர்ந்திருந்தாள். அவளது அழகுப் பொம்மைகள் அனைத்தும் சுற்றிவர அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. விளையாட்டு மும்மரத்தில், அவளது பொன்னிறக் கூந்தல், ஊதாநிறத் தொப்பியின் கட்டுக் காபந்தையும் மீறி வெளிவந்து நெற்றியில் புரண்டது. கூந்தல் கற்றை கண்களில் விழுவதை தலையை உலுக்கித் தடுத்து விட்டு அவள் பதிலளித்தாள் :

''இல்லையம்மா, நான் மட்டும் விளையாடவில்லை. நெனியும் விளையாடுகிறாள்.''

நெனி தாதியின் பெண்.

யதார்த்தமாகப் பார்க்கப் போனால், அந்த நிமிஷம் வரை நெனி வாய்திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஒவ்வொரு தடவையும், பயம் கவ்விய உளத்தோடு, கதவை எட்டிப் பார்க்கும் சிமாட்டியை மிரண்டு நோக்கியிருக்கிறாள் அவள். கதவுப் பிடி திரும்பும் சப்தம், கதவு திறபடும் பொழுது எழும் கிரீச் ஒலி, டோராதியின் அம்மாவின் தோற்றம், அவளது குரல் பாவம் எல்லாமாகச் சேர்ந்து கடந்த இரண்டு மணி நேரமாக நெனி சஞ்சரித்த உல்லாசக் கனவுலகத்தைத் தகர்த்து நொறுக்கி விட்டன. அவ்வளவு நேரமும் அவள் ஒரு அதிசய உலகில், கண்ணால் காண்பன எல்லாம், கையால் தொடுவன எல்லாம் உண்மைதானா என்ற பிரமையுடன் இருந்தாள்.

மோசமாகத் தைக்கப்பட்டிருந்த, பச்சைப் பட்டாணி நிற கவுன் அணிந்திருந்தாள் அவள். கடந்த இரண்டு வருஷ காலமாக அவள் அந்த கவுனையே தான் அணிந்து வந்தாள். இப்பொழுது அது கழுத்தருகில், கக்கத்தில் எல்லாம் பிடித்தது, தோள்பட்டைகளை அதிகமாக இறுக்கியது. பெரும்பாலும் சாயம் போன வெண்சிகப்பு நிற ரிப்பன் அவள் தலையைச் சுற்றி அலங்காரத்துக்காகக் கட்டப் பட்டிருந்தது, அடர்ந்து ஊடே சிக்குப் படிந்த கருங்கூந்தலின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் தளர்ந்துகொண்டிருந்தது. அவள் கூந்தலில் ஈரம் இன்னும் உலரவில்லை. அன்று தான் விசேஷமாக அவள் தலை முழுகியிருந்தாள். அன்று முதன் முறையாக அந்த வீட்டிற்கு வந்ததும், அழகாகக் காட்சியளித்த சுவர்கள், பட்டுத் திரைகள் எல்லாவற்றையும் பார்த்ததும், கனவுலகில் சஞ்சரிப்பதாகக் கருதினாள். சுற்றிலும் காணப்பட்ட சுக சௌகரியங்களைக் கண்டு கண்கள் கூச, வாய் மௌனம் ஆக நின்றாள். பின் மெதுவாக, என்ன செய்கிறோம் என்ற உணர்வே இல்லாமல், தனது மென்மையற்ற கரங்களை — கௌனின் பிடிப்பால்

மூலக் கதை: லூயிஜி பிரண்டல்லோ. தமிழாக்கம்: அசோகன்

ஏழைமைச் சூழ்நிலையில் வளர்ந்த சிறு குழந்தையின் உள்ளத்தில் அந்தப் பணக்கார பொம்மை என்ன குழப்பத்தை உண்டாக்கி விடுகிறது....! நெஞ்சை உருக்கும் அற்புதச் சிறுகதை.

திரண்டு காட்சியளித்த கரங்களை நீட்டி விரல்களால் பட்டுத் திரைகளின் மிருதுத் தன்மையை ஸ்பரிசித்துப் பார்த்தாள். திறந்த வாய் மூடாமல், வியப்பால் விரிந்த கண் இமைக்காமல், சின்ன யஜமானி கொஞ்சம்கூட ஓயாமல் பொரிந்து தள்ளுவதைக் கவனித்து நின்றாள்.

நெனியின் மௌன வியப்பு; மத்தியான வேளைகளில் வீட்டிற்கு விஜயம் செய்து வம்பளக்கும் சீமாட்டிகள் மாதிரி ஒரு வட்டமாக அமர்த்திவைக்கப்பட்டிருந்த அந்த ஏழு பொம்மைகளையே அவள் கூர்மையாகக் கவனித்தது, எல்லாமாக பொம்மைகளுக்கு புது உயிர்ப்பு ஊட்டின. இப்பொழுதைய இந்தச் சந்தர்ப்பம் வரை, சமீப காலமாக, அந்த பொம்மைகள் வெறும் பொம்மைகளாக மட்டுமே, மரத்தால், மெழுகால், பளிங்கால் ஆனவைகளாக, கண்ணாடிக் கண்கள், சவுரித் தலைகள் உடையனவாக மட்டுமே காட்சியளித்து வந்தன. ஆனால் இப்பொழுதோ திரும்பவும் அவை உயிர்ப்பு அடைந்து விட்டன. அவள் கற்பனைக்கு எட்டாத அளவு ஜீவன் பெற்றுத் திகழ்ந்தன. அவற்றில் மறைந்திருந்த உருவங்கள் பொம்மைகளை மறைத்து அப்படி திடீரென வெளிப்பட்டதைக் காண அவளுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. எல்லாம் எதனால்? ஒரு வேலைக்காரியின் மகளான சிறுமி நெனியின் வியப்பு காரணமாக. தன் பேச்சை நெனி நம்ப வேண்டுமென்பதற்காக, பொம்மைகளை, சொந்த விருப்பு வெறுப்புகள், அகங்காரம், ஜம்பங்கள் மிகுந்த சீமாட்டிகளின் தோரணையிலே—தத்ரூபமாக அவளது அம்மாவின் பணக்கார சிநேகிதிகள் மாதிரியே—பேசச் செய்தாள் டோராதி.

''அதோ, பார்த்தாயா அவளை! அவள்தான் லூலூ சீமாட்டி. அவளுக்கு கார் இருக்கிறது. காரை அவளே ஓட்டுவாள். கோல்ட்-டிப் சிகரெட்டுகள்தான் பிடிப்பாள். சதா கைவிரல்களை இப்படிக் கோர்த்து வைத்துக்கொள்வாள். 'மொரிங்கி, மொரிங்கி, நீ ஓடிப்போக முயன்றால் நானும் பின்தொடர்ந்து உன் கூடச் சேர்ந்து கொள்வேன்' என்று சொல்வாள்.''

யார் அந்த மொரிங்கி? நெனிக்குத் தெரியாது. ஒரு மந்திரவாதியாக இருக்கலாம். டோராதியின் அம்மாவின் சிநேகிதனாக இருக்கலாம். அவளது நண்பிகளின் நண்பனாக இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு முறையும் லூலூ சீமாட்டியின் குரலைக் கேட்டபொழுது, நெனி மொரிங்கியை ஒரேமாதிரித் தோற்றமுள்ளவனாக, ஒரு மந்திரவாதியாகத்தான் கற்பனை செய்தாள். ஏனென்றால் டோராதி அவளுக்குச் சொன்னாள், ஒரு ஓரத்தில் இருந்த மிஸ்ட்ரஸ் பெட்டி என்ற பொம்மையின் அபிமான நண்பன் அவன் என்று.

''ஆல்ரைட், தேங்க் யூ!''

''ஊஹூம், நெனி. நீ இதற்குச் சிரிக்கக்கூடாதம்மா! மிஸ்ட்ரஸ் பெட்டி எப்பொழுது பார்த்தாலும் இங்கிலீஷ்தான் பேசுவாள் — என் அம்மாவிடமும், மற்ற எல்லோரிடமும். எப்பொழுதும் குதிரை மேல்தான் வருவாள், டக், டக், டக்கென்று! ஆனால் குதிரை மேல்

அவள் உட்கார்ந்திருக்கும் கோலம் தான் பார்க்கச் சகிக்காது. காலைப் பிளந்துகொண்டு, ஆண்பிள்ளைகள் குதிரை சவாரி செய்கிற மாதிரி.... பெண்கள் குதிரைமீது அப்படி உட்காருவது ஆபாசம்.... அவள் அடிக் கடி குதிரையிலிருந்து விழுந்து விடுவாள். ஒரு சமயம் சில ஓநாய்களைத் துரத்திக் கொண்டு அவள் குதிரையில்போனபோது, அப்படி விழுந்து கன்னத்தில் காயம். நீதான் பாரேன், கன்னத்தில் அதோ வடு! தெரிகிறதா? அவளுக்கு அது நல்லா வேணும்— முரட்டு அமெரிக்கப் பொம்பிளை அவ! கீழே விழுந்து ஏற்பட்ட காயங்களை எல்லோரிடமும் காட்டுவதில் அவளுக்கு ஒரு பெருமை. மார்பில், முதுகில், கால்களில் எல்லாம் காயங்கள் பட்டிருக்கின்றன அவளுக்கு. அவள் உன்னோடு கை குலுக்கினால் அவ்வளவுதான், உன் கை சுளுக்கிக் கொள்ளும்!''

''ஆல்ரைட், தேங்க்யூ''.

''இன்னொரு பொம்மை, அதோ அங்கே இருக்கிறதே! அவள் ரொம்ப ஜாலியானவள். சிரித்துச் சிரித்து உனக்கு உசிர்போகும்படி செய்துவிடுவாள். அவள் பெயர் டோனா மரியா. அவள் பேசுவதை நீ கேட்கணும். 'ஹோ, குட்னஸ், க்ரேஷியஸ்! என்ன மறதிடா எனக்கு.... நீ ஒண்ணு தெரிஞ்சுக்கணும். எனது இருதயம் ரொம்ப பலவீனமானது.... மொரிங்கி, விளையாட்டு இல்லே. நான் ஸீரியஸாப் பேசறேன். நீ என்னை பைத்தியமா யடிக்கிறாய். மொரிங்கி இனி என்னால் சிரிக்க முடியாது. என் ஹார்ட் வீக்'. சிரிக்க என்

பதை மொரிங்கி செரிக்க என்று உச்சரிப்பான். அவனைக் கேலி செய்வதற்காக அவளும் அவன் மாதிரியே உச்சரிப்பாள். அம்மம்மா, அவள் வேடிக்கைகள்!''

நெனியின் ஆச்சரியம் அளவு கடந்தது.

பொம்மைகளில் ஒன்று சிகரட் குடிக்கும், இன்னொன்று குதிரை சவாரி போகும் என்பதெல்லாம் உண்மையாக இருக்குமா என யோசித்தாள் அவள். ஆனால் அந்த பொம்மையின் கன்னத்தில் காயம் பட்ட வடு இருக்கிறதே.... அந்த பொம்மைகள் எல்லாம் 'லேஸ்' வைத்துத் தைத்த உடைகள் அணிந்திருந்தன. தலையில் ரிப்பன் வைத்து முடிந்திருந்தன. ஸில்க் ஸ்டாக்கிங்குகள், வெல்வெட்டுப் பட்டைகள், தங்க 'பக்கிள்'ஸுடன் கூடிய உயர்ரக பூட்ஸ்கள் அணிந்திருந்தன. இப்படியெல்லாம் இருந்தபொழுது சிகரெட் குடிப்பது, குதிரை சவாரி போவது, அவளுக்கு புரியாத பாஷையில் பேசும் என்பது எல்லாம் ஏன் உண்மையாக இருக்க முடியாது? எதுவும், என்ன அதிசயம் வேண்டுமானாலும், அந்த அறையில் நடக்கக்கூடும். எந்த க்ஷணத்திலும் குதிரைகள்—உயிர் உள்ள, சின்னஞ்சிறு சிங்காரக் குதிரைகள் — குதிபோட்டுக் கொண்டு வந்து வெல்வட் ஜமக்காளத்தின் மீது நடை போடலாம்; அவற்றின் முதுகில் ஏறி அமர்ந்து, சல்லாத்துணி மேலாக்கு காற்றிலே அலையோட அந்த பொம்மைகள் பவனி வரலாம் என எதிர்பார்த்தாள் அவள்.

கண்ட காட்சிகளில் மனம் பறிகொடுத்து, கண்களை நம்ப இயலாதவளாக, டோராதி என்ன சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ளச் சிரமப்படுபவளாக நின்றாள் அவள். விளையாட்டில் அலுப்புத்தட்டவே சின்ன யஜமானி கடைசியாக ஒரு பொம்மையை அவளுக்கே பரிசளிக்கத் தீர்மானித்துவிட்டாள். ஆனால் அது எந்தப் பொம்மை என இன்னும் நிச்சயமாகவில்லை.

''இல்லை. அதில்லை'' என்றாள் டோராதி. ''அவள் கை ஒடிந்திருக்கிறது. அவள் என்னுடன் படுக்கையில் இருக்க வேண்டும். இவளைப் பார். இவளை, மிஸ்ட்ரஸ் பெட்டியை நான் உனக்குக் கொடுக்கிறேன்....ஊஹூம் அவளையும் தரமுடியாது...அவள் ஒரு குறும்புக்காரி—முரடி. அதுவும் அவள் சதா இங்கிலீஷில் தான் பேசுவாள். உனக்குப் புரியாது. இவளைத் தருகிறேன். இவள் பெயர் மிமி. ஆனால் இவளை நீ ''யஜமானி'' என்றுதான் அழைக்க வேண்டும், ஏன் தெரியுமா? அவள் ஒரு சீமாட்டி—மார்ஷியானஸ், அப்படி என்றால் என்ன என்று உனக்குத் தெரியுமில்லையா? அவள் மார்ஷியானஸ் மிமி. அப்படி அழைக்கப்பட வேண்டும் என கண்டிப்பாக விரும்புபவள், ஒவ்வொரு நாள் காலையிலும் அவள் ஸ்னானத்திற்குத் தேவையான எல்லாம் தயாராக இருக்க வேண்டும். பின்பு, காலையாகாரத்திற்கு சாக்லட்டுகள், பிஸ்கட்கள். ஆனால் இதையும் கவனி....அவளுக்குப் பசி மந்தம்....வெள்ளி நிறக் கடுதாசியில் பொதியப்பட்டுள்ள மிட்டாய்களை மட்டுமே தின்பாள். அம்மா ரொட்டிக் கடையில், பிராண்ட் ஓட்டலுக்கு எதிரேயுள்ள கடையில் வாங்குவாளே அந்தரக மிட்டாய்கள், அதைத்தான் தின்பாள். வேறு எதையும் சாப்பிடமாட்டாள். நான் உனக்கு மிமியைத் தருகிறேன். எடுத்துப் போ. உனக்கே உனக்குத்தான், தெரிந்ததா?...கொஞ்சம் பொறு.... நான் அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டுத் தருகிறேன். சரி, இனி நீ அவளை எடுத்துப் போகலாம்.''

நெனிக்கு ஒரே குழப்பமாகப் போய்விட்டது. திகைப்பு அவள் மகிழ்விற்குத் தடையாக நின்றது. அவள்பாடு பெரும் சங்கடமாகப் போய்விட்டது. பரிசுப் பொருளை டோராதி அவள் கரத்தில் அழுத்தினாள். உடனேயே உட்கார்ந்திருந்த அவள் எழுந்துவிட்டாள்.

கை நீட்டி வாங்குவதா வேண்டாமா எனத் தயங்கினுள். கண்களில் நீர் திரையிட்டு, பொங்கி வழிந்துவிடும் போலிருந்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில் வீட்டு எஜமானி, தாதி—நெனியின் தாய்—பின் தொடர அறைக்குள் பிரவேசித்தாள். நெனியின் தாய் செவிலித்தாயாக அக்குடும்பத்தில் ஒண்டி, குழந்தைக்குப் பால் குடி மறந்த பின்பு வேலைக்காரியாக அங்கேயே ஐக்கியமானவள். தன் தாய், வீட்டு எஜமானி அருகில் அவ்வளவு கவர்ச்சிகரமான ஆடையணிந்து நர்ஸ் உடுப்பிற்கு மேல் ஒரு 'எம்பிராய்டரி முந்தாங்கி' அழகு செய்ய நிற்பதைக் கண்ட நெனிக்கு, அந்த வீட்டு அதிசயச் சூழ்நிலைக்கு ஏற்ப தன் அம்மாவும் மாறுதல் அடைந்துவிட்டாளோ, தனக்கு முற்றிலும் அன்னியமானவளாகி விட்டாளோ எனத் தோன்றியது.

அவள் அம்மா என்ன சொல்கிருள்?

அவளுக்கு டோராதி பொம்மை கொடுக்கக் கூடாது என்று கூறுகிருளே! பொம்மை மிகவும் அழகாக இருக்கிறது, உன்னத பூட்ஸ்கள், கை உறைகள், தொப்பி ஆகியவற்றுடன் உயர்தரமாக ஆடை அணிவிக்கப்பட்டிருக்கிறது. அதனுல் பொம்மையை நெனிக்குக் கொடுக்கக் கூடாது என்கிருளே! நெனிக்கு அது போன்ற பொம்மையைக் கொடுப்பதாவது! அதை வைத்துக்கொண்டு அவள் என்ன செய்யப் போகிருள்! பொம்மை வைத்து விளையாடுவதானுல் வீட்டு வேலை என்னுவது? அப்பாவிற்கு உடந்தையாக அவள் வேலை செய்ய வேண்டாமா? விளையாட நேரம் ஏது? அப்பா இரவில் வீடு திரும்பும்போது தேவையான உதவி செய்யத் தயாராக இல்லை என்றுல் அவள் பாடு தொல்லை தான்.

அவள் அப்பா? அவர் எங்கே? அந்தச் சந்தர்ப்பதில் அவர்—அவளது பயங்கரத்தந்தை, முற்றிலும் மாறுபட்ட வேறு உலகத்தில் வசிப்பவராகத் தோன்றியது. குடிவெறியில் முணுமுணுத்தபடியே தான் சதா அவர் வீட்டுக்கு வருவார். ஒன்றுமில்லாததற்கெல்லாம் அவளை அடிப்பார். மிகவும் கொடூரமாக தலைமயிரைப் பற்றி இழுப்பார். கையில் அகப்படும் சாமான்களைத் தூக்கி அவள் மீது எறிவார். "அவனுக்குப் பதில் நீ செத்துத் தொலைஞ்சிருக்கக் கூடாதா?" எனக் கத்துவார்.

அவனுக்குப் பதில் என்று அவர் குறிப்பிடுவது அவள் சின்னத் தம்பியை. செவிலித்தாயாகப் போன பொழுது அவள் அம்மா அந்தக் குழந்தையை வீட்டில் விட்டுப் போனுள். ஏதோ கொஞ்சம் காசு ஒவ்வொரு மாதமும் வாங்கிக்கொண்டு ஒழுங்காக அந்தக் குழந்தைக்குப் பால் கொடுப்பதாக பக்கத்து வீட்டுக்காரி ஒருத்தி வாக்களித்திருந்தாள். நெனியும் குழந்தையைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு. ஒருநாள், அந்தச் சின்னத் தம்பி, அவளது கரங்களில், அவள் அவனைத் தூக்கிவைத்துக் கொண்டிருந்த பொழுது செத்துப் போனுன். அவன் இறந்துவிட்டான் என்பதைப் புரிந்து கொள்ளாத அவள் குளிர்ந்து, வெளிறி, விறைத்துப் போன

சடலத்தைக் கைகளில் ஏந்திய வாறே சுற்றி வந்து கொண்டிருந்தாள். வெளியிலிருந்து வந்து அதைக் கண்ட தந்தை, அன்று முதல் கடினமானவராக, கொடூரம் மிகுந்தவராக மாறிப் போனர். அவர் மாறுதலால் அவளது அம்மா அவருடன் வசிப்பது அசாத்தியமாயிற்று. பங்களாவிலேயே வேலைக்காரியாகத் தங்கிவிட்டாள். ''சீமாட்டியாகிவிட்டாள்'' என்று என்று அப்பா சொல்வார். இப்பொழுது தாயைப் பார்த்த நெனியும் தன் தந்தையைப் போலவே எண்ணத் தொடங்கினள். தாயின் தோற்றம், அவள் பேச்சு, புன்சிரிப்பு, அங்க அசைவுகள் எல்லாம், அவள் சீமாட்டியாக— டோராதியின் அம்மா மாதிரி— ஆகிவிட்டாள் என நினைக்கத் தூண்டின. தனது சொந்தத் தாய் என்ற எண்ணமே எழவில்லை.

''ஊஹூம். மிஸ் டோராதி! உனக்கு ஏன்தான் இந்த எண்ணம் வந்தது? அது சரிப்படாது! பாவம், நெனிக்குக் கொண்டு போய் அந்தமாதிரி அழகு பொம்மையைக் கொடுக்கலாம் என்று சொப்பனத்தில் கூட நினைக்கக் கூடாது நீ!''

ஆனல் வீட்டு எஜமானி குழந்தை நெனியின் கையைப் பற்றி மார்ஷியானஸ் மிமி பொம்மையை அவள் மார்பருகில் வைத்து அவள் கைகளால் அதைப் பலமாக அணைத்துக் கொள்ளும்படி செய்தாள்.

''உனது அறிவு எங்கே போய் விட்டது? தேங்க்ஸ் சொல்லாமல் இருக்கிருயே? ஒருவர் ஒரு பரிசு கொடுத்தால் என்ன சொல்ல வேண்டும் என்று தெரியாதா?'' என நெனியின் தாய் அதட்டினள்.

ஒரே மௌனம்! வாய்திறந்து சொல்ல வார்த்தை அகப்படவில்லை நெனிக்கு. மார்புறத் தழுவியிருந்த பொம்மையைச் சரியாகப் பார்க்கக்கூடத் துணிவு வரவில்லை.

இன்னும் திகைப்பு நீங்காதவளாக, விரியத் திறந்த கண்கள், வியப்பால் விரிந்தவாய், அவளது தாயின் முயற்சிகளையும் மீறிப் படிய மறுத்து, சிலிர்த்து நின்ற கேசம் ஆகியவற்றுடன் அவள் நடந்தாள். சுற்றுப்புறக் காட்சிகள், சப்தங்கள் எதிலும் லயிக்காமல், படியிறங்கி, தெருக்களில் நடந்து, அவள் தந்தையுடன் வசிக்கும் துரதிர்ஷ்டம் பிடித்த குடிசையை அடைந்தாள். அவள் தழுவியிருந்த குழந்தைக்கு அவளது சக்தியனைத்தும் மாறிவிட்டது போன்ற ஒரு உணர்வு. எஜமானியின் சிக்காளி மகள் அவளது ஓயாத பேச்சு மூலம் வர்ணித்தாளே அந்த வாழ்வை பொம்மை வாழ்வதாக ஒரு பிரமை. அப்படி வாழ்ந்து, டோராதி விவரித்த தோரணையில் பொம்மை பேச ஆரம்பித்தால் அவளால் புரிந்து கொள்ள முடியுமா?

''மொரிங்கி, மொரிங்கி, நீ ஓடிப்போனல் நானும் ஓடி வந்து உன்னோடு சேர்ந்து கொள்வேன்.''

மொரிங்கி அந்தக் குடிசைக்கு மார்ஷியானஸ் மிமியைத் தொடர்ந்து வர ஒருக்காலும் விரும்பமாட்டான். அவளது இதர சிநேகிதிகளான சீமாட்டிகளும் அப்படித்தான். அவர்களுக்கு கோல்ட்—டிப் சிகரெட்டுகள், வெள்ளிக் காகிதத்தில் பொதிந்த மிட்டாய்கள் எல்லாம் வேண்டுமே! குதிரைகள்—சின்னஞ் சிறு சிங்காரக் குதிரைகள், ஜீவகளை பொருந்தியவை தேவைப்படுமே!

தான் அந்த பொம்மையை வைத்து விளையாட முடியும் என்ற சிந்தனையே அவளுக்கு எழவில்லை. அவள் பேச்சை புரிந்து பதில் சொல்ல முடியாமற் போனல்? அவள் வாழ்க்கையை அறிந்து கொள்ள இயலாது போனல்?

அவள் வழக்கமாகப் படுத்துத் தூங்கும் தரித்திரம் பிடித்த சிறு அறையை அடைந்ததும், அங்கு கிடந்த வைக்கோல் அடைத்த

படுக்கை, ஒடிந்த பிரம்பு நாற்காலி, சின்ன பெஞ்சு எல்லாவற்றையும் பார்க்க வெட்கம் பிடுங்கித் தின்றது. அவள் சீமாட்டி மிமியை இன்னும் நன்ருகப் பார்க்கவில்லை. மார்ஷியானஸின் கண்கள் கண்ணுடியால் ஆனவை. எனவே அவள் அந்த அறையின் அலங்கோலத்தைக் காண முடியாது. பொம்மையை மார்போடு அணைத்து வைத்திருக்கும் வரை அது எதையும் பார்க்க முடியாது. கீழே இறக்கி வைத்து மிமி சீமாட்டி எப்படி இருக்கிருள் எனத் தான் பார்க்கத் துணியும்போது மிமியும் சூழ்நிலையை கவனித்து விடக்கூடும்.

மிஸ் டோராதிக்கு உபயோகப்படாது என ஒதுக்கிய நீலநிற முந்தாங்கி ஒன்று அவள் படுக்கைக்கு அடியில் இருந்த சின்னப் பெட்டியில் கிடந்தது ஞாபகம் வந்தது. அடிக்கடி துவைத்ததால் சாயம் போய் பல இடங்களில் கிழிந்து இருந்தது அது. இருந்தால் என்ன? அதை டோராதியின் அம்மா அவளுக்கு கொடுத்திருந்தாள் அவள் தாய் மூலமாக. எனவே பெரிய இடத்திலிருந்து வந்தது. டோராதிக்குச் சொந்தமாக இருந்தது. மார்ஷியானஸ் அதை அடையாளம் புரிந்து கொள்ளக்கூடும்.

பொம்மையைக் கீழே வைக்காமல், அதைக் கண்ணுல்கூடக் கவனிக்காமல், நெனி பெட்டியிலிருந்த அந்த முந்தாங்கியை எடுத்தாள். பெஞ்சின் மீது மேஜை விரிப்பு போல், கிழிசல் பாகங்கள் தெரியாதபடி நாசுக்காக விரித்தாள். ஆயிற்று, இப்பொழுது பொம்மையை உட்கார வைக்க இடம் தயாராகிவிட்டது. துணி பழசானுலும் சுத்தமாக இருந்தது. உயர்ந்த ரகத் துணி என்பதில் ஒரு திருப்தி.

பொம்மையை உட்கார வைத்தபொழுது அவள் கரங்கள் நடுங்கின. பொம்மையின் உடை கசங்கி விடக் கூடாதே என்ற பயம். கடைசியாகத் துணிவு பெற்று அவள் பொம்மையைக் கவனித்தாள். மரியாதையும் பரிவும் கலந்த பாவனையில் கைகூப்பி நின்று கவனித்தாள். முழங்கால் படியிட்டு அமர்ந்து பொம்மையின் கண்களைக் கூர்ந்து கவனித்தாள். அந்தோ! டோராதி வீட்டில் விளங்கிய அதிசயச் சோபை அஸ்தமித்துவிட்டதே! அங்கு, அந்தச் சூழ்நிலையில், அவள் எதிரே அமர்ந்து தான் மீண்டும் பழைய ஜீவகளைபெற அவள் ஏதாவது செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பது போல — இழந்த செல்வ வாழ்வை பெற உதவ வேண்டும் என வேண்டுவதைப் போல இருப்பதாக உணர்ந்தாள். என்ன செய்வது? எப்படிச் செய்வது? ஒன்றும் புரியவில்லை. அவளது பொம்மைகள் ஒரு நாளில் பல தடவைகள் உடைமாற்றிப் பழக்கப் பட்டவை என்று டோராதி சொல்லியிருந்தாள். மார்ஷியானஸ் மிமிக்குப் பல ஆடைகள், ஒன்றைவிட ஒன்று அழகாக, சிவப்பு மஞ்சள், வயலெட் என்று வண்ண வண்ணமாக, பூப் போட்டது ஜப்பானியக் குடைகள் அச்சிடப் பட்டது என்று ரகம் ரகமாக இருந்ததாகச் சொல்லியிருந்தாள். இப்பொழுது மேலே போட்டிருந்த அதே உடை, அணிந்திருந்த அதே தொப்பி, பூட்ஸ் காலுடன் சதா இருக்க முடியுமா? அதே சங்கிலி, விசிறியுடன் இருக்க முடியுமா? இறக்கைகளாலான அந்த விசிறிதான் என்ன அழகு? இதைக் கொண்டு விசிறினுல் எவ்வளவு சுகமாகக் காற்று வரும் என்று எண்ணத் தூண்டும் படியாக!

டோராதி வீட்டில், தேவையான எதுவும் கிடைக்கக் கூடிய சூழ்நிலையில், அந்த பொம்மைக் கட்டில்கள், உடை அலமாரிகளுக்கு மத்தியில் இருந்தால், எவ்வளவு மகிழ்வுடன் தான் மார்ஷியானஸ் மிமிக்கு வேலைக்காரியாக இருக்க முடியும் என நெனி எண்ணினுள். இங்கே அது முடியாதே! ஒரு சிறு கட்டிலும், இன்னும் சில ஆடைகளும் கொடுக்க வேண்டும் என்று ஏன் டோராதிக்குத் தோன்றவில்லை? அவளுக்குப்

பரிசுகள் அதிகம் வேண்டும் என்று ஆசை இல்லை. பாவம், பொம்மை கஷ்டப்படக் கூடாதே என்று தான். வீட்டில் எதுவும் இல்லாத போது, பொம்மைக்கு திருப்தி கரமாக எவ்வாறு சேவை செய்வது? அவளால் செய்யக் கூடியது, பூட்ஸ்களைக் கைக்குட்டை வைத்து சுத்தமாகத் துடைக்கலாம். வேறு ஒன்றும் முடியாதே!

திரும்பவும் பொம்மையை டோராதியிடமே எடுத்துப்போய், "அவளுக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் கொடு. இல்லையெனில் நீயே அவளை வைத்துக்கொள்" என்று கொடுத்துவிடலாம். அது நல்லதில்லையா?

அப்பொழுது டோராதி பொம்மைக்குரிய பொருள் அனைத்தையும் அவளிடம் கொடுத்துவிடக் கூடும்.

பெஞ்சு முன்பு அமர்ந்து நெனி பெரு மூச்சு உயிர்த்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். திடீரென அந்த அறையில் மார்ஷியானஸ் மிமியின் வீட்டு அறை ஸ்தாபிதமாகியிருக்கக் கண்டாள். மிகவும் விசாலமானதாக, தரையில் விரிக்கப்பட்ட நீல ஜமுக்காளம், நீல நிற விதானத்துடன் கூடிய தந்தக் கட்டில், ஆடைகள் நிரம்பிய கண்ணாடி அலமாரி, தங்க நிற நாற்காலிகள், நிலைக் கண்ணாடி எல்லாம் கொண்ட அறையில் தான் இருப்பதாகக் கண்டாள். கண்ணாடியில் பிரதிபலித்த உருவத்திலிருந்து தானும் தன் தாய் மாதிரி நர்ஸ் உடை அணிந்து தன் எஜமானியின் சேவையில் ஈடுபட்டிருப்பதாக உணர்ந்தாள். எஜமானியின் மனமறிந்து, அவளிடம் திட்டு வாங்கக் கூடாதே என்ற கவலையுடன் நடப்பதாக உணர்ந்தாள். எல்லா சௌகரியங்கள் இருந்தும் தவறு ஏதாவது நேர்ந்துவிட்டால் அவளைத்தானே சீமாட்டி கோபிப்பாள்? அவள் தவறு காரணமாக சீமாட்டியின் சிநேகிதிகள் கோபித்துக் கொண்டு போய்

"என் போட்டோ பாத்திங்களா? எப்படி?"

"இப்பத்தான் எலெக்ட்ரிக் ஸிஸ்டத்திலே கழுதையைக் கூட குதிரையா எடுக்குறுங்களே ஸார்!"

விடக் கூடும். மொரிங்கி வராமலே போகலாம். அதனால் சீமாட்டி குதிரை சவாரி போவது தடைப்படலாம். மிமிச் சீமாட்டி எப்பொழுதுமே கண்டிப்புத்தான்:

"நான் குளிக்க எல்லாம் தயாரா?"

"இதோ நிமிஷம் ஆகிவிடும் அம்மா!"

"நான் எழுந்திருக்கும் முன்பே எல்லாம் ரெடியாய் இருக்க வேண்டாமா? நான் காத்திருக்க முடியுமா என்ன? எனக்கு உடனே சாக்லெட்டும், பிஸ்கோத்தும் கொடு. உடைகளை தயாராக எடுத்துவை. ஜல்தி?"

"எந்த உடையை எடுத்து வைக்கட்டுமம்மா? சிவப்பு நிற ஆடையையா? மஞ்சளையா? பூப்போட்டதையா? ஜப்பான் குடை அச்சிட்டதையா?"

"வயலட் நிற ஆடையை உனக்குத் தெரியாது?"

''தெரியும். தெரியும். இதோ எடுத்து வைக்கிறேன்.''

வியப்புடன், கண் இமைக்காமல், அறை மூலையையே பார்த்துக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரமாக அவள் சம்பாஷணையை வாய்விட்டு, மார்ஷியானஸ் பாகத்தை உரக்கவும், தன் பாகத்தை பணிவாக பணக்கார எஜமானிக்கு தாழ்வுடன் பதிலளிக்கும் வேலைக்காரியின் பவ்யத்துடன்—நடத்தி வந்தாள். திடீரென ஒரு முரட்டு ராட்சசக் கரம் அவளுக்கு மேலாகத் தோன்றி பெஞ்சின் மீதிருந்த பொம்மையைப் பற்றி உயர்ந்ததும் அவள் திடுக்கிட்டுவிட்டாள்.

குழப்பத்துடன் தலை கவிழ்ந்து, ஓரக் கண்ணால் பின் பக்கம் கவனித்தாள்.

அங்கு அவள் தகப்பன் உறுமிய வண்ணம் நின்றிருந்தார். கையில் பற்றியிருந்த பொம்மையை அவர் கண்கள் ஆராய்ந்தன. தலையை ஆட்டிய வண்ணம் அவர் கத்தினார்.

''விஷயம் இவ்வளவுக்கு ஆகிவிட்டதா?''

அவர் தனது இன்னொரு கையை உயர்த்தி விரல்களால் பொம்மையின் தொப்பியைப் பற்றி அழுத்துவதைக் கண்ட நெனியின் இதயம் துடித்தது. ஒரு இழுப்பு. அவ்வளவுதான்! மார்ஷியானஸ் மிமியின் தலை துண்டாகத் தொப்பியுடன் வந்துவிட்டது. இதர பாகங்களையும் நசுக்கி எல்லாவற்றையும் கூரை அருகே உயரமாக இருந்த ஜன்னல் வழியாக விட்டெறிந்தார் அவர். அடுத்த கணம் அவளுக்கு ஒரு உதை தொடர்ந்தது.

''எழுந்திரு! இந்த மாதிரி முட்டாள்தனம் எல்லாம் இனி கூடாது. என் வீட்டில் சீமாட்டிகளுக்கு இடம் கிடையாது. தெரிந்ததா?'' என்ற உறுமல் எழுந்து எதிரொலித்தது.

ஆங்கில இலக்கியத்தில் அமர எழுத்துக்களை ஆக்கி, அழியாப் புகழ் பெற்றுத் திகழ்கிறவர்களில் ஆஸ்கார் ஒயில்டும் ஒருவன். அவன் எழுதியுள்ள நாடகங்கள், கவிதைகள், வசன கவிதைகள், கதைகள் எல்லாம் மிகவும் பிரபலமடைந்து விளங்குகின்றன. கற்பனை சிறகடித்துப் பறக்கும் அவனது எழுத்துக்களிலே. கவிதை நயம் கிளுகிளுக்கும் அவன் வசனத்திலே. நையாண்டிக் குறிப்புகள் மின்வெட்டும் அவனது கருத்துக்களிலே. குன்ருே இளமையும் புதுமையும் பூத்துக்கிடக்கும் அவனுடைய இலக்கியங்களிலே தனித்துவம் பெற்றது 'பிக்சர் ஆவ் டோரியன் கிரே' எனும் நவீனம். அதன் சுருக்கமே இங்கு தரப்படுகிறது.

★

தமிழில் தருபவர்:

ரா. சு. கிருஷ்ணஸ்வாமி

★

அதிசய ஓவியம்

1

மலர்களின் மணமும், கலைச் சிருஷ்டிகளின் அழகும் நிறைந்து விளங்கிய இடம் அது. புகழ் பெற்ற ஓவியன் பேஸில் ஹால்வார்டின் சித்திரக் கூடம் தான் அது. சூழ்நிலையின் இனிமையையும் எழிலையும் ரசித்தபடி ஸோபா ஒன்றில் சாய்ந்திருந்தார் லார்ட் ஹென்ரி வாட்டன். அமைதி கவிந்து கிடந்த அந்த இடத்திலே கூட, லண்டன் மாநகரத்து நாகரிகப் பேரோசைகள் தூரத்துப் பின்னணி கீதம் போல் அலைபாயத் தவறவில்லை.

அந்த அறையின் நடுவில், இளைஞன் ஒருவனின் ஓவியம் நின்றது. வசீகரிக்கும் அற்புத ஓவியம் படைத்த வாலிபனின் முழு உருவச் சித்திரம் அது. உள்ளதை உள்ளபடி ஓவியமாய் உருவாக்கி விட்ட திருப்தியோடு, பேஸில் அதன் முன் நின்று கவனித்துக் கொண்டிருந்தான்.

'பேஸில், இது மகத்தான சிருஷ்டி. நீ இதுவரை தீட்டியுள்ள ஓவியங்கள் எல்லாவற்றினும் மிகச் சிறந்தது இதுதான். இதை நம் நகரத்துக் கலைக் கழகத்துக்கு அனுப்பிவிடாதே. விசேஷக் கண்காட்சிக்கு 'அனுப்பு' என்று சொன்னர் ஹென்ரி.

அந்த அழகிய ஓவியத்தை எங்குமே அனுப்பப்போவதில்லை என்று பேஸில் அறிவிக்கவும், ஹென்ரி வியப்பால் விரிந்த கண்களோடு அவனை ஆராய்ந்தார். 'அவனுடைய உலகத்திலே பலரது பேச்சுக்குப் பொருளாக அடிபடு

72207

வது மோசம் தான். ஆனால் அதை விட மகா மோசமானது எவரது பேச்சுக்குமே ஆளாகாமலே போவது. உனது விபரீத முடிவுக்கு ஏதாவது விசேஷமான காரணம் இருக்கிறதா?' என்று கேட்டார்.

'நீ கேலி செய்வாய். இருந்தாலும் சொல்லி வைக்கிறேன். இது பலாது பார்வைக்கும் ஏற்றது அல்ல. இந்தப் படம் எனது உண்மைத் தன்மையை அதிகம் பிரதிபலிப்பதாக நான் உணர்கிறேன்' என்றான் ஓவியன்.

பிரபு அட்டகாசமாகச் சிரித்தார். 'உனது உண்மைத் தன்மையைப் பிரதிபலிக்கிறதாவது! கரடு முரடான உனது முக அமைப்பும், கன்னங்கரிய உன் கூந்தலும் எங்கே! வெண்தந்தத்தினாலும் ரோஜா இதழ்களாலும் உருவாக்கப் பெற்ற அழகு மன்மதன் போல் விளங்கும் இவன் எங்கே! பேஸில், இவனிடம் அழகு பூத்துக் குலுங்குகிறது. உன் முகத்திலே அறிவின் முத்திரை விழுந்துவிட்டது. அறிவின் ரேகை மின்னத்தொடங்கியதுமே, அழகு—உண்மையான அழகு—முடிந்து போகிறது. இதோ இந்த உல்லாச வாலிபன் அறிவில்லாத அழகு மனிதன் என்பதை நான் நன்கு உணர முடிகிறது. கண்ணுக்குக் குளுமையான மலர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டு விடுகிற பனிக் காலத்திலே இவன் நம்மிடையே இருக்க வேண்டும், பார்வைக்கு விருந்தாக. கடுங்கோடையிலே நமது மூளையில் பனித்தன்மையை நிரப்புவதற்காக, இவன் சதா நம்முடன் இருக்க வேண்டும். இவனது சித்திரத்தில் உனது பண்பு பிரதிபலிக்கிறதாவது! தகாத தற்புகழ்ச்சி தம்பி!' என்றார் அவர்.

'நான் இவனைப் போல் இல்லை, அப்படி இருக்க ஆசைப்படவுமில்லை. மற்ற எல்லோரையும்விட மாறுபட்டு இருப்பது நல்லது அல்ல, ஹேரி! அழகற்றவர்களும் முட்டாள்களும் தான் உலகத்திலே நன்மைகளை நிறைய அனுபவிக்க முடிகிறது. வெற்றியை அவர்கள் காண்பதில்லை. அதனால் என்ன? தோல்வி என்கிற கசப்பான உண்மையை அனுபவிக்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கு ஏற்படுவது இல்லையே! அவர்கள் பிறரை அழிப்பதுமில்லை; பிறரால் அழிக்கப்படுவதுமில்லை. உனது அந்தஸ்தும் செல்வமும், எனது அறிவும் கலையும், டோரியன் கிரேயின் அழகும் ஒன்றாகச் சேர்ந்தால்—சொல்லவே வேண்டாம்! கொடிய ஆபத்தே விளையும். நம் எல்லோருக்குமே ஆபத்து தான்' என்றான் பேஸில்.

'டோரியன் கிரே? அது தான் இவன் பெயரா?' என்று வினவினார் லார்ட் ஹென்ரி.

'ஆமாம். அதை உனக்கு அறிவிக்கக் கூடாது என்று எண்ணினேன். வாய் தவறி வந்து விட்டது' என வருத்தப்பட்டான் ஓவியன்.

அவன் தீட்டிய அற்புத ஓவியத்தை ஏன் காட்சிப் பொருளாக மாற்ற மறுக்கிறான் அவன் என்கிற உண்மையை அறியத் துடித்தார் பிரபு. பேஸில் சொன்னான்: 'ஓவியன் பூரண சிரத்தையோடு தன் வயம் இழந்த முழு ஈடுபாட்டோடு—தீட்டுகிற சித்திரம் உண்மையில் ஓவியனின் தன்மையைத் தான் பிரதிபலிக்கிறது. வரையப்படுகிற பொருளின் பண்பைக் காட்டுவதில்லை அது. தன்னையே தான் திரைச்சீலையிலே மலர்விக்க ஒரு கருவியாக அமைகிறது அது. அவ்வளவு தான், இந்தப் படத்திலே எனது ஆத்மாவின் அந்தரங்கமே அம்பலமாகிவிட்டது என நான் உணர்கிறேன்,'

டோரியன் கிரேயை சந்தித்ததிலிருந்து அவனுடைய அழகும் உருவமும் தன்னை ஈர்த்துவிட்டன; அவனைக் காணாமல் ஒரு நாளைக் கூடக் கழிப்பது கஷ்டம்; 'அவனே எனது கலை. அவனே கலையின் புது உருவம். அவன் அருகில் இருக்கிற போது, எனது கலைத் திறம்

புதுச் சக்தி பெறுகிறது. அவனிடமிருந்து ஏதோ ஒரு மாயச் சக்தி என்னுள் புகுந்து விடுவது போல் தோன்றும்' என விளக்கினன் பேஸில்.

அத்தகைய அதிசயப் பிறவியைத் தான் சந்திக்க வேண்டும் என்று ஹென்ரி விரும்பினர். அவர் அவனைச் சந்திக்காமல் இருப்பதே நல்லது என்று ஆசைப்பட்டான் பேஸில். ஆனால், சந்தர்ப்பம் சதி செய்து விட்டது!

லார்ட் ஹென்ரி விடை பெற்றுக் கிளம்பும் வேளையில் டோரியன் கிரே வந்துவிட்டான். 'அவன் எனது ஆத்ம நண்பன். அழகும் அமைதியும் நிறைந்த களங்கமற்ற பண்பு அவனுடையது. அவனை நீ கெடுத்துவிடாதே. அவனையும் உன் போக்கிலே நீ திருப்பிவிடாதே' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்ட பிறகே, அழகு இளைஞனை பிரபுவுக்கு அறிமுகம் செய்து வைத்தான் ஓவியன்.

லார்ட் ஹென்ரி விசித்திரமான ஆசாமிதான். அவர் உதிர்க்கிற கருத்துக்கள் அறிவுச் சுடர்களாக மிளிரும்; உலகில் நிலவுகிற அபிப்பிராயங்களுக்கு, தர்ம நியாயங்களுக்கு, நேர்மாறானவையாக தொனிக்கும். அவர் சொல்கிற கருத்துக்களில் அவருக்கே நம்பிக்கை கிடையாது என்று அவரது நண்பர்கள் சொல்வது வழக்கம். ஆயினும், அவற்றிலே நம்பிக்கை வைத்து, அவரைப் பின்பற்ற முயன்று, கெட்டவர்களும் உண்டு. அவர் குரலுக்கு ஒரு தனிக் கவர்ச்சி இருந்தது. தனது எண்ணங்களை அவர் எடுத்துச் சொல்லும் முறையிலே, எவரையும் வசீகரிக்கும் பண்பு கலந்து கிடந்தது. நாசக் கருத்துக்களையும் நயமான இசைபோல ஒலிபரப்பும் சக்தி பெற்றிருந்த மேதை அந்தப் பிரபு.

அவர் டோரியன் கிரேயைப் பார்த்தார். அவன் அற்புத அழகன் என்பதில் சந்தேகமே இல்லை என முடிவு செய்தார். எழிலுற அமைந்த சிவப்பு உதடுகள்; களங்கமிலா நீலக் கண்கள்; நெளி பாய்ந்த தங்க நிறக் கூந்தல்—இவை அணி செய்த அழகு முகம் காண்போர் முதல் பார்வையிலேயே அவனிடம் நம்பிக்கை கொண்டு விடுவர். அவ்விதத் தோற்றம்பெற்ற இளைஞன். வாலிபத்தின் புனித மலர்ச்சி அவன். இளமையின் வளமை அவன். உலகிடையே உலவினலும் உலகின் களங்க அலைகள் பட்டுக் கறை படியாத உத்தமன் அவன் என்பதை அவன் உருவமே சொன்னது. 'இவனை தெய்வம் போல் பேஸில் தொழுது போற்றுவதில் வியப்பு எதுவுமே இல்லை' என எண்ணினர் ஹென்ரி.

'என்னப்பா பேஸில், நான் போகவேண்டியது தானா?' என்று கேட்டார் அவர். அழகு ஓவியத்துக்குப் பூரணத்துவம் அளிப்பதில் கவனம் செலுத்தத் தொடங்கினன் ஓவியன். ஹென்ரிக்கு விடை கொடுத்து அனுப்பத் தயாராகவே இருந்தான் அவன். ஆனல், லார்ட் ஹென்ரியைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த டோரியன் அவரை பிரியத் தயாராக இல்லை. 'அவர் போய்விட்டால், நானும் போய்விடுவேன்' என்றான் அவன். பேஸிலுக்கு வேறு வழி இல்லாமல் போய்விட்டது. ஹென்ரி அங்கு அமர்ந்து தமது போதனைகளை உலுப்பித் தள்ளினர்.

அறியா இளைஞனுக்கு பிரபுவிடம் ஒருவித மோகமே ஏற்பட்டு விட்டது! அவர் குரலும், தனித்துவமான அபிப்பிராயங்களை அவர் எடுத்துச் சொன்ன முறையும், அவற்றைச் சொல்லும் போது எழுந்த தனி ரகமான கை அசைப்புகளும் அவனுக்கு பிரமிப்பு தந்தன. வாய் பிளந்திருந்து, அதிசயித்து விழுங்குவது போல் கவனித்திருந்தான் அவன்.

'தன்னைத் தானே வளர்த்துக் கொள்ள வேண்டும். இது தான் வாழ்வின் முக்கிய அடிப்படை

நோயாளி:— உங்க கன்ஸல்டிங் பீஸ் எவ்வளவு?

டாக்டர்:— ஐந்து ரூபாய்.

நோயாளி:— இந்தாங்க ஸார் ஐந்து ரூபாய்! இந்த ஊரிலே நல்ல டாக்டர் எங்கே இருக்கார்னு சொல்லுங்க!

யாகும். ஆனால் மக்கள் தங்களுக்குத் தாங்களே பயந்து சாகிறார்கள். சமூகத்துக்கு பயப்படுவது என்பது ஆத்மீக தர்மங்களின் அடிப்படை. கடவுளுக்கு அஞ்சுவது என்பது மதங்களின் அடிப்படை. இந்த இரண்டும் சேர்ந்து நம்மை உருப்பட விடாமல் அடிக்கின்றன. துணிச்சல் என்பது ஜன சமுதாயத்திடமிருந்தே விடை பெற்றுக் கொண்டு போய்விட்டது. உண்மையில் ஒரு மனிதன் பூரண வாழ்வு வாழ்வது என்றால்—ஒவ்வொரு உணர்ச்சிக்கும் உருவம் கொடுத்தாக வேண்டும் அவன்; ஒவ்வொரு எண்ணத்தையும் வெளிப்படுத்தியாக வேண்டும் அவன்; ஒவ்வொரு கனவையும் நனவாக்கியே தீர வேண்டும்.... ஆசையை அடக்குவதற்கு ஒரே ஒரு வழி அந்த ஆசையை அனுபவித்துத் தீர்த்து விடுவது தான். உனது ஆசைகளை உள்ளத்தினுள்ளேயே ஒடுக்குவதன் மூலம், உன் ஆத்மா நோயாளியாக மாறிப் போகிறது. உலகத்தின் மகத்தான நிகழ்ச்சிகள் எல்லாம் மூளையில் தான் முதன் முதலாக நடைபெற்றன என்று சொல்கிறார்கள்; உலகத்தின் மகத்தான பாபங்கள் எல்லாம் மூளையில் தான்—மூளையில் மாத்திரமே நடைபெறுகின்றன என்று நான் சொல்கிறேன். நீயே எண்ணிப்பார், தம்பி! நீ, புத்தம் புதிய ரோஜாவின் வனப்பும் இளமையும் புனிதமும் பெற்றிருக்கிற நீயே, உன்னை அலைக்கழிக்கும் உணர்ச்சித் துடிப்புகள் கொண்டதில்லையா? உன்னையே அச்சுறுத்தும் எண்ணங்களைப் பெற்றதில்லையா? நினைத்தாலே உன் கன்னங்களில் வெட்கச் சாயை பூசச் செய்யும் கனவுகளை நீ உன் தூக்கத்திலே அனுபவித்ததில்லையா?.......'

'நிறுத்துங்கள்! நிறுத்திவிடுங்கள்!..நான் சிந்திக்க வேண்டும். இல்லை இல்லை, நான் சிந்திக்காமல் இருக்க வேண்டும்!' என்று குழப்பத்தோடு கத்தினான் டோரியன் கிரே.

பத்து நிமிஷ நேரம் அவன் ஆடாது அசையாது, பிரிந்த உதடுகளுடன், கண்களில் கனலும் புதிய ஒளியுடன் நின்றான். ஓவியன் பல தினங்களாகக் காணத் தவம் கிடந்த முகபாவத்தை லார்ட் ஹென்ரியின் சிறு நேரப் பேச்சு சிருஷ்டித்து விட்டது. வெறும் வார்த்தைகள் தான் அவை; ஆனாலும் டோரியனின் உள்ளத்தைத் தொட்ட மந்திரங்கள் போல் இருந்தன. உறங்கிக்கிடந்த ஒரு சக்திக்கு அற்புத மூச்சு கொடுத்த இசையாக மிளிர்ந்தது அவர் பேச்சு. உருவமற்ற பண்புகளுக்கெல்லாம் தனி உருவம் கொடுக்கும் மாயாஜாலம் பெற்றிருந்த வார்த்தைகள்—வீணையைப் போல், புல்லாங்குழல் போல், தமக்கெனத் தனிரகமான நாதம் பெற்றுப் பிரவகித்த வார்த்தைகள்—தங்கள் வேலையைச் செய்தன. தனக்கு அன்று வரை புரியாது போன பல விஷயங்களை டோரியன் அப்போது நன்றாகப் புரிந்து கொண்டான்.

வாழ்க்கை திடீரென்று தகதகக்கும் வர்ணம் காட்டி அவன் முன் வசியக் கூத்து ஆடியது.

தமது மோகனப் புன்னகையுடன் மோனத்து அமர்ந்து அவன் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தார் ஹென்ரி. நன்கு பேசக் கற்றிருந்த பிரபு எப்பொழுது பேசாமலிருக்க வேண்டும் என்கிற வித்தையையும் உணர்ந்து தான் இருந்தார். தன்னுடைய வார்த்தைகளின் சக்தியை, அதன் விளைவை, எண்ணி ரசித்து மகிழ்ந்தார்.

பேச்சையோ, பேச்சின் பின் நிலவிய மௌனத்தையோ, உணராதவனாக ஓவியம் தீட்டுவதிலேயே ஈடுபட்டு நின்றான் பேஸில். அவனுக்கு அன்று வெற்றி. 'ஹென்ரி உன்னிடம் என்ன சொன்னாரோ, எனக்குத் தெரியாது. உன் முகபாவம் அற்புதமாக அமைந்திருந்தது. அவர் சொல்கிற விஷயங்களை நம்பி விடாதே!' என்று எச்சரித்தான் ஓவியன்.

டோரியன் கிரேயும், லார்ட் ஹென்ரியும் கலைக் கூடத்திலிருந்து தோட்டத்திற்குச் சென்றார்கள். அங்கும் தனது உபதேசங்களைத் தாராளமாக அள்ளி வழங்கினார் பிரபு.

'புலன்களை ஆத்மா தான் அமைதிப்படுத்த முடியும். அதே போல ஆத்மாவுக்கு அமைதி அளிக்கும் சக்தி புலன்களுக்குத் தான் உண்டு. வாழ்க்கையின் மகத்தான ரகசியங்களில் இதுவும் ஒன்று'—என்றார் அவர்.

டோரியன் கிரேக்கு அவரிடம் அச்சம் ஏற்பட்டது. அச்சப்படுகிறோமே என்ற வெட்கமும் எழுந்தது. அவரைக் கண்ட யார் தான் அவருடைய நட்பை விரும்பாதிருக்க இயலும்? அவரது சொற்களைக் கேட்கும் எவர் தான் அந் நாதத்திலே கட்டுண்டு போகாது இருக்க முடியும்? தன்னைத் தனக்கு விளங்க வைப்பதற்கு அந்நியர் ஒருவரா வரவேண்டும்? பலப்பல மாதங்களாக வளர்ந்த ஓவியனின் நட்பும் அன்பும் அவனிடம் எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லையே. திடீரென்று யாரோ ஒருவர் குறுக்கிடுகிறார்; வாழ்வின் மர்மத்தையே விளக்கிவிடுகிறார். அவரைக் கண்டு அஞ்சுவதற்கு அவன் என்ன பள்ளி மாணவனா; இல்லை, பெண் பிள்ளையா? அஞ்சுவது பேதமை அல்லவா!—அவன் உள்ளம் குழம்பித் தவித்தது.

லார்ட் ஹென்ரி சொன்னார்: 'மகா அற்புதமான இளமை உனக்குக் கிட்டியிருக்கிறது. போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரே பண்பு இளமை தான். இதன் உண்மை இப்பொழுது உனக்குப் புரியாது. நீ மூப்பு அடைந்து, நரையும் திரையும் அவலட்சணமும் பெற்றுவிடுகிற போது, சிந்தனைக் குழப்பங்கள் உனது நெற்றியிலே நீங்காத கோடுகளைத் தீட்டிவிடுகிறபோது, உணர்ச்சிக் கொதிப்புகள் உனது உதடுகளைச் சுற்றிலும் சூடு போட்டு விடுகிறபோது, நீ இதை உணர்வாய். இன்று நீ எங்கு போனாலும், பிறரை வசீகரித்து விடுகிறாய். என்றும் இதே நிலைமையா நீடிக்கும்? கடவுள் உனக்கு பிரமாத அழகைக் கொடுத்திருக்கிறார். அதை அவரே சீக்கிரம் பிடுங்கிக் கொள்வார். உனது அழகையும் இளமையையும் பாழ்படுத்தக் காத்திருக்கிறது காலம். அழகிய மலர்கள் அற்பாயுசு படைத்தவை தான். எனினும், மீண்டும் மீண்டும் புதுப் புதுப் பூக்களைப் பூத்துக் குலுக்குகின்றனவே செடிகள். ஆனால், நமது இளமை போனால் திரும்பி வருவதில்லை.'

அவர் பேச்சின் பொருள் டோரியனின் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்தது.

ஓவியத்துக்குப் பூரணத்துவம் அளித்துவிட்டு வந்த பேஸில் அவ்விருவரையும் படத்தருகே அழைத்துப் போனான். அற்புதமாக அமைந்திருந்தது அது. அதைப்

பார்த்த டோரியனே பிரமித்துப் போனுன். ஓவியன் அவன் அழகைப் புகழ்ந்து பேசியதெல்லாம் 'சும்மா முகத்துக்காக!' என்று எண்ணியிருந்தான் அவன். இப்போது ஹென்ரியின் பிரசங்கம் அவனது உள்ளத்திலே கிளர்ச்சியும் விழிப்பும் புகுத்தியிருந்தன. கண் எதிரே நின்ற அவனுடைய இனிய ஓவியம், ஹென்ரி கூறிய உண்மைகளின் அழுத்தத்தை எடுத்துச் சொல்வதுபோல் இருந்தது.

'ஆமாம். இதோ இந்த அழகு முகம் மேடு பள்ளங்கள் ஏற்று கோர உருவம் பெற்றுவிடும். சுடர் தெறிக்கும் கண்கள் ஒளி மங்கி, சோபை இழந்துவிடும். இந்த உருவமே கூனிக் குறுகி விகாரமாக மாறிப் போகும். உதடுகளிலே செக்கரின் சிரிப்பு இராது. தலைமுடியிலே தங்கத்தின் மினு மினுப்பு இருக்காது. ஆத்மாவுக்கு மாண்பு புகுத்தும் முயற்சியால், வாழ்க்கை இந்த உடலையே கறைபடுத்திவிடுமல்லவா? கோரமும், கொடுமையும், விகாரமும் குடி கொண்டுவிடுமே இதிலே!'

இந்த நினைப்பு கூரிய கத்தி போல் தாக்கியது டோரியனின் உள்ளத்திலே. அவன் கண்கள் தாழ்ந்தன. நீர் மல்கியது அவற்றில். அவன் இதயத்தை உறைய வைக்கும் பனிக்கரத்தால் யாரோ பற்றுவது போல் தோன்றியது.

அவனுடைய மௌனத்தால் வேதனை அடைந்த பேஸில். 'ஏன், இது உனக்குப் பிடிக்கவில்லையா?' என்று கேட்டான்.

'பிடிக்காமல் என்ன? இன்றையக் கலையின் மகோன்னதமான சிருஷ்டி அல்லவா இது. நீ என்ன கேட்டாலும் நான் தரத் தயார். இதை எனக்குக் கொடுத்துவிடு' என்றுர் லார்ட் ஹென்ரி.

'இது என் உடைமை அல்ல, ஹேரி. இது டோரியனுக்கே உரியது' என்றுன் பேஸில்.

'அவன் பெரிய அதிர்ஷ்டசாலி தான்' என்றுர் பிரபு. ஆனுல், டோரியன் கிரே முணமுணத்தான்:

'எவ்வளவு துயரம் ஏற்படுகிறது எனக்கு. நான் கிழடாய், கோரமாய், விகாரமாய் வளர்ந்துவிடுவேன். ஆனுல் இந்தப் படம் இன்று போல் என்றும் இளமையாய், அழகுடன் திகழுமே. இந்நிலைமை நேர்மாருக இருக்குமானுல்! மூவா இளமையும் அழகும் பெற்றவனுக நான் வாழவும், இந்தப் படம் மூப்பும் விகாரமும் ஏற்றுவளரவும் வாய்ப்பு ஏற்படுமானுல்! ஆ, அதற்காக, நான் எதையும் கொடுப்பேன்; எல்லாவற்றையும் கொடுத்து விடுவேனே! ஆமாம். அதற்காக நான் கொடுக்க மறுக்கிற பொருள் இந்த உலகத்திலேயே எதுவும் இராதே! என்னுடைய ஆத்மாவைக் கூட நான் கொடுத்துவிடத் தயார்.'

'பேஸில், இந்த ஏற்பாட்டை நீ விரும்பமாட்டாய் அல்லவா? இதனுல் உனது கலை மிகுதியும் பாதிக்கப்பட்டுவிடும்' என்று சொல்லிச் சிரித்தார் ஹென்ரி.

'ஆம், இதை நான் பலமாக ஆட்சேபிப்பேன்' என்றுன் ஓவியன்.

அவனே அதிசயிக்கும்படி டோரியன் சிடுசிடுத்தான் 'நீ அப்படித் தான் செய்வாய். உனக்கு உன் நண்பர்களைவிட உன்னுடைய கலை தான் பெரிசு! வெண்கலச் சிலையும், தந்தப் பொம்மையும், வெள்ளி விக்கிரகமும் தான் உனக்கு முக்கியமானவை. அவற்றையே நீ என்றும் மோகிப்பாய். என்னிடம் உன் அன்பு எவ்வளவு காலம் நிலைத்து நிற்கப்போகிறது? மூப்பின் முதல் கோடு என் முகத்தை விகாரப்படுத்துகிற வரையில்: அவ்வளவுதானே! இளமையை இழந்தவன் எல்லாவற்றையும் இழந்துவிடுகிருன். லார்ட் ஹென்ரி வாட்டன் சொன்னது மெத்தச்

சரி, அதன் உண்மையை உனது ஓவியம் எனக்குக் கற்றுக் கொடுத்துவிட்டது. பாதுகாக்க வேண்டிய பாக்கியம் இளமை தான். மூப்பின் ரேகை படியத் தொடங்கியதுமே, என்னை நானே அழித்து விடுவேன்' என்றான் அவன்.

அவனது புது தினுசுப் பேச்சும், குரலின் துடிப்பும், முகமாறுதலும் ஓவியனைக் கலவரப்படுத்தின. 'டோரியன், டோரியன், நீயா இப்படிப் பேசுவது? உயிரற்ற இந்தப் படத்திடமா உனக்குப் பொறாமை?' என்று கெஞ்சினான் பேஸில்.

'அழியா அழகு பெற்ற எதையும் கண்டு நான் பொறாமை கொள்வேன். நீ வரைந்த எனது படத்தைப் பார்த்து நான் பொறாமைப்படுகிறேன். எனக்குக் கிட்டாத பாக்கியம் அதற்கு மட்டும் இருப்பானேன்? ஓடுகின்ற ஒவ்வொரு கணமும் என்னிலிருந்து எதையோ எடுத்துவிடுகிறது; அழியாத எதையோ அதற்குக் கொடுத்துச் செல்கிறதே! ஐயோ, இந்நிலைமை மாறுமானால்? எல்லா மாறுதல்களையும் இந்தப் படமே அனுபவிக்கட்டும்; இன்று போல் என்றும் நான் விளங்கினால் என்ன? நீ ஏன் இதைத் தீட்டினாய்? இப்படம் ஒரு நாள் என்னை பரிகசிக்குமே: பயங்கரமாகக் கேலி செய்யுமே!' துயரம் மீறியவனாய் டோரியன் அழுது புலம்பினான்; கட்டிலில் படுத்து, முகத்தைப் புதைத்துக் கொண்டு, பிரார்த்தனை செய்கிறவன் மாதிரிக் கிடந்தான்.

'இது உன்னுடைய வேலை தான், ஹேரி' என்று பேஸில் வெறுப்பாக மொழிந்தான்.

'இது தான் நிஜமான டோரியன் கிரே' என்றார் பிரபு.

'இல்லை. நீ தான் அவனைக் கெடுத்துவிட்டாய். நான் போகச் சொன்ன போதே, நீ போயிருக்க வேண்டும். எனது நண்பர்களுடன் சண்டை போடத் தூண்டும் இப்

தகப்பனார்: என்னடாது உடைஞ்சது!

பையன்: ஒண்ணுமில்லேப்பா!

தகப்பனார்: எத்தனை துண்டா உடைஞ்சது? நாலா ஐந்தா?

பையன்: ரெண்டே துண்டுதான் அப்பா.

படம் எனக்கு வெறுப்பளிக்கிறது. இதை நான் அழித்தே தீருவேன்' என்று ஓவியன் கத்தினான். வெறி பிடித்தவன் போல் அவன் ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு படத்தை நெருங்கினான்.

அவ்வேளையில், அழுத கண்களும் சிவந்த முகமுமாய் தலை தூக்கிக் கவனித்த டோரியன், 'நிறுத்து, பேஸில். அப்படிச் செய்யாதே, அது கொலையே ஆகும்' எனக் கூவினான்.

திடுக்கிட்டுத் திகைத்துப் போனான் ஓவியன். 'பரவால்லே. இப்பவாவது நீ என் கலையை மதிக்கிறாயே!' என்று உணர்ச்சியற்ற குரலில் பேசினான் அவன்.

'மதிக்காமலா? அதன் மீது அளவிலாக் காதல் எனக்கு. பேஸில், அது என்னில் ஒரு பகுதி என்றே நான் உணர்கிறேன்' என்றான் டோரியன்.

இவ்வளவையும் வேடிக்கை பார்த்து நின்ற பிரபு, அங்கு

அமைதி ஏற்பட்டதும், சொன்னார்: 'இத்தகைய அபத்தமான கூத்துகள் எல்லாம் நாடக மேடையில் தான் சோபிக்கும். இவற்றுக்கு வாழ்க்கையில் இடமே கிடையாது' அவர் டோரியனை நாடகம் பார்க்க அழைத்தார். அவன் அவரோடு போகக் கூடாது என்றான் பேஸில். ஆனால், அழகன் இசையவில்லை. புதிய நண்பரோடு போகத் தயாரானான்.

'அப்படியானால், உண்மையான டோரியனுடன் நான் இங்கேயே இருப்பேன்' என்றான் ஓவியன்.

'அதுவா நிஜ டோரியன்? நான் நிஜமாகவே அப்படி இருக்கிறேனா? என்ன அற்புதம்!' என்று உற்சாகமாகக் கூவினான் படத்தின் மூலவன்.

அவனும் லார்ட் ஹென்றியும் வெளியேறியதும், ஓவியன் பேஸில் முகத்திலே வேதனைச் சாயை படிந்தது.

2

லார்ட் கெல்ஸோவின் பேரன் டோரியன் கிரே. அவன் தாய் லேடி மார்கரெட் அற்புத அழகியாக விளங்கினாள். அவளை மணந்து கொள்ளத் தவம் கிடந்தார்கள் செல்வர் பலர். ஆனால், அவளோ காசு கொஞ்சம் கூடப் பெற்றிராத ஒருவனோடு ஓடிப் போனாள். குல கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக, ஆள் பிடித்து அவனை அவமதித்துச் சண்டை போடும்படி செய்தார் பிரபு. அவன் மரணமடைந்தான். அப்போது டோரியன் கர்ப்பத்திலிருந்தான். சில மாதங்களில் அவனைப் பெற்றெடுத்த தாய் சாவை அணைத்துக் கொண்டாள்.

இவ்வரலாற்றை ஆராய்ந்து அறிந்தார் லார்ட் ஹென்றி. 'அற்புதமான சரித்திரம். மரணமும் காதலும் அமைத்துக் கொடுத்த களத்திலே அவதரித்த திருமகன் டோரியன். ஆணழகன் அவன். அந்தஸ்து இருக்கிறது; செல்வம் இருக்கிறது; இளமை இருக்கிறது அவனிடம். வாழ்க்கை அவனுக்காகக் காத்திருக்கிறது. அவனை என்னுடைய சக்தி ஆளாக்கிவிடும். ஓவியன் பேஸிலுக்கு அற்புத ஓவியங்கள் வரைய, தன்னை அறியாமலே துணைபுரிந்து வருகிறான் டோரியன். அவ்விதம் இவனை உருவாக்கும் என் சக்தி', என்று உள்ளத்தில் உறுதி பூண்டார் அவர்.

அடிக்கடி பிரபுக்கள் விட்டு விருந்துகளிலும், உறவினர் இல்லங்களிலும் ஹென்ரி அழகன் டோரியனைச் சந்திக்க முடிந்தது. ஹென்ரியின் சாதுர்யமான சம்பாஷணைகள் இளைஞனை வசப்படுத்தின. அவருடைய கருத்துக்கள் அவன் உள்ளத்தில் எவ்வளவோ வேலைகள் செய்தன. அவனுக்கு வாழ்க்கையை வேடிக்கை பார்க்கக் கற்றுக் கொடுத்தார் அவர். அதன் மூலம் வாழ்க்கையை அனுபவித்து இன்புற வழி காட்டினார் பிரபு.

டோரியன் கிரே பிறர் அறியாமல் தினந்தோறும் ஒரு தியேட்டருக்குப் போய்வந்தான். அங்கு நிகழ்ந்த நாடகங்களில் நாளுக்கு ஒரு வேடம் தாங்கி நடித்தாள் ஒரு யுவதி. அவன் அவளை வெறும் பெண்ணாகக் கண்டானில்லை; ஒவ்வொரு நாடகத்திலும் அமர நாயகியாக விளங்கும் காதல் ஜோதியாகவே கண்டான். காவிய நாயகிகள் பலரும் தனி மேதை உருவம் பெற்று உலவுவதாக மயங்கினான் அவன். அவளை அடிக்கடி சந்தித்து மகிழ்ந்தான். 'ஸிபில் வேன்' எனும் அந்நடிகையைக் கல்யாணம் செய்து கொள்ள இசைந்தான்.

அறியாப் பெண் ஸிபில். நாடக பாத்திரங்களோடு ஒன்றிப்போய், அவற்றை மேடையில் வாழ்ந்து காட்டினாள் அவள். வாழ்க்கையில், கிடைத்தற்கரிய பெரும்பேறு தேடி வருகிறது எனத் தெரிந்ததும், அவள் மயக்கம் ஓடிவிட்டது. உணர்ச்சி பரவசத்தால், உள்ளத்து உவகை மிகுதியினால்,

அவள் இருந்த திறமையைக் கூட இழந்துவிட்டாள்.

அவளை மேதை என்றும், தெய்வப் பிறப்பு எனவும் வர்ணித்து ஹென்ரியையும், பேஸிலையும் நாடகத்துக்கு அழைத்து வந்திருந்தான் டோரியன். அதற்கு முன் தினம் தான் அவளைத் தான் மணம் புரிய விரும்புவதைத் தெரிவித்திருந்தான். 'அழகு ராஜா' என்றே அவள் அவனை அழைத்தாள். அவன் பெயரும் விவரமும் அறியாள் அபலை. வாழ்வில் ஏமாற்றமும் கஷ்டங்களும் அனுபவித்து வந்த அவளுடைய தாய் முதலில் மகளைக் கண்டித்தாள். டோரியன் அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள இசைந்ததும் மகிழ்ந்து போனாள். அவளுடைய அண்ணன் ஜேம்ஸ் வேன் மட்டும் நம்பிக்கை கொள்ளவே இல்லை. அவன் டோரியனைச் சந்திக்க முடியவில்லை. கப்பல் தொழிலாளியாகக் கடல் மேல் செல்லும் போது, 'என் தங்கைக்குத் தீமை புரிபவன் எவனாக இருப்பினும் சரியே; அவனைச் சும்மா விடமாட்டேன்' என்று சூளுரைத்துப் போனான் அவன். அவன் போக்கை எண்ணிச் சிரித்தாள் மிஸ் வேன். உல்லாச நிலையிலே திரிந்த நடிகை மேடையில் சோபிக்க இயலவில்லை.

ஏமாற்றமடைந்த ஹென்ரியும், பேஸிலும் வருத்தத்தோடு வீடு திரும்பினார்கள். டோரியன் கிரேயும் மனப் புண் பெற்றான். நடிகையிடம் அவனுக்கு ஏற்பட்டிருந்த மோகம் பறந்துவிட்டது. அவளை மனமாற வெறுத்தான். அவள் மேதையும் இல்லை; அவளிடம் உண்மையான திறமையும் இல்லை என உணர்ந்து புழுங்கினான். நாடகம் முடிந்ததும், தனி அறையில் வழக்கம்போல் அவளைச் சந்தித்த போது, தனது கோபத்தையும் வெறுப்பையும் அவள்மீது கொட்டிவிட்டுத் திரும்பினான். அவள் அவன் காலில் விழுந்து கெஞ்சினாள்; சமாதானம் கூற முயன்றாள். அவளுடைய அழுகையும், உணர்ச்சிப் புலம்பல்களும் அவன் உள்ளத்தைத் தொடவில்லை.

'என்னைத் தொடாதே. இனி நான் உன்னைக் கண்ணெடுத்தும் பாரேன். எனக்குப் பெரிய ஏமாற்றம் தந்துவிட்டாய் நீ' என்று உறுமிவிட்டுப் பிரிந்து போனான் டோரியன்.

அவன் உள்ளத்தில் அமைதி இல்லை. கொதிப்பு தணியவில்லை. அவன் நடந்துகொண்டே இருந்தான். எங்கெங்கோ திரிந்தான். இரவு பூராவும் அலைந்து திரிந்துவிட்டு அவன் வீடு வந்து சேர்ந்ததும், அவனுடைய அறையில் முக்கியமான இடத்தில் தொங்கிய அழகிய ஓவியம் அவன் பார்வையில் பட்டது. அதன் முகத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருப்பது போல் தெரிந்தது.

டோரியன் கிரே திகைப்படைந்தான். படத்தைத் திரும்பத் திரும்பக் கவனித்தான். காலையின் மங்கல் ஒளிதான் ஏமாற்றுகிறதோ என்று எண்ணி, கண்களைக் கசக்கிவிட்டுப் பார்த்தான். சந்தேகமில்லை. ஓவியத்தின் முகத்திலே, உதடுகளின் ஓரத்தில், கொடுமையின் சாயை அழுத்தமாக விழுந்திருந்தது. சூரிய வெளிச்சம் பாய்ந்து வந்து படத்தில் படிந்தது. அங்கு புதிதாகப் பூத்திருந்த கொடுமைச் சாயலை அது பளிச்செனக் காட்டியது.

அவன் கண்ணாடியை எடுத்து தன் முகத்தைக் கவனித்தான். செக்கச் சிவந்த உதடுகளில் எவ்வகை மாற்றமும் இல்லை. ஆனால், படத்திலே அந்த உதடுகளில் அது எப்படி வந்தது? யாரும் தொட்டு ஏற்படுத்திய மாற்றம் இல்லை அது. தானாகவே, தன்னிலேயே, மலர்ந்த ஒரு மாற்றம்தான்.

அவனுக்கு, அன்றொரு நாள் தான் பேஸிலின் கலைக்கூடத்தில் இருந்தபோது உணர்ச்சியோடு' வெறி நினைப்போடு, கூறிய ஆசை மொழிகள் நினைவில் எழுந்தன.

(அடுத்த இதழில் முடியும்)

பாசம்

"பாசம் மிகப் பொல்லாதது. நாம் எங்கிருந்தாலும் என்ன செய்தாலும் நம் உயிரோடு ஒட்டிக் கொண்டே இருக்கிறது. அதுதான் என் கதையும்" என்று சொல்லி முடித்தார் கிழவர். அவருடைய உள்ளத்திலிருந்து வழிந்தோடிய அந்த பாச ஊற்றிலே என் நெஞ்சம் மூழ்கியது. ஒருமுறை அவரைப் பார்த்தேன். அவர் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தார். நீண்டதொரு பெருமூச்சு மட்டும் வெளிப்பட்டது. அலை மோதிக் கிடந்த எண்ணங்களிடையேயும் வீடு செல்லவேண்டும் என்ற நினைவு வரவே அக்கிழவரிடம் விடை பெற்றுக் கொண்டேன்........"

இப்படியாக முடிந்திருந்தது அந்தச் சிறுகதை. சிதம்பரம் ஐந்தாவது தடவையாக அதைப் படித்து முடித்தான். உள்ளத்தை உருக்கும் அந்த சிறுகதை உதவி பத்திரிகாசிரியனாகிய அவனையே மனம் கனியச் செய்துவிட்டது. அந்தச் சிறுகதையை மேசை மீது வைத்துவிட்டு 'மல்லி' என்றழைத்தான்.

"இதோ வந்துவிட்டேன் அண்ணா!" எனக்கூறிக்கொண்டே மல்லிகா அவனது அறைக்குள் நுழைந்தாள்.

"மல்லிகா! இந்தச் சிறு கதையைப் படித்துவிட்டாயா?" என்று மேசையின் மேலிருந்த அந்த சிறுகதைத் தாளைக் காட்டினான். அவள் அதைப் பிரித்துப் பார்த்து "முன்னமேயே படித்து விட்டேனே" என்று கூறினாள்.

"எப்படி இருக்கிறது" என்று கேட்டான் சிதம்பரம்.

"நன்றாக எழுதியிருக்கிறார். வழக்கமாக எழுதும் மா. கி. அவர்கள்தானே இதையும்எழுதியிருக்கிறார்" என்று சிதம்பரத்தை நோக்கி கேட்டாள்.

ஆமாம் என்றான் ஏதோ சிந்தனையில் சிதம்பரம். அவனது கண்கள் மல்லிகாவைப் பார்த்துக் கொண்டிருந்தனவேயன்றி அவன் எண்ணமெல்லாம் எங்கேயோ பறந்து கொண்டிருந்தது. மல்லிகா

அந்த அறையைவிட்டு சென்றது கூட தெரியாமல் அவனது புலன்கள் உறைந்து கிடந்தன.

*   *   *

அது ஒரு சிறு குடும்பம். அந்தச் சிறு குடும்பம் மூன்றே உறுப்பினரைக் கொண்டது. ஓர் ஆண், ஒரு பெண், கொஞ்சு மொழி பேசும் ஈராண்டு குழந்தை ஒன்று. சீர்காழியிலே வாழ்ந்த அந்தக் குடும்பம் பிழைப்புக் காரணமாக சென்னைக்குக் குடியேறியது.

திருவல்லிக்கேணியில் அந்த வீட்டிலேதான் இரு அறைகளை அமர்த்திக் கொண்டு நன்றாக வாழ்ந்தனர். அவர் ஒரு பிடில் வித்வான். அதுதான் அவருக்குத் தொழிலும்கூட. பெருகிய வருமானம் இல்லாவிட்டாலும் போதுமான வரவு இருந்தது. அன்போடும், மகிழ்ச்சியோடும் நல்ல முறையில் காலம் கடத்தினர்.

விடியற் காலையில் அந்த பிடில் தந்திகளினின்றும் பிறக்கும் இசை வெள்ளத்தை ஒவ்வொரு நாளும் அனுபவிக்கலாம். சிறந்த கலைஞர். அவரை அப்போதுதான் உலகம் அறிய ஆரம்பித்தது. கணவனும் மனைவியும் தன் செல்லக் குழந்தையுடன் குலாவுவது பார்ப்பவர்க்கு பொறாமையையும் ஏக்கத்தையும் தூண்டும் காட்சியாகும்.

சிதம்பரத்திற்கு வயது பதினைந்து இருக்கும். பத்தாவது படித்துக் கொண்டிருந்தான். தன்னுடைய வீட்டின் கீழ் பாகத்தில் குடியிருந்தவர்கள் காலி செய்து விடவே புதிதாக வந்த சீர்காழி குடும்பம் அங்கு சேர்ந்தது. சீர்காழிக் குடும்பமும் சிதம்பரத்தின் குடும்பமும் நெருங்கிப் பழகியது.

தேவசுந்தரம்

பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் படிக்கும் நேரம் தவிர மற்றைய பொழுதெல்லாம் பிடிலின் இசையும் அந்த சிறு குழந்தையின் மழலையுந்தான் அவனது பொழுதைக் கழிக்கும். அந்தக் குடும்பத்தில்



நடக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் சிதம்பரமும் அவனது பெற்றோரும் கலந்து இருப்பார்கள். அணுவளவும் வேறுபாடின்றி இரு குடும்பமும் இணைந்து உறவாடி வாழ்ந்தார்கள்.

மெத்தென்ற அழகிய நெருஞ்சிப் பூவிலிருந்து நெருஞ்சி முள் காய்க்கவில்லையா? அப்படி சிலருக்கு இன்பம் மறைந்த பிறகு துன்பம் உண்டாகிறது. அதே நிலை தான் அந்த சீர்காழி குடும்பத்திற்கும் நேர்ந்தது. எப்படியோ மன வேற்றுமை அவர்களிடையே பதிந்துவிட்டது, நாளுக்கு நாள் அது சிறுகச் சிறுக வேர் விடவும் துவங்கியது.

வழக்கமாக பொழுதோடு வீடு திரும்புபவர் அடிக்கடி வெகுநேரம் கழித்து திரும்பினர். வீட்டிலே சரியாக சாப்பிடுவது கிடையாது. மகிழ்ச்சியோடு பேசிய வார்த்தையெல்லாம் மறைந்து விட்டன. கலகலப்பாகவிருந்த குடும்பத்தில் ஒருவகை அமைதி சூழ்ந்தது.

மனைவி தன் கணவனை ஒழுக்கம் தவறியவனுகக் கருதினள். கணவனே மனைவி தன்னை வெறுப்பதாக எண்ணினர். எப்போதாவது பேச்சு எழுந்தால் இந்த அடிப்படையில்தான் ஆரம்பமாகும். இருவரது வெறுப்பும் சீற்றமும் சின்னஞ்சிறு குழந்தையின் மழலை மொழிகளையும் மறைத்துவிட்டன.

இவையனைத்துக்கும் மூலமாய் இருந்தது, அவரது அந்த இசைத் தொழில்தான். சில நாட்களாக ரேடியோ, மேடைக் கச்சேரி, சபைகள் முதலியவற்றிற்கு சென்ற அவர் அதை விடுத்து ஸ்டுடியோவிலே அவருக்கு அதிக வருமானம் கிடைத்தது. அதன் காரணமாக இரவு, பகல் காலங்களில் சாப்பிடக் கூட வராது அங்கேயே தங்கிவிடுவதுமுண்டு. இந்தச் சாதாரண மாறுதல்தான் அவர்களது அன்பு நிறைந்த வாழ்க்கைக்கு அடைக்கல்லாக இருந்து கவலையைத் தேக்கியது.

இந்தப் போராட்ட சோதனையில் ஒருவரை யொருவர் வெற்றி கொள்ள எண்ணினர். ஆனல் இருவருமே தோற்றனர் ஒரு நாள்.

அன்றிரவு நெடுநேரம் கழித்து வீடு திரும்பினர் கணவர். வந்தவர் உள்ளே செல்லாமல் வீட்டு வெளி வராண்டாவிலேயே படுத்துக் கொண்டார். எதிர்பார்த்து காத்திருந்த அவர் மனைவி அலுத்து போய் உறங்கிவிட்டாள். எதேச்சையாக வெளியே வந்தபோது அவள் திண்ணையில் படுத்துறங்கும் கணவனைத் தட்டி யெழுப்பினுள். அவர் எழுந்திருக்கவில்லை. பதிலும் கூறவில்லை. மனைவியின் உள்ளத்திலே கன்று கொண்டிருந்த வேற்றுமைத் தீ சுடர்விட்டது. சொல்லுருவிலே கொழுந்து விட்டு எரிந்தது. நாவினல் சுடப்பட்ட கணவன் பொறுமையிழந்தார். மின்னல் வேகத்தில் எழுந்த அவரது ஆத்திரத்தில் தன் மனைவியை பலமாக அடித்துவிட்டார்.

சிதம்பரத்தின் தாயும் தந்தையும் எவ்வளவு கூறியும் அடக்க முடியவில்லை. ஒருவரை யொருவர் தாறுமாருகத் தூற்றிக் கொண்டனர். முறையற்ற சொற்களைக் கொட்டினர்கள். இரவு முழுவதும் தேம்பித் தேம்பி அழுதாள் அவள். அந்த குழந்தையும் கதறியது. சிதம்பரம் அதைத் தூக்கிக் கொண்டு வேடிக்கைக் காட்டினன். அது அழுகையை நிறுத்தவேயில்லை. மாடிக்கு கொண்டுபோய் ஒருவிதமாகத் தூங்கவைத்து விட்டான். துன்பம் நிறைந்த அந்த இரவு சோக அமைதியோடு கழிந்தது.

பொழுது விடிந்த பிறகும் அந்த அம்மாள் அழுதுகொண்டேயிருந்தார்கள். அவருடைய தோற்றம் வீட்டிலே காணப்படவில்லை. ஆனல் ஆடைகள், பிடில், முதலியவற்றையும் எடுத்துக் கொண்டு வெளியேறிவிட்டார் என பின்பு தான் தெரிந்தது.

ஒரு வாரமாகியும் அவர் திரும்பவேயில்லை. மனைவியைக் கேட்டாலோ, அவருக்கு யாரோ ஒரு சினிமா நடிகையின் தொடர்பு இருப்பதாகவும் அதனல் தான் அவர் சரியாக வீட்டுக்கு வருவதில்லை என்றும் கூறினள். குழந்தையும் தந்தையைக்காணுது அடிக்கடி அழுவதும் சில நாளில்

நின்றுவிட்டது. சிதம்பரமும் அவன் பெற்றோரும் பிரிந்தவரைக் காண எடுத்த முயற்சிகள் யாவும் வீணாயின. அந்த அம்மாளோ தான் ஊருக்குப் போகப் போவதாயும் அவர் வரவேமாட்டார் என்றும் கூறினாள். அப்படியே ஒரு நாள் புறப்பட்டும் விட்டாள்.

சிதம்பரத்தின் தாய் தந்தையருக்கு இவர்களைவிட்டு பிரிய மனமே இல்லை. குறிப்பாக அந்த மழலை மொழி கொழிக்கும் குழந்தையைப் பிரிந்திருக்க ஏனோ அவர்கள் உள்ளம் விரும்பவில்லை. இந்நிலையில் சிதம்பரம் "குழந்தை இங்கேயே இருக்கட்டும். அவள் அப்பா வந்தால் கொடுத்துவிடலாம்" என ஒரு புதிய யோசனையைக் கூறினான். குழந்தையின் தாயோ பிடிவாதமாக மறுத்து விட்டாள்.

எப்படியோ சிதம்பரத்தின் எண்ணம் இறுதியில் நிறைவேறத்தான் செய்தது. குழந்தையின் தாய் இரண்டொரு சாமான்களுடன் ஒரு வாரத்தில் திரும்புவதாகக் கூறி சென்றுவிட்டாள். சிந்திய கண்ணீருடன் அவளை அவர்கள் வழியனுப்பினார்கள்.

இடையே காலதேவன் ஒரு நெடுந்திரையை விரித்துவிட்டான். பருவங்கள் பல சுழன்றன. அந்த சுழற்சியிலேதான் எத்தனை மாறுதல்கள்: பாசம் மிகப் போல்லாதது........சிதம்பரத்தின் எண்ணம் கலைந்தது. மல்லிகா அழைத்த பிறகு நீண்ட பெருமூச்சுடன் உண வருந்தச் சென்றான்.

* * *

தன் நண்பர் ஒருவர் சினிமாவுக்குப் போக ஒரு இலவச 'டிக்கட்' கொடுத்திருந்தார். ஆகையால் சிதம்பரம் மௌண்ட் ரோட் பக்கமாக தன் குழந்தையுடன், அவன் மனைவியும், தங்கை மல்லிகாவும் பின் தொடர நடந்து கொண்டிருந்தான். வழியிலே யாரோ ஒருவர் கூப்பிடுவதாகத் தெரியவே திரும்பிப் பார்த்தான். எழுத்தாளர். மா. கி. அவர்கள் சிரித்துக் கொண்டே "என்ன ஆசிரியரே! எங்கே இப்படி குடும்ப சமேதராய் புறப்பட்டு விட்டீர்கள்" எனக் கேட்டுக் கொண்டே வந்தார்.

"மா. கி. யா......! வாருங்கள். கண்ணிலேயே இப்போதெல்லாம் காண்கிறதில்லையே.... சினிமாவுக்குப் போகிறோம் நீங்கள் எங்கே இந்த வழியே கிளம்பிவிட்டீர்கள்."

"நானும் சினிமாவுக்குப் போகலாம் என்றுதான் புறப்பட்டேன். நான் எதற்காக வந்தேனோ அந்தப் படம் நேற்றோடு முடிந்துவிட்டதாம். ஆகவே வீட்டுக்குப் போகலாம் என்ற உத்தேசம்."

"அப்படியானால் எங்களோடே வாருங்கள். ஒரு புதுப் படத்திற்குப் போகலாம்"

சிதம்பரத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி எல்லோரும் சினிமா கூடத்தின் வாயிலில் நுழைந்தார்கள்.

எழுத்தாளர் மா. கி. அவர்கள் சிதம்பரத்தின் நெருங்கிய நண்பர். சிதம்பரத்தின் குடும்ப நண்பரும் கூட. சில தடவை சிதம்பரத்தின் வீட்டிலேயே தங்கியும் இருக்கிறார். சென்ற சில மாதமாக அவர் சென்னையிலிருந்து நீங்கி தன் சொந்த ஊருக்குப் போயிருந்தார். அப்படியே பல ஊர்களுக்கும் பிரயாணம் செய்துவிட்டு இரண்டு வாரங்களுக்கு முன்பு தான் சென்னை திரும்பினார். அவர் எழுதிய கதைகள் மாத்திரம் சிதம்பரத்திற்கு வந்து கொண்டிருந்தன.

திரைப் படக் காட்சி முடிந்து வீடு திரும்பினார்கள். வரும்போது சிதம்பரம் தம் நண்பரையும் கூடவே வற்புறுத்தி வீட்டுக்கு அழைத்து வந்தான். வீட்டிலே சாப்பாடு மகிழ்ச்சியோடு நிறைவேறியது. மாடியிலே தன் நண்பருடன் பேசிக் கொண்டிருந்தான் சிதம்பரம். அவர் எந்தெந்த ஊருக்குச் சென்றாரோ அதைப்

பற்றியெல்லாம் விளக்கமாக — கதையாகவே சுவை குன்றாது கூறிக்கொண்டே வந்தார். மல்லிகாவும் சிதம்பரத்தின் மனைவியும் கூட இருந்து கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

சிதம்பரத்திற்கு பேச்சின் இடையிலே மா. கி. அவர்கள் எழுதிய அந்தச் சிறு கதையைப் பற்றி நினைவு வரவே அவன் அவரைப் பார்த்து "நீங்கள் முன்பு அனுப்பியிருந்த பாசத்தின் வெற்றி, பிரமாதம்" என்றான்.

"ஆமாம் ஆமாம், அதைச் சொல்லவே மறந்துவிட்டேனே. அது என் கதையில்லை சுவாமி. அதை எழுதியது என்னவோ நான்தான். ஆனால் கதை வேறொருவருடையது".

"நீங்களும் ஆங்கிலக் கதையின் மொழி பெயர்ப்பை ஆரம்பித்துவிட்டீர்களா? விடிந்தது! இனிமேல் தமிழகத்தில் சொந்தமாக கதை எழுதவே முடியாது போலிருக்கிறதே" என்றான் சிரித்துக்கொண்டே.

"முற்றும் கேட்காமல் அவசரப்படுகிறீரே. என்னைப் பற்றி திடீரென்று அப்படி நினைத்துவிட்டீர்களே!" என்று மீண்டும் தொடர்ந்தார் மா. கி.

"சீர்காழியிலே என்னுடைய தூர உறவினர் ஒருவர் வீட்டிலே தங்கியிருந்தேன். அங்கு தான் இன்பமான ஆனால் துன்பத்தில் தோய்க்கப்பட்ட ஒரு காட்சியைக் கண்டேன். நான் தங்கியிருந்த வீட்டிற்குப் பக்கத்தில் கிழவர் ஒருவர் நல்ல நண்பராகிவிட்டார். அவருடைய பேச்சு என்னை வெகுவாகக் கவர்ந்தது. அவரும் என்னை ரொம்பவும் விரும்பினார். அவருடைய இளமை வாழ்விலே இடைப்பட்ட எத்தனையோ நிகழ்ச்சிகளை என்னிடத்தில் கூறுவதில் அவர் மிக்க ஆறுதல் கொண்டார். வேடிக்கையும் வேதனையும் மலிந்து கிடந்தது அவரது பேச்சிலே.

ஒருநாள் மாலை இருவரும் முற்றத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது தான் அவர் ஒரு பிடில் வித்துவான் எனத் தெரிந்து கொண்டேன். ஆனால் அவர் இன்று பிடில் தொழிலை மேற்கொள்ளாமல் பள்ளிக்கூட ஆசிரியராக காலங்கழிக்கிறார். அதன் காரணமும் கூறினார். அந்தச் சோகக் கதையைத் தான் பொருளாக அமைத்து பெயர்களை மாத்திரம் மாற்றி தங்களுக்குச் சிறுகதை வடிவில் அனுப்பிவைத்தேன்" என்று கூறி முடித்தார் எழுத்தாளர் மா. கி.

சிதம்பரம் உடனே குறுக்கிட்டு "அந்தக் கதையின் முடிவுதான் ஒருமாதிரி போல இருக்கிறது. நல்ல முறையில் அமையவில்லை" என்றான்.

"நீங்கள் கூறுவது முற்றும் உண்மை. ஏனெனில் தங்களுக்கு அனுப்பிய கதை அவர் சொல்லியதில் பாதிதான். காரணம் நான் அதற்குள் சாப்பாட்டிற்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆதலினால் அதன் மீதி பாகத்தை மறுநாள் தான் கூறினார். அதற்குள்ளாகத்தான் சிறுகதை தயாராகிவிட்டதே. அதை உங்களுக்கு அப்படியே அனுப்பிவிட்டேன்" என்றார் எழுத்தாளர்.

"மீதியையும் ஒரு கதையாக உருவாக்கிவிட்டீர்களா" என்று வினவினான் சிதம்பரம்.

"இல்லவே இல்லை. அவருடைய கதைக்குத்தான் முடிவே இல்லையே" என்றார் அவர்.

"பின் எப்படித்தான் முடித்தார் கூறுங்களேன்" என்றான் சிதம்பரம். ஏனோ அவனது உள்ளத்தில் அந்த சிறுகதை கிளர்ந்து கொண்டே இருந்தது.

எழுத்தாளர். மா. கி. அவர்களும் கதையைத் தொடர்ந்தார்.

"அந்த பெரியவர் இன்று மனைவி மக்களை யிழந்தும் இதயத்தால் உறவுகொண்டு வாழ்கிறார்.

அவருடைய இசைத் தொழிலிலேயே அதிக வருவாய் அடைந்துதன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திமனைவி மக்களுடன் — பெருமையோடு வாழ எண்ணினார். அதற்காக எப்போதும் பாடுபட்டார். உணவில்லாமல் இருந்த நாட்கள் எத்தனையோ! உறக்கமில்லாமல் கழிந்த இரவுகள் எத்தனையோ! ஆனால் அவற்றிற்கு எல்லாம் பரிசாகக் கிடைத்தது மனைவியின் தூற்றலும் பழிச் சொற்களுமே.



பாவம்! அவர் உண்மையாக உழைத்தும் அவள் வேறு விதமாக நினைத்துக் கொண்டாள். அதற்கு அஞ்சி சில வேளையில் குறித்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாமலும் வீட்டிற்கு வந்திருக்கிறார். அவர் எவ்வளவோ பொறுத்தும் மனைவியை மாற்ற முடியவில்லை. வெறுப்பு விரிந்து ஒரு நாள் வெடித்தும் விட்டது. நெக்குவிட்டது அவருடைய வாழ்க்கையிலே. அன்பான மனைவியையும் அருமைக் குழந்தையையும் துறந்து வீட்டைவிட்டு வெளியேறினார் ஒரு நாள். அந்த சமயம் பட முதலாளிகள் படமெடுக்க வட இந்தியா சென்றார்கள். அவர்களோடு இந்த பிடில் கலைஞரும் சென்றுவிட்டார். மூன்று மாதங்கள் பொறுத்து திரும்பினார். வீடு வந்து பார்த்தபோது வீடு மேடாகிக் கிடந்தது. மனைவி மக்களைப் பற்றி விசாரித்து ஒன்றும் தெரியாமல் மாமனார் வீடு சென்றார். அங்கு அவருக்கு எதிர்பாராத செய்தியொன்று காத்திருந்தது. அதாவது அவரது மனைவியின் கடிதம். அந்தக் கடிதத்தை படித்து முடித்தவுடனே அவர் அசந்து போய்விட்டார். காரணம் அந்தக் கடிதத்தில் இருந்த கொடியசெய்தியாகும். அதாவது வீட்டை மாத்திரம் துறந்து வெளியேறிய இவருடைய மனைவி இவரை விட்டு உடல் கூட்டையே பிரிந்து உயிர் துறந்தாள். அவ்வளவுதான் பெரியவரின் அறிவு ஒளி திடீரென்று அணைந்துவிட்டது.

அன்றே மாமனார் வீட்டை விட்டு திருவிதாங்கூருக்குச் சென்றுவிட்டார். அங்கே ஒரு நண்பரின் ஆதரவில் பாட்டு வாத்தியாராக வேலை பார்த்து வந்தார். கூலிக்காக இசை பாடும் பிடில் தொழிலை அன்றே வெறுத்து ஒதுக்கினார். சில ஆண்டுகளுக்குப் பின் அவருடைய மாமனார் குடும்பம் தன்னந் தனியே அலைமோதிக் கிடந்த போது உறவினர் ஒருவரின் அழைப்பின் பேரில் மாமனார் வீடு வந்து சேர்ந்தார். இப்போது பள்ளியாசிரியராக காலம்கடத்து

கிறர்'' என்று கூறி முடித்தார் மா. கி.

'' அந்தக் குழந்தையைப் பற்றி அவர் ஒன்றுமே சொல்ல வில்லையா? '' என்று கேட்டான் சிதம்பரம்.

'' அவள்தான் அந்தக் கடிதத்தில் தானும் தன் குழந்தையும் இறந்து விட்டதாக எழுதியிருந்தாளே '' என்றார் மா. கி,

'' சிறிது நேரம் அவர்களிடையே அமைதி நிலவியது. அதிக நாழிகை ஆகிவிட்டது படுத்துக் கொள்ளுங்கள்'' என்று சிதம்பரத்தின் மனைவி கூறவே அவர்கள் படுத்து உறங்கிவிட்டார்கள். சிதம்பரத்தின் நெஞ்சிலே புயலும், மழையும் இடியும் மின்னலும் போன்ற எண்ணங்கள் மோதிக் கொண்டிருந்தன.

* * *

அன்று ஞாயிற்றுக் கிழமை' கார்த்திகை விளக்கீடு. காலைநேரம் மல்லிகாவும், சிதம்பரத்தின் மனைவியும் சமையலறையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். ஏனெனில் முக்கியமான நண்பர் ஒருவர் அன்று வருவதாக சிதம்பரம் நேற்றே சொல்லியிருந்தான்.

யாரோ ஒரு பெரியவர் சிதம்பரத்தின் வீட்டு வாயிலுள் நுழைந்தார். நுழைந்தவர் '' ஆசிரியர் இருக்கிறாரா?'' என அங்கிருந்தபடியே கேட்டார். உடனே சிதம்பரம் வெளியே வந்து அவரைப் பார்த்து சீர்காழியிலிருந்து வருகிறீர்களா'' எனக் கேட்டான். அதற்கு அவர் ''ஆமாம்'' என்றார். ''வாருங்கள் வாருங்கள் உள்ளே வாருங்கள்'' என்று அழைத்து மனைவியைக் கூப்பிட்டு கால் கழுவ நீர் கொடுக்கச் சொன்னான். பின்பு அவரை படிக்கும் அறைக்குச் சென்று உட்கார வைத்தான். மீண்டும் மனைவியை அழைத்து '' சீக்கிரம் சமையல் தயாரிக்கும்படி கூறிவிட்டு அதைப் பார்த்து ''தங்களுக்கு என் கடிதம் எப்போது கிடைத்தது '' என்று வினவினான்,

'' இரண்டு நாளைக்கு முன்பு'' என பதிலுரைத்தார் வந்தவர். இப்படி ஊர் விஷயங்களை முதலில் பேசிக் கொண்டிருந்தனர் இருவரும். இதற்கிடையில் ஒருவரையொருவர் தங்களுக்குத் தாங்களே உற்றுப் பார்த்து அடையாளம் கண்டு பிடிக்க முனைந்துக் கொண்டிருந்தனர். சிதம்பரமே முதலில் ஆரம்பித்தான். ''என்னை நீங்கள் புரிந்து கொள்ள முடிகிறதா'' என்று கேட்டான்.

எங்கேயோ பார்த்தது போலிருக்கிறது எனக் கூறினர் அச்சீர்காழிப்பெரியார், சிதம்பரத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்த்த வண்ணம்.

சிதம்பரம் ''நீங்கள் ராமகிருஷ்ணன்'' இல்லையா? என்று கேள்வியை எழுப்பினான்.

''ஆமாம்'' என்றார் அவர் புருவத்தை நெளித்தபடியே.

'' நீங்கள் திருவல்லிக்கேணியில் குடியிருந்தீர்களே நினைவிருக்கிறதா ?'' என்றான் சிதம்பரம்.

உடனே அந்த பெரியவர் திடீரென்று உரத்த குரலிலே ''நீர் வீட்டுக்காரர் பிள்ளை சிதம்பரமா!'' என்றார்.

''ஆமாம்'' என்றான் மெல்ல புன்முறுவல் செய்துகொண்டே.

மகிழ்ச்சியோடு சிரித்த அவர்கள் உதடுகள் மறுபடியும் கூடாமலே 'டக்'கென்று மந்திர வித்தை போல் இருவரும் பதுமையாகிவிட்டனர். அந்த பெரியவரின் கண்களிலே இன்ப நீர் துளித்தது.

'' என்ன ஆச்சரியம் !''

அவர்களிருவர் கண்களும் குரல் வந்த திக்கை நோக்கின. மா. கி. தன் கண்கள் வியப்பைக் கக்க சிதம்பரத்தைப் பார்த்தும் பெரியவரைப் பார்த்தும் முறுவலித்தார். சிதம்பரம் அவரை உள்ளே அழைத்து அமரச் செய்தான். இந்த வேடிக்கையை ஏற்கனவே எதிர்பார்த்தவள் போல சிதம்ப

ரத்தின் மனைவி நின்று கொண்டிருந்தாள். மல்லிகா ஒன்றும் புரியாமல் நின்ருள்,

எழுத்தாளர் மா. கி. அவர்களும் சீர்காழி பெரியவரும் ஒருவரையொருவர் குசலம் விசாரித்துக் கொண்டனர். தாங்கள் எதிர்பாராத சந்திப்பை எண்ணி வியந்து கொண்டிருந்தனர். இறுதியில் இருவரும் சிதம்பரத்தின் முகத்தைப் பார்த்து தங்களது வியப்பை விளக்குமாறு தங்கள் புன்சிரிப்பினுலேயே வேண்டினர். சிதம்பரம் ஒரு நெடுமூச்சு விட்டு ஒரு பெரிய புதிரை அவர்கள் முன் விசினுன்.

அந்த கிழவரைப் பார்த்து "உங்கள் குழந்தை உயிரோடு இருக்கிறது" என்று கூறினுன்.

"என்ன ?" என்று அவர்கள் இருவரும் எழுப்பிய குரல் அந்த அறை முழுவதும் எதிரொலி செய்தது.

சிதம்பரம் அவர்கள் இருவரையும் கையமர்த்தி "உட்கார்ந்து கொள்ளுங்கள். சொல்லுகிறேன்" என்று மெல்ல ஆரம்பித்தான்.

"இப்போது குழந்தை எங்கே இருக்கிறது ?" என்று கூச்சல் போட்டார் பெரியவர்.

"அவசரப்படாதீர்கள் சொல்கிறேன்" என மீண்டும் தொடர்ந்தான் சிதம்பரம்.

"நீங்கள் சண்டையிட்ட மறு நாள் உங்களைக் காணுமல் உங்கள் மனைவி மிகவும் வருந்தினுள். நாங்கள் ஆறுதல் கூறினேம். பின்பு ஒரு வாரம் கழித்து அவள் தன் சொந்த ஊர் போவதாகக் கூறி புறப்பட்டுவிட்டாள். நானும் அம்மாவும் வற்புறுத்தி வேண்டியதின் பேரில் உங்கள் குழந்தையை எங்களிடம் விட்டு சில நாள் பொறுத்து மறுபடியும் வருவதாகச் சொல்லிச் சென்ருள். ஆனுல் திரும்பி வரவேயில்லை. அதற்குப் பிறகு ஒரு கடிதம், தான் தற்கொலை செய்து கொண்டதாகவும் குழந்தையை நாங்களே வளர்த்து வாழவைக்க வேண்டும் என்றும், அவள் தந்தையிடமோ, மற்ற வேறெந்த உறவினரிடமோ காட்டக் கூடாதென ஆணையிட்டு குறிப்பிட்டிருந்தது. நாங்களும் அதன்படியே இருந்துவிட்டோம். அந்த வீட்டை விற்றுவிட்டு இந்த வீட்டிற்கு வந்துவிட்டோம். அந்த வீட்டை வாங்கியவர் அதை இடித்து வேறு மாதிரி கட்டிக் கொண்டார்.

"இப்பொழுது அந்தக் குழந்தை எங்கே இருக்கிறது ?" என்று தடுமாற்றத்தோடு கேட்டார் பெரியவர். அவருடைய கண்களில் நீர் தேங்கி வழிந்தது. சிதம்பரத்தின் முகத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

சிதம்பரம் பதில் கூருமல் "இதோ வருகிறேன்" என்று சொல்லியபடியே சமையலறைக்குச் சென்று மனைவியைக் கூப்பிட்டான். அவனது மனைவி மல்லிகாவுடன் ஏதோ ஆழ்ந்து பேசிக் கொண்டிருந்தான். பின்பு மல்லிகாவை தலையசைத்துக் கூப்பிட்டான். அவளும் சிதம்பரத்தைப் பின்பற்றி விருந்தினர் இருக்கும் அறைக்கு வந்தாள். அந்தப் பெரியவரைப் பார்த்து "உங்கள் குழந்தை இதுதான்" எனக் கூறி மல்லிகாவை முன் நிறுத்தினுன் சிதம்பரம்.

அந்த பெரியவர் – சீர்காழி விருந்தாளி – பிடில் வித்வான் – ராமகிருஷ்ணன்—மல்லிகாவின் தந்தை – "இவளா" என்று அலறினுர்.

"ஆமாம்" என மெல்ல வாயசைத்தான் சிதம்பரம்.

தன் எதிரே பருவத் திரையில் வரைந்த எழிலோவியமாய் நிற்கும் மல்லிகாவை உற்றுப் பார்த்தார். "இப்படி வாம்மா" என்று நாக்குழற அழைத்தார் பெரியவர் தன் மகளை.

"இவர்தான் அம்மா உன் அப்பா. போ" என்ருன் சிதம்பரம். மல்லிகா மெல்ல அப்

பெரியவரை நோக்கி நகர்ந்தாள். அவளை அவர் மார்போடு அணைத்துக் கொண்டார்.

இன்பமோனத்தில்—பாசத்தின் நுனிச் சிகரத்தில் — அனைவரும் லயித்து நின்றனர்.

பின்பு ஒருவாறு அமைதி சிறுகச் சிறுகச் கலைந்து கலகலப்புடன் விருந்து நடைபெற்றது. மா. கி, அவர்கள் உதவியால் அவர் அறியாமலேயே பாசத்திற்கு முழு வெற்றி யளித்த சிதம்பரத்தை விருந்தினர் நினைத்து நினைத்துப் பாராட்டினர். முடிவில் ராமகிருஷ்ணன் சிதம்பரத்தை நோக்கி ''நீங்கள் உங்கள் தங்கையைக் கைவிட வேண்டாம். என் மகளை என் இதயத்திலே கண்டு விட்டேன். அடிக்கடி புறக்கண் விரும்பினால் வந்து செல்வேன். என் மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்றுங்கள்'' என்று உருக்கமாகக் கூறினர்.

மாலை புறத்தே இருள் சூழும் நேரம். மல்லிகா தன் கையால் வளையல்கள் குலுங்க சிறு அகலேந்தி அணி அணியாக வைத்திருந்த அகல்களை ஏற்றும் அழகை கண்டு ரசித்துக் கொண்டிருந்தார் பெரியவர்.

சிதம்பரமும் அவன் மனைவியும் உள்ளே வாசலில் இருந்தபடியே மகிழ்ந்து கொண்டிருந்தனர். தன் கையிலிருந்த இதழிலே ''பாசத்தின் வெற்றி'' என்ற தலைப்பைக் கொண்ட அந்த சிறு கதையை மெல்ல புரட்டினன் சிதம்பரம்.

அருகேயிருந்த ஆலய மணி தன் நாக்கசைத்து வாழ்த்தொலி பரப்புவதைப் போல் மெல்ல ஆடியது.

கிளி மார்க்கு
வாசனை பாக்குத்தூள்

புஷ்பம் & கோ,
13, முத்தியாலு செட்டி வீதி.
புரசைவாக்கம், சென்னை.

கல்யாண விசேஷங்களுக்கு வேண்டிய அவசியமான சாமான்

கல்யாண வைபவங்களுக்கு, பந்தல், அலங்காரம், கச்சேரி, விருந்து முதலியவைகளுக்கு ஆடம்பரமாக செலவு செய்கிறீர்கள். இவ்வளவு செலவில் காலணுவுக்கு இரு பொட்டலங்கள் தரும் மலிவான பாக்குத்தூளை ஏன் வாங்கவேண்டும். தங்களுடைய விருந்தாளிகள் உண்ட பின்பு அவர்களுக்கு விருந்தின் திருப்தியும் ஆனந்தமும் அளிப்பது வெற்றிலை **பாக்கல்லவா?** இந்த திருப்தியளிக்க வல்லது எமது **கிளி மார்க்கு பாக்கு தூள்** ஒன்றே. இந்த **கிளி** மார்க்கையே ஒவ்வொரு சில்லரை கடையிலும் கேட்டு வாங்கி திருப்தியடையுங்கள்.

புஷ்பம் & கோ.,
மதருஸ்-7.

பிராஞ்சு:
நெ. 1, லஸ் கார்னர், மதராஸ்-4.

நீரிழிவு

ஏழு நாட்களில்

குணமாகும்

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் **நீரிழிவு (DIABETES)** என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள் சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். அதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்கு பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் **இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.**

50 வில்லைகள் கொண்ட
புட்டி 1-க்கு ரூ. 6-12-0

[பாக்கிங் தபால் செலவும் இனாம்]

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (U. M.)
தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா.

வீட்டு சினிமா புரொஜெக்டர்

டார்ச் மற்றும் மின்சாரம் (ஏஸி அல்லது டிஸி) இவ்விரண்டிலும் இயங்கும் இந்த (35 எம். எம்) போர்டபிள் புரொஜெக்டர், வீட்டிலேயே உங்களுக்கு நிஜ சினிமாவின் இன்பத்தை அனுபவிக்கச் செய்கிறது. முழு அளவில் படத்தின் சைஸ் (4' x 3') மற்றும் திரையில் கலர்களும் நடிப்பும் தத்ரூபமாக ஓடுவதைக் காணலாம். திரையில் ஸ்லைடுகளையும் காண்பிக்கலாம். விலை ரூ. 12-8-0. வி. பி. சார்ஜ்கள் ரூ. 2-8-0. அதிகப்படி பிலிம்கள் கஜம் ஒன்றுக்கு அணா 8.

உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நல்ல வழி

அமெரிக்கன் மாடல் பிஸ்டல். லைசென்ஸ் அவசியமில்லை. டிராமா, சர்க்கஸ், பணத்தைக் காப்பாற்றிக் கொள்ள இதற்கு மிஞ்சிய சிநேகிதன் இல்லை. சுட்டபொழுது நிஜமான பிஸ்டல் மாதிரி பயங்காமான சப்தம் உண்டாகி நெருப்பு ரவைகள் வெளிவரும். விலை ரூ. 8-8-0; போஸ்டேஜ் ரூ. 1-8-0 தனி. தோல்பெட்டி ரூ. 2-8. பிஸ்டலுடன் 25 குண்டுகள் இலவசம். தனியாக தோட்டாக்கள் வேண்டுமானால் 1 டஜன் ரூ. 1-8.

LUCKY Co., (U. M.)
KATRA, ALIGARH U. P. (India).

உமா
சந்தா விபரம்

வருட சந்தா

இந்தியா, இலங்கை ரூ. 3

வெளி நாடுகள் ரூ. 4

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

★

உமா
4/32, தாதா முத்தியப்பன் தெரு
சென்னை-1.

தோல்வி?

கடிகாரம் மணியடிக்கத் தொடங்கியது. நிமிர்ந்து பார்த்தேன். மணி ஏழு. சரியாக இன்னும் ஒன்றரை மணி நேரம் இருக்கிறது. அப்புறம் இங்கே லலிதா விட்டிற்கும் வாசலுக்குமாக நடமாடிக் கலகலப்பை உண்டாக்குவாள். அம்மாவுக்கும் தலை கால் புரியாது! இப்பொழுதே அவள் கொல்லைப் பக்கத்தில் உள்ள பக்கத்து வீட்டு அம்மாவிடம் ஒரு வருடத்திற்குப் பிறகு புக்ககத்திலிருந்து பிறந்தகம் வர இருக்கும் பெண்ணின் செய்தியை கூச்சல் போட்டுச் சொல்லி மகிழ்ந்துக் கொண்டிருந்தாள்.

என் மனமோ குழம்பித் தவித்துக் கொண்டிருந்தது.

வீட்டுக்கு ஒரு பெண்—செல்லத் தங்கை-கலியாணம் ஆன உடனே கணவனின் கரத்தைப் பற்றிக் கொண்டு பம்பாய் சென்றவள் இரண்டு வருடங்களுக்குப் பிறகு வீடு திரும்புகிறுள் என்ருல் அது ஒரு தமையனுக்கு எவ்வளவு பூரிப்புத் தரும் செய்தி! ஆனுல் என் மனம் திகைத்துத் திடுக்குறத்தான் செய்தது.

மணமாவதற்கு முன் நடந்த அந்தச் சம்பவம் எனக்கு நினைவுக்கு வந்தது.

''ராமநாதனை உனக்கு நிச்சயித்திருக்கிறோம்'' என்றேன் நான். அம்மாவும் அருகில் இருந்தாள்.

''முடியாது.... எனக்குக் கல்யாணம் வேண்டாம்'' என்று கைகளை ஆட்டிக்கொண்டு கூச்சல் போட்டாள் லலிதா. செல்வமாக வளர்க்கப்பட்டதால் எடுத்ததற் கெல்லாம் துடிப்பாகப் பேசும் வழக்கம் அவளுக்குப் படிந்து போயிருந்தது.

''ஏண்டி முடியாது...'' என்று கோபத்தோடு கேட்டாள் அம்மா. நான் அவள் கோபத்துக்கு செய்கையாலும் பேச்சாலும் தூபம் போட்டுக் கொண்டிருந்தேன்.

''அந்த முறட்டு கரிக்கட்டையை கலியாணம் செய்துக்கொள்ள நான் என்ன பித்துக் கொள்ளியா....?''

''அடி படுபாவி.... வயசு வந்த பெண் பேசற பேச்சா இது....! ம்....நான் உலகத்தில் என்னென்ன வேதனையைத் தாங்கிக்கணுமோ தெரியலே... பாவி மனுஷன் என்னை விட்டுவிட்டு சுகமா போயிட்டார்... அவர் இருந்திருந்தா இந்த மாதிரி அடாவடிப் பேச்சையெல்லாம் நான் கேட்க வேண்டியிருக்குமா....?''

காலம் சென்ற அப்பாவின் நினைவை லலிதாவின் துடுக்குப் பேச்சு கிளறிவிடவே அம்மா கண்களை புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு எழுந்துபோய் விட்டாள்.

லலிதா என்னைப் பார்த்து உறுமினுள்.

''எல்லாம் உன் வேலை என்று எனக்குத் தெரியும் தம்பி. அந்தப் பாச்சா எல்லாம் இங்கே பலிக்காது....''

''பலிக்குதா இல்லையா என்று பார்த்துத்தான் விடுவோமே. அந்த ராமநாதன் கழுத்திலேயே உன்னைக் கட்டி அனுப்பாவிட்டால் என் பெயரை மாற்றி வை.... ஆமாம்...'' என்று நான் இரைந்தேன்.

''உன் கெட்ட எண்ணத்தை நான் உடைத்துத் தள்ளாவிட்டால் என் பெயர் லலிதா அல்ல....'' என்று கழுத்தை ஒரு ஒடி ஒடித்து எதிர்ச் சவால் விட்டுவிட்டு ''தப். திப்'' என்று தரையை மிதித்துக் கொண்டு லலிதா போய்விட்டாள்,

என்ன காரணத்தாலோ சின்ன வயதிலிருந்தே எனக்கும் லலிதாவுக்கும் ஒத்துவருவதில்லை. சதா தகருறுதான். அவள் என்னை மதிப்பதே இல்லை. ''அண்ணு'' என்று கூப்பிடமாட்டாள். பெயரைச் சொல்லி அழைப்பாள். இல்லாவிட்டால் ''வாடா....போடா....'' என்று ஏக வசனத்தில் அழைப்பாள். வீடே தன் ஏகாதிபத்தியத்தின் கீழ் இருக்க வேண்டும் என்ற சர்வாதிகார மனப்பான்மை சிறிய வயதிலிருந்தே உண்டு. வயது வளர வளர அந்த மனப்பான்மையும் கூடவே வளர்ந்துக் கொண்டே இருந்தது. அம்மாவும் அப்பாவும் பல தடவை எனக்கு விரோதமாக அவள் பக்கம் பரிந்து பேசியது என் மனதில் குமுறும் பொருமைத் தீயில் நெய்யைவிட்டதுபோல இருக்கும்.

அப்பா உயிர்விடும்போது அவர் முன் நின்ற பயங்கரப் பிரச்னை எங்கள் இருவருக்குமிடையே உள்ள பொருத்தமற்ற போக்குத்தான். கடைசி நேரத்தில் என் கைகளைப் பிடித்துக் கொண்டு லலிதா என்ன இருந்தாலும் பெண் குழந்தை. நீ தான் விட்டுக்

மோகினி

கொடுத்துப் போக வேண்டும். என்று தான் என்னைக் கேட்டுக் கொண்டார். நானும் சம்மதமளித்தேன்.

ஆனால் அவர் இறந்த பிறகு வீட்டில் முன்பு இருந்ததைவிட லலிதா ஆதிக்கம் உயர்ந்து விடவே நானும் பழையபடியாகிவிட்டேன். சதா தகராறுதான். அவளைப் பழி வாங்க ஏதாவது வாய்ப்புக் கிடைக்கிறதா என்ற சிந்தனையிலேயே நான் காலத்தை ஒட்டினேன்.

லலிதா கலியாண வயதை அடைந்தாள். நானும் படிப்பை முடித்துக் கொண்டு வேலையில் அமர்ந்தேன். குடும்ப நிர்வாகம் என் கையிலிருந்தது. லலிதாவுக்கும் எனக்கு மிடையேயிருந்த தகராறுமட்டும் அப்படியேயிருந்தது. குடும்பத்தில் தலைவனாகி விட்ட பிறகுகூட அவள் என்னை மதிக்கவில்லையென்றால்...?

அவளுடைய திருமணப் பிரச்னையை அம்மா என் கவனத்தில் போட்டபோது லலிதாவைப் பழி வாங்க ஒரு அருமையான சந்தர்ப்பம் கிடைத்ததாக நான் தீர்மானித்துக் கொண்டேன்.

ராமநாதன் எங்களுக்கு உறவினன்தான். தோற்றத்தில் அழகாக இருக்கமாட்டான். முரடன். எடுத்ததற்கெல்லாம் கண்ட கண்ட இடங்களில் சண்டைக்கு நிற்பான். ஊரில் அவனுக்கு நல்ல பெயரே கிடையாது. எந்த வகையிலும் அவன் லலிதாவுக்குச் சிறிதும் ஏற்றவனே அல்ல; என்றாலும் அவனுக்கே லலிதாவை மணம் செய்வித்து அவள் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன்.

அம்மாவுக்குக் கூட இதில் அரைச் சம்மதம் தான். என்றாலும் செலவு செய்து கல்யாணம் செய்து வைப்பவன் நான். என் விஷயத்தில் அதிகம் குறுக்கிட அவள் விரும்பவில்லை.

லலிதா என்னென்னவோ கலாட்டாக்களெல்லாம் செய்து பார்த்தாள். ஒன்றும் நடக்கவில்லை. என் தீர்மானத்தில் உறுதியாக இருந்தேன்.

கடைசியில் ராமநாதனுக்கும் லலிதாவுக்கும் திருமணம் நடந்தே விட்டது.

திருமணத்திற்குப் பின் புக்ககம் போகப் புறப்பட்டபோது லலிதா என்னிடம் வந்தாள். நான் என் அறையில் தனியாகத்தான் இருந்தேன்.

''அண்ணா...'' என்றாள் தழதழத்த குரலில். அவள் வாழ்நாளில் இப்படி அழைத்தது அன்று தான்.

அவள் குரலில் தோய்ந்திருந்த வேதனை என்னைத் திடுக்கிடவைத்தது.

''நீ ஜெயித்து விட்டாய். உன் பரம விரோதியாகிய என்னைப் பழிவாங்கிவிட்டாய். என் வாழ்வு குட்டிச் சுவராகப் போவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இந்த நிகழ்ச்சி உனக்கு மகிழ்ச்சியை அளிக்குமாயின் அதுவே போதும்...'' என்று கூறிவிட்டு அவள் போய்விட்டாள்.

அந்த ஒரு சில வார்த்தைகள் என் இதயத்தைக் கூறு போட்டுத் துடிக்க வைத்துவிட்டன, ஒரு விநாடியில் நான் மனிதத் தன்மை பெற்றுவிட்டேன். லலிதாவுக்கு இழைத்த மகத்தான கொடுமை கோரஉருவத்துடன் என் கண்முன் நின்று நர்த்தனமாடுவது போல இருந்தது. நான் மனம் வைத்திருந்தால் லலிதா எவ்வளவோ நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டிருப்பாள். சிறந்த கணவனைப் பெற்றிருப்பாள். உடன் பிறந்த சகோதரனான நானே அவளைப் பிடித்து பாழுங் கிணற்றில் தள்ளி விட்டேன். இதை எண்ணி எண்ணி மனம் நொந்தேன்.

உள்ளூரிலிருந்தும் லலிதா எங்கள் வீட்டுப் பக்கம் அடி

யெடுத்து வைக்க மறுத்துவிட்டாள். எதிர்பாராதவிதமாக ராமநாதனுக்கு பம்பாயில் வேலை கிடைக்கவே தன் மனைவியுடன் அவன் பம்பாய் புறப்பட்டுப் போய்விட்டான். போகும்போது கூட லலிதா சொல்லிக் கொள்ள எங்கள் வீட்டுக்கு வரவில்லை. பம்பாய் சென்ற பிறகு ஒரு கடிதம்கூட எழுதவில்லை.

ஒரு வருடத்திற்குப் பிறகு கணவனும் தானும் வரப்போவதாக அம்மாவுக்கு லலிதா கடிதம் எழுதியிருந்தாள். கடிதத்தில் ''அண்ணாவுக்கு கலியாணமாகி விட்டதா?'' என்று மட்டும் ஒரு வரி எழுதியிருந்தாள்.

அம்மாவுக்குத் தலைகால் புரியவில்லை. மகளையும் மருமகனையும் வரவேற்க ஏகப்பட்ட ஆர்ப்பாட்டத்துடன் ஏற்பாடுகள் செய்வதில் மூழ்கி இருந்தாள். என் மனமோ குழம்பித் தவித்தது.

ராமநாதனுக்கும் லலிதாவுக்கு ஒத்து வந்திருக்காது. அவன் இவளை மிகவும் கொடுமை படுத்தியிருப்பான். லலிதா வாழ்க்கையில் வெறுப்படைந்து நடைப்பிணமாய் காலத்தை ஓட்டிக் கொண்டிருப்பாள். இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் எலும்புத் தோலுமாய் வதங்கிய உருவத்துடன் வந்து இறங்கப் போகிறாள். இந்தப் பரிதாப காட்சியை எந்தக் கண்களால் பார்ப்பது? எல்லாம் என் முட்டாள்தனத்தினால் வந்த வினைதானே. இப்படியெல்லாம் என் மனம் அலைபாய்ந்து குமுறியது.

''ஜலக் ..ஜலக்'' என்று ஓசையுடன் வாசலில் வண்டி ஒன்று வந்து நின்றது. ஆவலுடன் வேதனையும் கலக்க அவசர அவசரமாக ஜன்னல் வழியாக தெருவை நோக்கினேன்.

முதலில் வண்டியிலிருந்து லலிதா இறங்கினாள். என்ன ஆச்சரியம்: அவள் லலிதாதானா?.... சற்றுமுன் நான் கற்பனை செய்த உருவம் எங்கே, இவள் எங்கே?....

விலையுயர்ந்த சில்க் சேலை அணிந்திருந்தாள். உடலெங்கும் தங்க அணிகள். முகத்திலே பூரிப்பும், மலர்ச்சியும், தாண்டவமாடின.

வண்டியிலிருந்து அடுத்தாற்போல் ராமநாதன் இறங்கினான். ஆங்கில பாணியில் பிரமாதமாக அவன் உடுத்தியிருந்தான். வண்

டிக்காரன் பெட்டி படுக்கையைச் சுமந்து பின்னால் வர, ராமநாதன் ஒரு சிகரெட்டைப் புகைத்த வண்ணம் கம்பீர நடையுடன் ஏறுபோல் வீட்டுக்குள் பிரவேசித்தான்.

ஏதாவது கனவு காண்கிறேனா என்று எனக்குப் பிரமை தட்டிப் போய்விட்டது. திகைத்துப்போய் செயலற்று நின்றிருந்த என் முன் வந்து மகிழ்ச்சி ததும்பும் முகத்துடன் மண்டியிட்டு வணங்கி எழுந்து நின்றாள் லலிதா.

காலை டிபன் முடிந்த பிறகு ராமநாதன் என் அறையில் படுத்து சிரமபரிகாரம் செய்துக் கொண்டிருந்தான். லலிதா சமையலறையில் அம்மாவுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள். திடீரென நான் உள்ளே பிரவேசித்து அவள் முன்னால் உட்கார்ந்தேன்.

''அண்ணாவுக்கு இன்னும் கலியாண ஏற்பாடு ஒன்றும் செய்யவில்லையா அம்மா?'' என்று கேட்டாள் லலிதா.

''நான் சொன்னால் கேட்கிறானே! நீ தான் அவனுக்குப் புத்தி சொல்லி வழிக்கு கொண்டு வரணும்...'' என்றாள் அம்மா.

''கலியாணம் இருக்கட்டும் லலிதா.... உன் வாழ்க்கை எப்படி இருக்கிறது....! உன் விருப்பத்துக்கு மாறாக படுபாவி நான் பாழும் படுகுழியில்..'' என்று நான் பேச ஆரம்பித்தபோது லலிதா சட்டென்று எழுந்து என் வாயை பொத்தினாள். பிறகு ''எனக்கும் முதலில் உன் மீது கோபந்தான் வந்தது. ஆனால் இவர் அப்படி ஒன்றும் கெட்டவர் அல்ல அண்ணா. பம்பாய் போன முதல் மாதத்திலேயே புரிந்து கொண்டேன். என் மீது உயிரைத் தான் வைத்திருக்கிறார். ஆறு மாதத்திலே இவரது வேலை உயர்ந்துவிட்டது. இப்பொழுது வேலை செய்யும் கம்பெனியில் இவர்தான் மேனேஜர். ஐநூறு ரூபாய் சம்பளம்....!'' இந்த விபரத்தைக் கூறிவிட்டு ''அண்ணா நீ தான் தோல்வியடைந்துவிட்டாய் புரிகிறதா?....'' என்று குறும்புத்தனம் மிளிர சிரித்தாள் லலிதா.

''இந்த மாதிரி தோல்விகள் ஆயிரம் வந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயார் லலிதா'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினேன் நான். சென்ற ஒரு வருட காலமாக என் நெஞ்சில் அழுத்திக் கொண்டிருந்த பெரிய பாறை அப்பொழுது தான் தெரித்துச் சிதறி விழுந்தது.



மணம், குணம், தரம்
மூன்றிலும் சிறந்தது!

N.S.K. பாக்குத்தூள்

விவரங்களுக்கு:
N. S. K. டிரேடிங் கம்பெனி
மதராஸ்—1.



பொதுநலமும் சுயவாழ்வும் !

அன்புடைய தம்பி,

தம்பி, சென்ற ஒரு வருட காலமாக நான் உனக்குக் கூறிய அறிவுரைகளில் இந்தத் தடவை ஒரு பெரிய மாற்றம் செய்ய விரும்புகிறேன். அதுதான் நியாயமானதுங்கூட.

சென்றவருடத்தில் உன்னுடைய சுயவாழ்வில் நீ வெற்றி காணுவதற்கான வழி முறைகளைத் தான் நான் எடுத்துக் காட்டினேன். சமூக வாழ்வில் உன் அங்கம் என்ன என்பதைப் பற்றியோ, பொதுவாழ்வில் நீ எந்த வழியில் நடைபோட வேண்டும் என்றோ நான் குறிப்பிடவில்லை. வேண்டுமென்றேதான் நான் அப்படிக் கூறவில்லை. அதற்குக் காரணம் இருக்கிறது.

இன்று தமிழகத்தில் பொதுவாக ஒரு குழப்பம் பரவி நிற்கிறது. பலர் பொது வாழ்வுக்கும் சுய வாழ்வுக்கும் வித்தியாசம் தெரியாது திண்டாடுகின்றவர். அனேகர் பொது வாழ்வும் சுயவாழ்வும் ஒன்றுதான் என்று தவறாக எண்ணிவிடவும் தயங்குவதில்லை. இதனால் பெருந்தீங்கு விளைவதைக் கவனிப்பதில்லை.

சமூகம் என்பது தனி மனிதர்களின் கூட்டுறவால் இயங்கும் ஒரு அம்சம்தான். சமூக நிலையில் திடமும், திறனும் இருக்க வேண்டுமானால் தனி மனிதவாழ்வில் உயர்வு இருக்க வேண்டும். தனி மனிதர்கள் சக்தியற்றவர்களாய் குழப்பத்தின் இடையே இன்னல்களை எதிர்த்துப் போராடுபவர்களாக இருந்தால் சமூக அமைப்பிலும் குழப்பந்தான் விளையும்.

ஆகவே சமூக அமைப்பு—அதாவது பொதுவாழ்வு சிறப்பாக அமையவேண்டுமானால் தனிமனித வாழ்விலும் சிறப்பான சூழ்நிலை இருக்க வேண்டும்.

அரசியலில் ஈடுபட்டுள்ள அனேகர் சுய வாழ்வில் திருப்தியற்ற நிலையில் உள்ளவர்கள். வீட்டில் துயரமும் தொல்லையும் போட்டியிட்டு விரட்டும்போது அவர்கள் பொதுவாழ்வில்அடைக்கலம் புகுந்துக் கொள்கின்றனர்.

பொது மக்களுக்கு நன்மை செய்யவேண்டும், அவர்களுக்காக உழைக்க வேண்டும் என்ற நினைவு மனதில் பூரணமாக நிரம்பியிருந்தாலும் சுயவாழ்வின் கோளாறுகள் காரணமாக சுயநல மனப்பான்மையும், ஊழலும் அவர்கள் வாழ்வில் கலந்து விடுகிறது. அரசியல் வியாபார உலகமாகி விடுகிறது. நல்ல தலைவர்கள்கூட தகுதி குறைந்து விழுந்து விடுகின்றனர்.

இந்த காரணத்தால்தான் சுய வாழ்வில் உறுதியான நிலையை உண்டாக்கிக் கொண்டு நீ பொது வாழ்வில் ஈடுபடவேண்டும் என்று நான் கருதுகிறேன். அதனால்தான் பொது வாழ்வைப்பற்றிய கருத்துக்களை உனக்கு இதுவரை கூறவில்லை.

தம்பி, பொதுவாழ்வில் ஈடுபட்டு உழைக்க வேண்டும் என்ற ஆவல் உன் மனதில் நீண்ட நாட்களாகவே உண்டு என்பதை நான் உணர்வேன். உணர்ச்சி வேகத்தில் நீ அவசரப்பட்டு அரசியல் என்ற பெயரால் கட்சிக் குட்டைகளில் குதித்துவிடுவாயோ என்று நான் அஞ்சினேன். நல்ல வேளையாக அவ்விதம் நிகழவில்லை. என்னு

டைய ஆலோசனைகளையே கேட்டிருக்கிருய். இது போற்றத் தக்க மனுேபாவமே.

தம்பி, அரசியல் என்பது நமது நாட்டுக்குரிய தகுதி வாய்ந்த ஒரு நல்லரசு அமையப் பாடுபடும் வழியே தவிர வேறில்லை. அரசியலில் ஈடுபடுவதற்கு முன் நீ நமது மொழியைப்பற்றி சிந்திக்க வேண்டும், இனத்தைப் பற்றி யோசிக்க வேண்டும், நாட்டைப்பற்றி நினைக்க வேண்டும். இந்த மூன்றும் உயர்ந்து சிறந்து விளங்கிஞல் மனித இனமே கவலையன்றி வாழ்ந்துவிட முடியும். இந்த மூன்றிலும் அக்கரை கொள்ளும் மனிதன் - அந்த வழியில் தன்னலம் கருதாது உழைக்க முன்வருபவன் தான் உண்மையான அரசியல் வாதி என்று மதிக்கலாம். மேற்கண்ட லட்சியத்துக்காக உழைக்கும் ஸ்தாபனம்தான் நாட்டின் நலங் கருதும் ஸ்தாபனமாகும்.

நாட்டை மறந்து, மொழியை மறந்து, தன் இனத்தை மறந்து வேறு என்ன கூச்சல் போட்டாலும், என்ன செயலைச் செய்தாலும் அதெல்லாம் வெறும் ஏமாற்று வேலைதான். உண்மையான அரசியலல்ல; உண்மையான அரசியல் வாதியின் செயலல்ல.

ஆகவே அரசியலில் ஈடுபட்டு உழைக்க முயற்சிக்கும் உனக்கு முதலில் தமிழ் மொழியில் பற்று இருக்க வேண்டும்; தமிழ் இனத்தில் அக்கரை இருக்க வேண்டும்; தமிழ் நாட்டின் மீது பக்தி இருக்க வேண்டும்; இதுதான் தமிழ்நாட்டு அரசியலில் முதற்பாடம் என்று கூறலாம்.

நீ கடைப்பிடிக்க வேண்டிய அரசியல் கொள்கைகளைத் தெளிவாக வரையறுத்துக் கொள்ளலாம். தமிழ் மொழி அரசு மொழியாகத் திகழ வேண்டும், அதன் மூலம் தமிழகத்தின் சாமானிய மக்களின் கைகளிலே அரசியல் வரவேண்டும், அப்படி அரசியலில் பாமர மக்களின் மத்தியில் நடமாடும் போது தான் தமிழினம் வாழ்வும் வளப்பமும் பெற்றுத் திகழ முடியும். இந்த லட்சியத்துக்காக உழைப்பது ஒன்றுதான் தமிழ் மகனுகப் பிறந்தவனின் கடமையாக இருக்க முடியும்.

தம்பி, இங்கேதான் சில சிக்கல்கள் தோன்றும். சிக்கல் என்று கூறிவிட முடியாது. புரியாத்தனம் என்று கூறலாம்! அவ்வளவுதான்.

தமிழகம் தமிழில் ஆட்சி புரிய வேண்டும் என்று கூறும்போது, தமிழ்நாடு தன் நிர்வாகத்தைத் தானே நடத்த வேண்டும் என்று சொல்லும்போது, ஏதோ பயங்கரச் செயலில் ஈடுபடுவதாக சிலர் எண்ணுகின்றனர். தமிழ் நாட்டை மத்திய அரசாங்கத்திலிருந்து துண்டித்துவிட்டால் வாழ முடியுமா? என்றெல்லாம் வீணுகக் குழப்பிக் கொள்கின்றனர். இது அர்த்தமற்ற குழப்பந்தான். விஷயம் புரியாத்தனந்தான். அதனுல்தான் இதை ஒரு சிக்கல் என்று நான் குறிப்பிடவில்லை.

இந்தத் தெளிவான விஷயம் பல முனைகளில் சிக்கலாக்கப்பட்டதற்கு வெளியார் யாரும் காரணமல்ல. நம்மிடையே வாழும் நம்மவரே மூல காரணம் எனலாம். அரசியலை சுயநல நோக்கத்துக்காக பயன்படுத்த விரும்பும் சிலர்; அர்த்தமின்றி கிளரிவிட்ட தப்பான ஆராய்ச்சிகள்தான் தெளிவான தமிழக லட்சியத்தை கலக்கி விட்டன. தமிழைப் பற்றி, தமிழ் நாட்டைப் பற்றி நினைப்பதே தேசத்துரோகம் என்பதுபோன்ற தவருன மனுேபாவம் இங்கே அதிகமாயின. இவற்றைப் பற்றித் தெளிவாக புரிந்து கொள்வது நல்லது.

தம்பி, அரசியலில் அடியெடுத்து வைப்பதற்கு முன்னுல், இவற்றை நீயும் உணர்ந்து கொள்வது அவசியம்தான். கடிதம் நீண்டு விட்டதால் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து இது சம்பந்தமான விபரங்களை உனக்குத் தருகிறேன்.

உன் அன்பான தமையன்.

பட உலகம்

[ஜி. எஸ். மணியன்]

சொர்க்கவாசல் — விமர்சனம்:

கலையன்பர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பரிமளா பிக்சர்ஸாரின் "சொர்க்க வாசல்" மே மாதம் 28-ந் தேதி முதல் சென்னையிலும் தமிழ் நாடெங்கும் திரையிடப் பட்டுவிட்டது. அறிஞர் அண்ணாவின் கனல் தெறிக்கும் வசனங்கள் இப்படத்திற்கு சிகரம் வைத்தாற்போல் அமைந்திருக்கின்றன. சிந்தனையைத் தூண்டிவிடும் சிறந்த பாடல்கள், கலையுலகிற்கே ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் கச்சிதமான நடிப்பு, நம் நாட்டு பண்டைய கால நாகரீகத்தை எடுத்துணர்த்தும் நடனங்கள் இன்னும் இது போன்ற பல உயர்ந்த அம்சங்கள் இந்தச் சித்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றன. கே. ஆர். ராமசாமி இப்படத்தில் அப்பழுக்கின்றி நடித்திருக்கிறார். பத்மினியின் இயற்கையான நடிப்பு நம்மைப் பரவசமடையச் செய்கிறது. அஞ்சலி வழக்கம் போல தனது உயர்ந்த நடிப்பின் மூலம் ரஸிகர்களின் ஆதரவைப் பெறுகிறார். ஒளிப்பதிவு இப்படத்தில் குறிப்பிட வேண்டிய அம்சமாகும். அதிலும் முக்யமாக பத்மினி வரும் கட்டங்களில் இந்த அம்சம் சிறந்து விளங்குகிறது. ஒலிப் பதிவு சுத்தமாக கணீரென்று இருக்கிறது. டைரக்ஷனை மிகவும் திறமையுடன் செய்திருக்கிறார் காசிலிங்கம். ஜனங்களின் அமோக ஆதரவையும் ஆரவாரத்தையும் காணும் போது இப்படம் பரிமளா பிக்சர் ஸாருக்கு ஒரு மாபெரும் வெற்றியென்பதில் சந்தேகமில்லை.

நல்ல காலம்

சூழ்ச்சியே உருவாகக் கொண்ட ஒரு சூதாடி ஒருவனால் ஒரு ஜமீன் குடும்பம் சீர்குலைந்த வரலாறு தான் **நல்லகாலம்** கதை. தான் நிச்சயித்த பெண்ணை மணக்காமல் வேறொருத்தியை தாரமாகக் கொண்ட தனது தாயற்ற குழந்தை ரகுவை வெளியே துரத்துகிறார் ஜமீந்தார். பல இன்னல்களுக்கிடையே பரதேசிபோல் வாழ்கின்றனர் ரகு—மீனா தம்பதிகள். ஜமீனையே ஒழிக்கத் திட்டம் போட்டு ஜமீந்தார் சகோதரி மகன் மூர்த்தி தனது மூடுமந்திரத்தின் பலத்தால் ஜமீந்தாரை ஒரு கைப் பொம்மையாக்கி திவானையும் ஜமீனை விட்டு ஓட்டிவிடுகிறான். இதற்கு உடந்தையாக இருந்த குமாஸ்தா கோபாலின் மனைவியையும் பெண்டாடுகிறான் மூர்த்தி. இதற்கிடையே மீனாவுக்கு ஒரு மகவு பிறந்து, அதற்குப் பாலூட்டுவதற்குக்கூட கதியில்லாமல் பரதவிக்கிறான் ரகு. ஆனால் முடிவில் அவனுக்கு நல்லகாலம் பிறக்கத்தான் செய்கிறது. கதை விறுவிறுப்பாக இருக்கிறது. வசனங்கள் நல்ல தமிழில் சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்து எழுதப்பட்டிருக்கின்றன. பாடல்களெல்லாம் இனிமையாகவும் அர்த்த புஷ்டியுடனுமிருக்கின்றன. பின்னணி சங்கீதம் வெகுஜோர்.

ரகுவாக எம். கே. ராதா நடித்திருக்கிறார். சோகமே உருக்கொண்ட ஒரு கடினமான பாத்திரத்தை மிக திறம்பட நடித்து தான் ஒரு குணசித்திர நடிகர் என்ற புகழை இப்படத்திலும் நிலை நாட்டிக் கொள்ளுகிறார். மீனாவாக நடிக்கும் பண்டரிபாய், மூர்த்தி வேடத்தில் தோன்றும் பாலையா முதலியோர் அந்தந்த பாத்திரங்களுக்காகவே பிறந்தவர்களோ வென நினைக்கும்படி, அவ்வளவு இயற்கையாக நடித்திருக்கின்றனர். எம். எல். பதி ஜமீந்தாராக வந்து வழக்கம் போல் தனது இயற்கையான நடிப்பால் ஜனங்களின் ஆதரவைப் பெறுகிறார். முக்யமாக ராமாயண நாடகத்தில் நடித்த குழந்தைகளைப் பாராட்டாமலிருக்க முடியாது.

ஒளிப் பதிவும், ஒலிப் பதிவும் பரவாயில்லை. டைரக்ஷன் பல இடங்களில் கலை நுட்பம் நிறைந்து

மிளிர்கிறது. சென்ற மாதம் 21-ந் தேதியிலிருந்து சென்னையிலும், தமிழ் நாடெங்கும் வெற்றிகரமாக நடந்து வருகிறது. இது சுப்பு & கம்பெனி வெளியீடு.

மாங்கல்யம்

எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் "மாங்கல்யம்" ஜூன் 11-ந் தேதி தமிழ் நாடெங்கும் திரையிடப்படவிருக்கிறது. "நால்வர்" நாகராஜன் வசனம் தீட்டியிருக்கும் இப்படத்தில் நாகராஜன், பி. எஸ். சரோஜா, எம். என். நம்பியார். எஸ். ஏ. நடராஜன் மற்றும் பல நட்சத்திர நடிகர்கள் நடித்திருக்கின்றனர். சங்கீத டைரக்ஷன்: கே. வி. மஹாதேவன். சென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாரான இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பை கே. சோமு ஏற்று இருக்கிறார்.

நண்பன்

இன்னொரு ஜூன் மாத ரிலீஸ் எம். டி. வி. ப்ரொடக்ஷன்ஸாரின் "நண்பன்" மனோஹர், பாலையா, பி. கே. சரஸ்வதி மற்றும் பல நட்சத்திர நடிகர்கள் நடிக்கும் இப்படத்தின் சங்கீத டைரக்ஷனை நிர்வகிக்கும் பொறுப்பை ஜி. ராமனாதன் ஏற்றிருக்கிறார். டைரக்ஷன் பி. எஸ். ஸ்ரீனிவாஸ ராவ்.

புது யுகம்

கலப்புமண பிரச்னையைக் கொண்ட கதை, செவிக்கினிய சங்கீதம், உயர்ந்த நடிப்பு, உன்னத டைரக்ஷன், இவையனைத்தையும் எதிர்பார்க்கலாம் நீங்கள் சாயி கானாம்ருதா பிக்சர்ஸாரின் "புது யுகம்" படத்தில். கோபுசுந்தர் டைரக்ட் செய்த இப்படத்தில் கிருஷ்ண குமாரி, நரஸிம்ம பாரதி, எஸ். வி. சுப்பையா, திரௌபதி,

பிமலா, எஸ். ஏ. நடராஜன் முதலியோர் கனகச்சிதமாக நடித்திருக்கிறார்களாம். சங்கீத டைரக்ஷனை ஜி. ராமனுதன் ஏற்றிருக்கிறார் என்றால் சொல்லவா வேண்டும் இனிமையான பாடல்களிருக்குமென்று? தமிழ்நாடெங்கும் ஜூன் 4-ந் தேதி முதல் திரையிடப்படவிருக்கிறது.

பாலசந்தர், வைஜயந்தி, அஞ்சலி, ஜெமினி கணேஷ் ஏவி. எம். 'பெண்'ணில்

நல்லவன்

ஸன்ரைஸ் பிக்சர்ஸாரின் ''நல்லவன்'' வெகு துரிதமாக எம். திருவேங்கடம் டைரக்ஷனில் ஸ்டார் கம்பைன்ஸில் வளர்ந்து வருகிறுன் மனோஹர், எம். என். நம்பியார், பி. கே. சரஸ்வதி, செருகளத்தூர் சாமா முதலியோர் நடிக்கும் இப்படத்தின் சங்கீத டைரக்ஷனை எம். எஸ். ஞானமணி ஏற்றிருக்கிறார், அநேகமாக ஜூலை மாத வெளியீடாக இருக்கலாம்.

ஐயப்பன்

தென்னிந்திய நாடக உலகில் சீர்திருத்தக் கருத்துக்கள் என்ற பெயரால், அர்த்தமற்ற ஆபாசக் கதைகள் நடிக்கப்பட்டுவரும் இந்த நாளில், நவாப் ராஜமாணிக்கத்தின் ''ஐயப்பன்'' பேரும், பொருளும் பெற்று அமோகமாக நடைபெறுகிறது என்றால், தமிழ் நாட்டின் தனிப்பெரும் பண்பான பக்தியின் நிதர்சன உண்மையேயாகும்.

விநாயகப் பெருமானின் நடனத்துடன் துவங்கும் ஐயப்பன் நாடகம், இறுதி வரையில் ரஸிகர்கள் அனைவரையும் 'ஆஹா' போட வைத்து, பிரமிப்பிலாழ்த்தும் வண்ணம் கணத்துக்குக் கணம் மாறும் காக்ஷி அமைப்பும், சின்னஞ் சிறுவர்களின் உயரிய நடிப்பும் கொண்டுள்ளது.

ஐயப்பன் நாடகம் மூலம் மக்கள் ரஸனையை எடுத்துக் காட்டிய நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் அவர்களுக்கு தமிழ்நாடு மிகவும் கடமைப்பட்டுள்ளது.

இதுவரையில் எவராலும் நடித்திராத, நடிக்கக் கூடாத, ஏன், நடிக்க முடியாத, ஒரு நாடகத்தை, பலவித கட்டுப்பாடுகளுக் குட்பட்டு, கடும் விரதங்களை அனுஷ்டித்தவர்கள் மட்டுமே நடிக்கக்கூடிய ஒரு கலைப் பொக்கிஷத்தை இவ்வளவு சுலபத்தில் காணும் சந்தர்ப்பத்தை நமக்களிக்கும் ''தி ஸ்டேஜ்'' நிர்வாகிகளான ஸ்ரீ என். எஸ். ராமபத்திரன், டி. கோதண்டராமன் அவர்களுக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

''தி ஸ்டேஜ்'' மேன் மேலும் இம்மாதிரி பக்திப் பரவசமான நாடகங்கள் பலவற்றை நமக்கு அளித்து ஆஸ்திகம் பரவ வழி செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இன்பக் கனவு

எம். ஜி. ஆர். நாடக மன்றம் என்ற பெயரில் எம். ஜி. ராமச்சந்திரன் ஒரு நாடகக் கம்பெனியை நடத்திவருகிருர். அந்தக் கம்பெனியின் நாடகம்தான் ''இன்பக் கனவு''.

இந்தக் கதை சமீபகாலமாக ரசிகர்கள் பார்த்துவரும் பாடாவதிக் கதை (படம்) களிலிருந்து மாறுபட்டுப் புதுமைப் பாதையில் செல்கிறது. முத்துக் கூத்தனின் ஹாஸ்ய நடிப்பு பிரமாதமாயிருக்கிறது. ஒரு சிறந்த ஹாஸ்ய நடிகர் என்பதை இவர் நிரூபிக்கிருர். கொஞ்சம் கைகளை அதிகம் ஆட்டுகிருர் என்பதுதான் இவரிடமுள்ள ஒரே ஒரு குறை. சிவகாமியின் சகோதரனை பின், தானே அவளை மணப்பதாகக் கூறி, பின்பு கண்ணனுக்கு மண முடிப்பதாகக் கூறும் போதும், கடைசியில் பைத்தியம் பிடித்து அலைந்து விமலாவைத் துடிக்க வைக்கும்போதும் எம். ஜி. ராமச்சந்திரன் நம்மை உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி விடுகிருர். அந்தக் கதாபாத்திரமாக மாறி நம் இதயத்தைத் தொட்டு விடுகிருர் எம். ஜி. ஆர்.

சிவகாமியாக வரும் ஜி. சகுந்தலா, சகோதரி என்று ராஜனிடம் துடிதுடித்துக் கதறும் போதும், கண்ணன் நினைவாகத் தவிக்கும் போதும் ஒரு திறமைமிக்க நடிகை என்பதை நிரூபித்திருக்கிருர். கந்தசாமி முதலியாராக வரும் எம். ஜி. சக்ரபாணி அப்பழுக்கு சொல்ல முடியாதபடி சுபாவிகமாய் நடிக்கிருர்.

எம். ஜி. ராமச்சந்திரன் இந்த நாடகத்தின் மூலம் ரஸிகர்களின் பாராட்டுதல்களைப் பெறுகிருர், இதைப் போன்ற கருத்து மிகுந்த கதைகள் படமாக்கப்பட வேண்டும்.

— கலாநேசன்

இருளை வென்ற ஒளி

ஒளியின் அவசியத்தை உணராதவர்கள் உலகிலே இருக்க முடியாது. கல்லோடு கல்லுரசி ஒளி

'இன்பக்கன'வில் எம். ஜி. சக்ரபாணி

உண்டாக்கிய கால முதல் காலந்தொட்டு, ஸ்விட்சை போட்டதும், கண்ணைப் பறிக்கும் காந்தியுடன் எரியும் மின்சார விளக்கு வழக்கத்தில் இருக்கும் இந்நாள் வரை—ஒளி—மனித வாழ்வின் ஜீவ ஒளியாக இருந்து வருகிறது. நடுத்தர குடும்பத்தாரின் வீட்டுக்கு ஒளிதரும் விளக்கின் எண்ணெய், மண்ணெண்ணெய். இந்த எண்ணையின் உற்பத்தியாளர்களான **பர்மா ஷெல் கம்பெனியாரின்** சாதனைகளை விளக்கும்—'இருளை வென்ற ஒளி' எண்ணெய்த் துறையின் உற்பத்தியையும், முன்னேற்றத்தையும், வர்ணச் செய்திப் படமாக எடுத்துச் சொல்கிறது.

இருளரக்கனுக்கும், ஒளித் தேவனுக்கும் நடைபெறும் சண்டைகள், ஒளி உண்டான கதை, இவைகளை, நடனங்களின் மூலம், பின்னணி கீதங்களின் வாயிலாக அழகுபட விளக்கியுள்ளனர்.

பர்மா ஷெல் கம்பெனியாரின் இந்தச் செய்திப் படம், 'உஜாலா' எனும் தலைப்பில் பால்ஜில்ஸால் டைரக்ட் செய்யப்பட்டதாகும். புதுவித தயாரிப்பான நான்கு வகை மண்ணெண்ணைகளை, அறிமுகப்படுத்தும் 'இருளை வென்ற ஒளி' எனும் செய்திப் படம், ஒளியின் அவசியத்தை அழகுபட எடுத்துச் சொல்லுகின்றது.



Retail Branches :

285, China Bazar Road, G. T.

71, Pondy Bazar T. Nagar.

சென்னையில்
சிறந்து விளங்கும்

நாட்டுக்கு வேண்டியது செல்வம்
வீட்டுக்கு வேண்டியது

தயாரிப்பாளர் : செல்வம் இண்டஸ்டிரியல்ஸ், சென்னை-21.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
பிராஞ்ச்: 134, SERANGOON ROAD, சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82. MAIN ST., கொழும்பு-11.

ஆசிரியர், அச்சிட்டு வெளியிடுபவர் : ஜி. உமாபதி எம். சி., உமா பிரிண்டர்ஸ், 4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1: நிர்வாக ஆசிரியர் : ர. சண்முகம்.